
www.tamilarangam.net

தேடல்-9

# தேடல்



ÉPICERIE GROCERY
100 - Γ

தமிழர் வகைதுறைவள நிலையம்.(கனடாவெளியீடு)

www.tamilarangam.net


# தேடகம்

இரவல் கொடுக்கும் பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது
அங்கத்தினராக இணைந்து சேவையை பெற்றுக்கொள்ளவும்

*திறக்கப்படும் நேரம் வார நாட்கள் 5.30- 10.30வரை சனி, ஞாயிறு 1230-10.30*

தேடல் தொடர்புகளுக்கு

**566,PARLIAMENT ST**
**TORONTO,ONT**
**M4X 4P8**
**CANADA**

*தொலைபேசி 416-929 7612*


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

# வங்குரோத்து அரசியல்

இலங்கை ஜனாதிபதி பிரேமதாச மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று இலங்கை பாரளு மன்றத்தில் சமர்பிககப்படபோது, எதிர்கட்சி பாரளுமன்ற உறுப்பினர் களுடன் இணைந்து, அரசாங்க கட்சி உறுப்பினர்களும் கையெழுத்திட்ட இந்தப்பிரேரணையையடுத்து இலங் கையில் அரசியல் பரபரப்பு ஏற்பட்டது. தமது பதவிக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தினை தடுக்க ஜனாதிபதி சகல நடவடிக்கை களிலும் தீவிரமாக இறங்கி வெற்றி பெற்றிருக்கிறார்.

பிரேரணை சபாநாயகரிடம் கை யளிக்க ப்பட்டதை அறிந்ததும் ஒரு மாத காலத்திற்கு பாரளுமன்றத்தை ஜனாதிபதி ஒத்தி வைத்தார். ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டாம் என ஜனாதிபதிக்கு ஆதரவான பா.உக்கள் சபாநாயகருக்கு ஒரு ஜனநாயக விரோதமான வேண்டுதல் கடிதத்தை சமர்ப்பித்தனர். பிரேரணை காலவதியாகி விட்டது என விவாத த்திற்கு எடுத்துக் கொள்ள முடியாது என சட்டமாஅதிபர் சபாநாயகருக்கு வேண்டுதல் விடுத்தார். இந்நிலைமைகளின் போதெல்லாம் சபாநாயகர் அரசியல் சட்டப்படி தான் நடந்து கொள்ளப் போவதாயும் பிரேரணை பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் உறுதியாக இருந்தார்.

இந்நிலையில் சபாநாயகரின் மகன் கொழும்பில் வைத்து திடீரென இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டார். பின்னர் இவர் விடுதலை செய்யப்பட்ட போதும் சபாநாயகரை மிரட்டி பணியவைக்கும் முயற்சியாகவே இது கருதப்பட்டுள்ளது.

நிலைமைகள் இப்படியிருக்க திடீ ரென இன்னுேர் நிகழ்சியும் அரங் கேறியது. நீண்டகாலமாக வெற்றிடமாக இருந்த யாழ் மாவட்ட எம்.பிக்கள் வெற்றிட த்திற்கு ஈழவர் ஜனநாயக முன்னணி யினுல் (ஈரோஸ்) ஆறு புதிய உறுப்பினர்கள் நியமிக் கப்பட்டனர். இவர்களின் நியமனம் தேர்தல் ஆணையாளரால் விசேட வர்த்தக மானியில் அறிவிக்கப்பட்டது. பாராளுமன்றத்தில் தனக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை சமாளிக்கவே இந்த நடவடிக்கை என ஊகிக்கப்படுகிறது. யாழ்பாணத்தில் இருந்து வந்து ஈரோஸ் பதவி ஏற்பது புலிகளின் முழு அனுமதியுடனயே நிகழமுடியும்.

இலங்கை வரலாற்றில் ஆட்சி யாளர்களு க்கு நெருக்கடி ஏற்பட்ட போதெல்லாம் தமிழ் மக்களின் தலைமைகள் ஆளுபவர்களுக்கு உறுதுணையாகவும் விசுவாசமாகவும் நடந்து கொண்டது கசப்பான வரலாறு. மறுபடியும் ஒருமுறை இதே நிகழ்வை நாம் சந்திக்கப் போகின்றேமா?

நிகழ்சிகள் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்க தமிழ்பேசும் மக்களோ கொழும்பில் நடக்கும் சம்பவங் களுக்கும் தங்களுக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என உறுதியாக நம்புகின்றனர். இதில் அபிப்பிராயப் படுவதற்கோ செயற்படுவதற்கோ எவ்வித அவசிய த்தையோ நியாயத்தையோ இவர்களால் காண முடியவில்லை. தமிழ் மக்களின் அரசியல் வங்குரோத்தே இந்நிலை மைக்கு காரணம். தமிழ் மக்களின் தலைமைகளே தமிழர்களை இந்த வங்குரோத்து நிலைமைக்கு தள்ளி விட்டுள்ளன.

இலங்கையின் ஒற்றை ஆட்சியை ஏற்றுக் கொண்டு ஜனநாயகம், உரிமைகள், சுதந்திரத்திற்கு போராடுபவர்கள் மட்டுமல்ல ஒற்றை ஆட்சி முறைக்கு எதிராக தனி நாட்டு கோரிக்கைக்காக போராடுபவர்களும் இலங்கையில் நடைபெறும் நிகழ் சிகளையும் அவதா னமாக அவதா னிப்பதும், அவற்றிற்கான காரணங்களை ஆராய்வதும் ஒவ்வொரு நிகழ்ச்சி தொடர்பாயும் கருத்துக்களை மக்கள் முன் தெரிவிப்பதும் மிகவும் முக்கியத்துவமான கடமையாகும். மக்களின் அரசியல் உணர்வை வளர்த்தெடுப்பதற்கும், ஜனநாயகத்தின் பக்கமாக மக்களை வென்றெடு ப்பதற்கும் இவை அத்தியவசியமாகும். தமிழ் மக்களோடு எவ்வித சம்பந்தமும் அற்ற ஒரு நிகழ்சிதான் இலங்கையில் நடைபெற்றாலும் (அப்படி ஒன்று இருக்க முடியுமா? ) அது தொடர்பாக சரியான நிலைப்பாட்டிற்கு வருவதும் கருத்து க்களை மக்களுக்கு முன்வைப்பதும், சிங்கள மக்கள் மத்தியில் ஜனநாயகம், அரசியல் தொடர்பாக தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்து வதற்கான அவசியமான பணியாகும். தமிழ் மக்கள் தமது நீதியான அரசியல் கோரிக்கைகளுக்காக சிங்கள மக்களை வென்றெடுக்க வேண்டிய அவசியம் இருக்கின்றபோது, சிங்கள மக்களின் பிரச்சனைகளைப்பற்றி பேசுவதும் அவசியமானது. என உணரப்பட வேண்டியதில் அதிசயம் ஒன்றும் இல்லை. ஆனுல் இதுவரை தமிழ் தலைமைக ளாலும், தமிழ் மக்களாலும் இது உணரப்பட வில்லை. "இது எங்கட பிரச்சனை இல்லை" என்று அரசியல் கடமைகளிலிருந்து ஒதுங்கிப் போவதே நடந்து வருகிறது.
இலங்கை ஜனாதிபதிக்கு எதிரான போராட்டத்திலும் தமிழர்களின் நிலை இவ்வாறே உள்ளது. ஆரோக்கியமற்ற வங்குரோத்து தனமான இந்த அரசியல் நிலைமையில் இருந்து தமிழ் மக்கள் மீட்கப்பட வேண்டும்.

_ஆசிரியர் குழு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அசோக மரங்கள்



பள்ளங்கள் அனைத்தும் மேடுகளாக மாற்றி அமைக்கப்பட்டு புதுமெருகு பெற்றிருந்த யாழ்நகரத்தின் அந்தப் பிரதான சாலை நம்ப முடியாத விதத்தில் மிகவும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. நீண்ட காலம் அமைதியாக இயங்கிக் கொண்டிருந்த அந்த சந்தை வெளியூர் வியாபாரிகளாலும், எருலாரிகளாலும் நெருக்கடி மிகுந்து ஆரவாரப்பட்டுக் கொண்டிருந்தது. நீண்ட காலம் தடைசெய்யப்பட்டிருந்த பட்டாசுகள் கூட தீபாவளியை முன்னிட்டு விற்பனைக்கு வந்து விட்டிருந்தது. துறைமுகத்தையும் கோட்டையையும் இணைத்துக் கொண்டிருந்த அமைதிப் படையினரின் வாகனங்களை பார்த்து மக்கள் மகிழ்சியுடன் கையசைத்து கொண்டிருந்தார்கள். பாடசாலை வண்டியை எதிர் பார்த்து காத்திருந்த மாணவிகள் கூட்டத்தை கண்டதும் ராணுவத்தினர் உற்சாகம் பீரிட சத்தமிட்டு கைகளை அசைத்தவாறு சென்றனர்.

சந்தையைத் தாண்டி பஸ்ராண்டின் முன்னுல் இருந்த சிவபாதத்தின் கடைக்கு அருகில் தனது புதிய ஏசியா சைக்கிளை நிறுத்திவிட்டு இவன் பஸ்ராண்டை பார்த்த போது இராணுவத்தினருக்கு கையசைத்து கொண்டிருந்த பலகைகள் சரிந்து விழ்ந்தன. புதிதாக உருவாகி வந்திருக்கும் இந்த மாணவர் கூட்டத்திற்கு தனது முகம் புதிதென்பதால் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை என்று புரிந்து கொண்டவன் சிவபாதத்தின் கடைக்குள் நுழைந்தான்.

கடையினுள் இருந்த மங்கல் ஒளியினுள் தன்னை மறைத்தவாறு பஸ்ஸராண்டை பார்த்தபடி இருந்த தவமண்ணர் இவனைக் கண்டதும் உற்சாகமாக வரவேற்றார்

"எப்படா வந்தனி" என்று ஓடிவந்து அணைத்துக் கொண்டார்.

"தம்பி இரண்டு பிளேன்ரி போடு "
என்றவாறு கோல்ட்லிவ் சிகரட்டை எடுத்து நீட்டினுர் இவனிடம்,

"வேண்டாம் அண்ணை "என்று மறுத்தவனை

"பராவாயில்லை பிடி" என்றுர்.

சிகரட்டை பற்ற வைத்தவாறு ஊர் புதிணங்களை சொல்லத் தொடங்கினுர். ஊர்புதினங்களை விட இவனுக்கு தவமண்ணரின் சொந்த வாழ்கையை பற்றி அறியவே ஆர்வமிருந்தது.

" அண்ணை என்ன மாதிரி உங்கட பாடு போகுது "
என்று ஆரம்பித்தான் இவன்.

"என்னத்தை சொல்லுறது அங்க பார் பஸ்ஸராண்டை இதோடை பதினேராவது, ஆனு இன்னும் ஒண்டு கூட சரிவரேல்லை" என்றுர்.

" ஆள்சின்னன் தான் எண்டாலும் பறவாயில்லை றைபண்ணுங்கோ எண்டைக்கோ ஒருக்கா சரிவராமலே போப்போகுது"

என்று ஆறுதல் சொல்லிவிட்டு வெளியேவந்தான். சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்படும் போது தவமண்ணர் காட்டிய இரட்டை பின்னலை நோக்கி கையசைத்துவிட்டு புறப்பட்டான் தவமண்ணரின் முகம் இப்பபோது எப்படி சிவந்திருக்கும் என்று எண்ணியபோது இவன் முகத்தில் புன்னகையொனறு குடிகொண்டது.

திடீர் என்று நிகழ்ந்து விட்ட சூழலின் மாறுதலை ஜீரணிக்க மறுத்து நின்ற இவனது மனம் யாழ்நகரம் எப்படியான கோலம் கொண்டாலென்ன தனது வாழ்வின் லட்சியத்தை நிறைவேற்றுவதற்காக அத்தனையும் சகித்துக் கொண்டு கருமமே கண்ணுக காதலிக்க முயற்சித்துக் கொண்டிருக்கும் தவமண்ணரை அசைபோட்டுக் கொண்டிருந்தது.

முன்னுல் வந்த வெள்ளைச் சீருடை ஊர்வலத்திற்கு கையசைத்தவாறு ஒதுங்கிய அமைதிப் படை வாகனமொன்று, இவனது சைக்கிளை வீதியின் ஓரத்தில் நிறைந்து வளர்ந்திருந்த நெருஞ்சி முட்களின் மேல் ஒதுக்கி தள்ளியது.
எரிச்சலுடன் இறங்கி டயறில் ஏறியிருந்த முட்களை பிடுங்க ஆரம்பித்தான்

தான்நின்று கொண்டிருக்கும் இடம் தனக்கு மிகவும் பரிச்சயமானதொன்று என புரிந்து கொண்ட மனதின் தூண்டுதலால் எழுந்து நின்று அவ் வீட்டை உற்று நோக்கினுன்

மதிலுடன் ஒட்டியவாறு வரிசையாக வளர்க்கப்பட்டிருந்த அந்த அசோக மரங்களின் இடையே துண்டாடபட்டிருந்த இரண்டு அசோக மரங்களில் இருந்து உயிர்த்திருந்த கிளைகள் மெதுவே அசைந்து தாம் உயிருடன் இருப்பதை தெரிவித்தன அதனை பார்த்தவாறு இருந்த இவனது நினைவுகள் பின்நோக்கிச் சென்றது.

குலத்துடன் சிறுவயதிலிருந்தே முகப்பரிச்சயம் இருந்தாலும் குலம் இவனது நண்பனுனது இடையில் விட்டிருந்த கல்லூரி வாழ்கையை மீண்டும் ரீயூட்டரியில் தொடர ஆரம்பித்த போதுதான். தனது கல்லூரிப் பருவத்தை காட்டில் கழித்துவிட்டு வந்திருந்த குலம் மிகவும் கலகலப்பானவன். அவனது அநுபவங்கள் இவனுக்குப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாடமாகின.

அவன் சொல்லுவான்

"சொந்த சகோதரர்களின் இரத்தத்தின் மேலால் நடந்து சென்று சாதிக்கப் போகும் விடுதலையில் எந்த வித அர்த்தமும் இல்லை
அதனை செய்ய மறுக்கும் துணிவும் எனக்கில்லை
அதனாலேயே நான் சாதாரண மனிதனாய் மாறிப் போனேன் இப்பொழுது என் கனவுகள் எல்லாம் கல்வி கற்கவேண்டும், காதலிக்க வேண்டும், கொஞ்சம் காசுசேர்க்க வேண்டும் அவ்வளவுதான்"

ஆனால் அவனது கனவுகளில் ஒன்றுகூட நிறைவேறவில்லை அவனது கடந்தகால நண்பன் ஒருவனின் மரணம் தொடர்பாக ராணுவம் அவனைத் தேடியதால் நாட்டைவிட்டே வெளியேற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டான்.

இராணுவம் முகாங்களுக்குள் முடக்கப்பட்டு யாழ்நகரம் இளைஞர்களின் கட்டுப்பாட்டில் இயங்க ஆரம்பித்ததும் மீண்டும் திரும்பி வந்த குலத்துடன் மாலைப் பொழுதுகளை களிக்க ஆரம்பித்தான் இவன். போதைவஸ்து பாவனையாளனாக மாறியிருந்த குலத்தின் மனதை அமைதிப்படுத்த இவன் பெரும் முயற்சி செய்தான்.

பொழுது மங்கி விடும் பொழுதே மனித சஞ்சாரம் அற்றுப் போய்விடுகின்ற அந்த மாலைப் பொழுதுகளில் வீதியில் அமர்ந்து கொண்டே அல்லது அருகிலிருந்த மணல் கும்பியொன்றில் படுத்துக் கொண்டே குலத்தின் சோகத்தை இவன் பகிர்ந்து கொள்வான். சைக்கிள் தரமறுத்து அவமதிக்கும் அண்ணனுக்கு காசினாலே அபிசேகம் செய்வதாக கனவு காணுவான் குலம்.
அவனது நினைவுகளை கிண்டல் செய்யும் இவனிடம் பணம்தான் உறவுகளையே நிர்ணயிக்கிறது என்று வாதிடுவான்.

அன்று ஒருநாள் பகல் சைக்கிளில் அமர்ந்த படி இவனும் மதிலின்மேல் குலமும் வீதியால் செல்லும் வாகனங்களை பார்த்தபடி கதைத்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த குலத்தின் அண்ணர் இருவரையும் முறைத்தபடி சொன்னார்

"கதைச்சுவெட்டி பொழுது போக்கிறதுக்கு இஞ்ச சாப்பாடு தரேலாது கதைச்சுக் கொண்டிருக்கிறதை விட்டுட்டு வீட்டுக்கும் நாட்டுக்கும் கூடாத உந்த அசோக மரங்களை தறி"

என்றபடி கோடாலியொன்றை எறிந்தார். மௌனமாக தலைகுனிந்திருந்த குலம் கோடாலியை எடுத்து வரிசையாக நின்ற அசோக மரங்களில் ஒன்றை தறிக்க ஆரம்பித்தான் நீண்டு வளர்நிதிருந்த அந்த அசோகமரம் மெதுவே சரிய ஆரம்பித்ததும் அவ்விடத்தைவிட்டு அவனது அண்ணர் அகன்றார்.

" நான் நட்டு வளர்த்த அசோக மரங்கள் இதுகள் இவனை என்ன செய்தது

என்று சோகமாக சொன்ன குலத்தைப்பார்த்து இவன் கேட்டான்

"ஏன் மௌனம் சாதித்தாய் நியாயம் கேட்பதுதானே உன்ர அண்ணரிட்டை"

"இப்ப எனக்கு துணிவில்லை கொஞ்சம் தண்ணி அடிச்சால் தான் என்னால கதைக்கேலும்"

என்ற படி அடுத்த மரத்தை தறிக்க ஆரம்பித்தன் குலம். பிறகு சந்திப்பதாக கூறிவிட்டு இவன் அவ்விடத்தை விட்டு நகர்ந்தான் ஆனால் அதன் பின்னால் இவனால் குலத்தை சந்திக்கவே முடியவில்லை.

மறுநாள் மாலை இவன் குலத்தின் வீட்டிற்கு சென்றபோது கதவைத்திறந்த குலத்தின் அண்ணரிடம்

"குலத்திட்டை வந்தனான்" என்றான்

"அப்படி ஒருத்தரும் இந்த வீட்டில இல்லை"

என்ற படி கதவை அறைந்து சாத்திவிட்டு சென்றார் அவர். வெளியே வந்த இவனை வழிமறித்த தவமண்ணர் கேட்டார்

"என்ரா உங்க போனனி உன்னையும் எல்லே அந்தாள் மாட்டி விட்டிடும்"

"ஏன் என்ன நடந்தது"

ஆச்சரியமாக கேட்டான் இவன்

"உனக்கு விசயம் தொரியாதா குலத்தையெல்ல பெடியள் கொண்டு போயிட்டாங்கள்"

"எப்ப நடந்தது"

அதிரத் தொடங்கியிருந்த இவனது இதயத்திற்கு மேலும் அதிர்ச்சி வைத்தியம் செய்தார் தவமண்ணர்.

"நேற்றைக்கு பின்நேரம் குலம் குடிச்சுட்டு வந்து சத்தம் போட்டானும் தமையன்போய் பெடியங்களிட்டை சொல்லி அவங்கள் வந்து பிடிச்சுக் கொண்டு போயிட்டாங்களாம். நான் எனக்கு தெரிஞ்ச பெடியனிட்டை விசாரிச்சனான் குலத்தை ரோச்சறிங் காம்பிற்கு தான் கொண்டு போனவங்களாம். அனேகமாய் ஆள் உயிரோடை திரும்பாது எதுக்கும் உன்ர கூட்டாளி எண்ட படியால் நீ கவனமாயிரு கண்டபடி திரியாதை"

என்று தனது கடமையினை நிறைவு செய்தார் தவமண்ணர். எச்சரிக்கையுடன் வாழ்நாளைகடத்த இவனும் தலைமறைவானான். நீண்ட நாட்களின் பின்னர் இன்னமும் உயிர்வாழும் அவ் அசோக மரங்களையும் வீட்டின் முன்னாலிருந்த மணல் கும்பியையும் பெருத்த ஏக்கத்துடன் பார்த்தபடி வாசலில் நின்ற அவனை வீட்டின் கதவை திறந்து கொண்டு வெளியில் வந்த குலத்தின் அண்ணர்

"ஏன் வெளியில நிற்கிறீர் உள்ளுக்கை வாருமன்"

என்று அழைத்தார்.
பதிலேதும் பேசாமல் எரிச்சலுடன் காற்றுப் போயிருந்த சைக்கிளில் ஏறிப் புறப்பட்டான்..... இவன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேடலின் பக்கங்கள்

இலங்கையில் புலிகளுக்கும், அரச படைகளுக்கும் இடையிலான யுத்தம் அண்மைக் காலங்களில் தீவிரம் அடைந்துள்ளது. புலிகள் அரசபடை நிலைகளை தாக்கி அழிப்பதிலும் படைகளை பின்வாங்க வைப்பதிலும் இராணுவ ரீதியான வெற்றிகளை பெற்று வருகின்றனர். புலிகளின் தாக்குதல்களால் இலங்கை அரசு நிலைகுலைந்துள்ளது.

இதேசூழ்நிலையில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ் பிரதேசங்களில் மக்கள் தமது ஜனநாயக உரிமைகளை இழந்து மந்தைகளைப் போல வாழ நிர்ப் பந்திக்கப் பட்டுள்ளனர். வாய் என்பது கொட்டாவி விடுவதற்கும் சாப்பிடு வதற்குமாய் போய்விட்டது. மக்களி டையே ஒரு மௌன யுத்தமே நிகழ்கின்றது. மனங்களில் மட்டும் கொதிப்பு உயர்ந்து வருகிறது.

மக்களின் உள்ளங்களில் அதிகரித்து வரும் இந்த கொதிப் பையும், சுதந்திரத்திற்கான விருப் பையும் ஆங்காங்கே காண கூடியதாக உள்ளது. ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக போராடும் புலிகள் (அதுதான் அவர்களிடமிருக்கும் ஒரே ஒரு நல்ல அம்சம்) இழைத்துள்ள தவறுகளை நாம் கணக்கிலெடுத்தே ஆகவேண்டும்.

புலிகள் இழைத்துள்ள மிகப் பெரும்தவறு இலங்கையில் தமிழ் பேசும் மக்களான 10,00,000 முஸ்லீம் மக்களை தமிழர்களின் எதிரிகளாக தள்ளிவிடக் கூடிய படுபயங் கரமான படுகொலைகளை செய்தது. சிங்கள பெரும் தேசிய வாதத்திலிருந்து தமிழர்களின் உரிமைக்காக போராடு வதாகக் கூறிக் கொண்டு தமிழர் களிலும் பார்க்க சிறுபான்மையான முஸலீம் சமூகத்தின் மீது மேலா திக்கம் செய்ய விரும்புவது அவர்களது பிற்போக்குத்தனமான மேலாதிக்க விருப்பத்தை வெளிப் படுத்துகிறது

இவர்கள் (புலிகள்) கொழும்பில் மீண்டும் ஒரு இனப்படுகொலை நடைபெற வேண்டுமென விரும்பு கிறார்கள் அதற்காக பல முயற்சிகளை எடுக்கிறார் கள் மீண்டும் மீண்டும் சிங்கள, முஸ்லீம் கிராமங்களை தாக்குகிறார்கள் வவுனியா, மட்டக் களப்பு, அம்பாறை, திருகோணமலை போன்ற இடங்களில் இப் படு கொலையை செய்கிறார்கள். வடக்கில் இருந்து முஸ்லீம்களை விரட்டும் போது "நீங்கள் கொழும்பில் தமிழர்களை கொன்று உடமைகளை பறியுங்கள்" எனக் கூறினார்கள். இவ்வசனங்களை எனது காதுகளால் யாழ்ப்பணத்தில் புலிகள் கூறும்போது கேட்டேன். ஆனால் புலிகள் விரும்பியபடி இனக் கலவரம் ஏற்படவில்லை. இவ்வாறு கலவரம் ஒன்று நடப்பதற்கு ஸ்ரீலங்கா அரசு தற்போது அனுமதிக்கப் போவதில்லை காரணம் இதைக் காரணமாகக் காட்டி முதலாவது இந்தியாவும், இரண்டாவதாக ஏனைய நாடுகளும் தலையிட வாய்ப்பு ஏற்படும் என்பதே.

ஸ்ரீலங்கா அரசு தமிழ் பேசும் மக்களுக்கு எந்த அதிகாரமும் கொடுக்காமல், வடக்கையையும் கிழக்கையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்புகிறது. அதில் அவர்கள் வெற்றி பெறப்போவதில்லை. வெற்றி பெறவும் கூடாது. அதேவேளை புலிகள் தமது நடவடிக்கைகளினால் தமிழ் மக்களின் போராட்டத்தை தோல்விக்கான பாதையில் இழுத்துச் செல்வதை தடுக்கவும் வேண்டும்.

**இலங்கையில் இருந்து வந்த கடிதமொன்று இவ்வாறு கூறுகிறது.**

தீப்பொறி அமைப்பை தாபித்தவர்களில் ஒருவரான கேசவன் உட்பட மொத்தம் 10பேர் அண்மையில் புலிகளால் 'கைது' செய்யப் பட்டுள்ளனர். மே17 நள்ளிரவு சீருடையும் ஆயுதபாணிகளாகவும் காணப்பட்ட புலிகள் கேசவன் தங்கியிருந்த வீட்டைச் சுற்றிவளைத்து கேசவனை கைது செய்தனர். மே21 நள்ளிரவு மீரா உட்பட 4 பெண்களும் யாழ்பல்கலைக்கழக மாணவர் களான சிறிநீவாசன் (கலைப்பீடம் 2ம் வருடம்) கோவிந்தராஜன் (கலைப்பீடம் 3ம் வருடம்)ஆகியோரும் இன்னமும் இரண்டு மாணவர்களும் (பெயர் தெரியவில்லை) புலிகளால் பிடித்து செல்லப்பட்டனர். மேலதிக உதவி அரசாங்க அதிபராக இருந்த கோவிந்தன் என்பவரும் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்களை கைது செய்யும்போது "எங்களை மீறி வேலை செய்யக் கூடிய எவரையும் நாம் விட்டு வைக்க மாட்டோம். தீப்பொறியை முக்கிய மான சக்திகளில் ஒன்றாகக் கருதுகிறோம். எனவே உங்களை கைது செய்கிறோம்" என புலிகள் கூறியுள்ளனர். பல்கலை க்கழக மாணவர்களை கைது செய்த பின் பல்கலைக் கழகத்தில் புலிகள் கூட்டம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒன்றை கூட்டினர். அங்கு பேசிய புலிப் பிரமுகர் ஒருவர் 'கைதான' மாணவர்கள் மீது பொய் குற்றச் சாட்டுக்கள் பலவற்றை கூறினார். பின்னர் கூட்ட முடிவில் 'கைதான வர்களுக்கு என்ன தண்டனை வழங்கப்பட வேண்டும்?' என மாணவர்களைக் கேட்டார். நீண்ட நேர மௌனத்தின் பின் மாணவர் ஒருவர் துணிச்சலுடன் எழுந்து "இவர்களை மன்னித்து விட முடியாதா?" எனக் கேட்டார் இதற்கு எது வித பதிலுமில்லா மலேயே கூட்டம் முடிக்கப்பட்டது.

"இக்கைது" பற்றி தமது பத்திரிகையில் எழுதிய புலிகள் பிடிபட்டவர்கள் புளோட் துரோகக் கும்பலை சேர்ந்தவர்கள் என அப்பட்டமான பொய் காரணம் காட்டி உள்ளனர். புலிகளால் புளோட் தடை செய்யப்பட முன்னரே புளோட்டின் அராஜகப் போக்குகளால் அதில் இருந்து வெளியேறியவர். கேசவன் புளோட்டின் அராஜகப் போக்குகளை அம்பலப் படுத்த கடினமான முயற்சியில் ஈடுபட்டவர் தீப்பொறி பத்திரிகை இதழ்களுக்கூடாகவும், "புதியதோர் உலகம்" நாவல் மூலமும் புளோட்டின் அராஜகப் போக்கை வெளிச்சத்திற்கு கொண்டுவந்தவர். இதனை மக்களும் அறிவர். புலிகளும் அறிவர். இப்படியிருக்க இவர் புளோட் அமைப்பை சேர்ந்தவர் என காரணம் கற்பிப்பது விசமத்தனமானது. தமது உள் நோக்கம் கொண்ட செயலை வெளியில் நியாயப் படுத்துகின்ற முயற்சி

யூனில் யுத்தம் ஆரம்பமான திலிருந்து இன்று வரை N.L.F.T, பேரவை, P.L.F.T, தீப்பொறி அமைப்புக்களை சார்ந்த சுமார் நூற்றிற்கும் மேற்பட்ட வர்களும், மற்றும் இயக்கங்களிலிருந்து வெளியேறியிருந்த வர்களும், எதுவுமே அறியாதவர்கள், என எல்லோருமாக சுமார் 200க்கு மேற்பட்டோரும் புலிகளால் கடத்தப் பட்டு காணாமற் போயுள்ளனர்.

யாழ் பல்கலைக்கழக மாணவன் விமலேஸ்வரன் படு கொலையில் இருந்து இன்றைய 'கைதிகள்'வரை பிடிபட்ட/ கொல்லப்பட்ட எவருமே இலங்கை இந்திய அரசுக்கு சார்பானவர்கள் அல்ல என்பதும் எவ்வகையிலும் 'துரோகிகள்' எனபட்டம் சூட்டமுடியாதவர்கள் என்பதும குறிப்பிட த்தக்கது.

இவர்கள் உயிரோடு இருக்கிறார்களா? இல்லையா? எங்கு 'சிறை' வைக்கப்ப ட்டிருக்கிறார்கள் என்பது இவர்களது பெற்றோர், உறவினர் களுக்குக் கூட தெரியவில்லை.

**இத்தனைக்கும் இவர்கள் செய்த குற்றம்தான் என்ன?**

இந்திய அரசின் கெடுபிடி, இலங்கையரசின் ஒடுக்குமுறை, புலிகளின் ஜனநாயக மறுப்பு, மற்ற இயக்கங்களின் அட்டகாசம் என்பவற்றின் மத்தியிலும் சொந்த மண்ணில் வாழ்ந்தவர்கள் விடுதலையை நேசித் தவர்கள்.

**இதான் இவர்கள் செய்த குற்றமா.?**

நாட்டின் தலைவிதியை எண்ணி ஏங்கும் நெஞ்சங்களே, மக்களின் உண்மை விடுதலைக்கான முனைப் புக்கள் உயிருள்ளன என்ற உண்மையை உணருங்கள். இந்த முனைப்புகளுக்கு புலிகள் தடையாக இருக்கிறார்கள் என்பதை உண ருங்கள்.

காலம் காலமாக பல நல்ல சக்திகளை தமிழினம் இழந்து கொண்டு வருகிறது. இதைக் கேட்டு பழகிப் போனவர்களாக ஆகி விடாமல் இவற்றை தடுக்க உங்களால் இயன்ற அனைத்தையும் செய்யுங்கள்.

**இவ்வாறு ஒரு துண்டுப்பிரசுரம "நண்பர்கள்" (ஈழம்) என்ற பெயரில் வெளியிடப்பட்டு கனடா வந்து சேர்ந்துள்ளது.**

---

வெந்த வடுக்களை மனங்களிலும் உடல்களிலும் சுமந்து, கிடைப்ப தற்கும் இழப்பதற்கும் எதுவுமின்றி, இடையறாத பட்டினிச் சத்தங்களை இரைப்பையில் தாங்கி, உடல் மெலிந்து, நிறம் கறுத்து, நடைப்பிணங்களாக அம்பிட்ட இடங்களில் அகதிகளாக பொதுமக்கள். "ஆனையிறவு" சோகப் படத்தைப் பார்த்து அழுது தீர்த்த மனச் சாந்தியுடன் அடுத்து வந்த busy day ஒன்றில் அனைத்தையும் மறந்த நாம் அடுத்த பேரழிவு பற்றிய ஒரு செய்தி வரும்வரை அரசியல் பற்றிய சிந்திப்பை ஒத்திவைப்பு!

**ஆனையிறவு போரால் ஆன பயன் என்ன?**

பத்துகளும், நூறுகளும் இறந்து போனதை சாதரணமாக எடுத்துக் கொள்ளப் பழகிவிட்ட தமிழ் மக்களின் மனங்களுக்கு ஆயிரக் கணக்கான வர்களின் இழப்புக்கள் ஒரு பாதிப்பை கொடுத்துள்ளது. இந்நிகழ்வு தமிழ் மக்களை தீரா விழிப்புக்கு உள்ளாக்கியும்முள்ளது.

இராணுவ நடவடிக்கை மூலம் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண முடியா தென்று அரசியல்வாதிகளின் சம்பிரதாயம் நினைவு கூர்வு. "பொது எதிரி புலிகள்" முறியடிந்த திருப்தியில் கொழும்பு வாழ் விடுதலை (?) இயக்கங்கள் கொண்டாட்டம்.

மரபுசார்ந்த யுத்தம் ஒன்றின் இழப்புகள் பற்றி புலிகளுக்கு ஒரு பாடம் புகட்டியிருக்கின்றது.

ஒரு முகாமைப் பாதுகாப்பதற்கு கொடுக்க வேண்டிய விலை எவ்வளவு அதிகமாக உயர்ந்திருக்கின்றது என்பதை இலங்கை அரசுக்கு உணர்த்தியிருக் கின்றது.

ஆனால் இதன் எதிர் விளைவு என்ன? இராணுவம் போர் தொடரும் என்கிறது. புலிகள் புதிதாக ஆட்களை சேர்க் கின்றனர். பொதுமக்கள் தாராளமாக நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். விரும்பியோ விரும பாமலோ ஆயிரக்க ணக்கான வயோதிபர், இளைஞர், சிறுவர் சிறுமியர் புலிகளுடன் சேர்கின்றனர். எமது விடுதலைப் போராட்டம் உயிரப் பலிகள், கொலைகள், கல்விச் சீரழிவு, பொருளாதார சீர்குலைவுகள் என்றும் முடிவில்லாமல் பரிமானங்களை எடுத்துச் செல்கின்றது. இது பற்றி எங்கள் நிலைப்பாடு என்ன ? வெறும் கண் கலங்கியதுடன் சரியா ? புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் மனதில் ஆனையிறவுப்போர் ஏற்படு த்திய மறுதாக்கம்தான் என்ன ? சம் பிரதாய மௌன அஞ்சலிகள் தானா ?

ஆனையிறவுப் போரின் அரசியல் உறக்கத்திலிருந்து உலகம் வாழ் தமிழ் மக்கள் அனைவரும் ஒரு கணம் விழிக்க வைக்கப்பட்டார்கள். இந்த விழிப்பு நிலையாக்கப்பட்டால் எமது விடுதலைப் போராட்டத்திற்கு இன்னுமொரு பரிமாணம் கிடைக்கும். வெளிநாடு வாழ் தமிழ் மக்களால் சர்வதேச கவனத்தை ஈர்க்க முடியுமானால் நிச்சயமாக அப்புதிய பரிமாணம் பயன் கொடுக்கும். இது சாத்தியம் என்பது கேள்வி க்குறிதான். காரணம் சுயநலக் கும்பல்கள் தவிர்ந்தால், தீவிரப் புலி ஆதர வாளர்கள் அல்லது தீவிரப் புலி எதிர்ப்பாளர்கள்தான் உண்டு.

*தொடர்ச்சி பக் 26*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இன்றைய படைப்பாளிகளும், வாசகர்களும்

- சிவம் -

கொட்டாவி விடுவதானாலும் அக்கம் பக்கம் பார்த்து சத்த மில்லாமல் மெதுவாக விடுகின்ற நிலையில் எமது மக்கள் எமது மண்ணில் வாழ்கின்றார்கள். இந்த வாழ்நிலையில் வாழ முடியாமல் பல்வேறு காரணங்களுக்காக... நாட்டை விட்டு வெளியேறி உலகின் பல்வேறு நாடுகளிலும் "அகதி களாக" நம்மவர் வாழ்கின்றார்கள்.

இவ்வாறு வந்த பல இளைஞர் களால், தாம் புகுந்த மண்ணின் வாழ்க்கை முறைகளோடு இணைந்து இன்பமான ஓர் வாழ்வினை வாழ முடியவில்லை. அப்பாடி ஒரு மாதிரி வந்து சேர்ந்து விட்டோம். இனிமேல் நிம்மதியாக இன்பமாக வாழ வோமென்ற எண்ணமதில் பெரும் பாலான இளைஞர்கள் இல்லை யென்பதும் உண்மையே. இதன் வெளிப்படை இன்று பல சஞ்சிகை கள், பத்திரிகைகள், நாவல்கள், கவிதைதொகுப்புகள், நாடகங் களாக வெளிவருகின்றன. இவர் களில் பெரும் பாலோர் இலக்கிய துறைக்கு புதியவர்கள். நாம் இந்த மண்ணில் பிறந்ததே கவிதை எழுதுவதற்கும், கலை இலக்கிய விமர்சனங்கள் செய்வதற்கும் என்று எண்ணு பவர்களல்லர். நமது கடமை எழுதுவது மக்கள் விரும்பி னால் படிக்கட்டும் விளங்கினால் விளங் கட்டும். எமக்கு விளங்குதோ இல்லையோ ஒருவகை "மூட்" டில் நாங்கள் எழுதுவது பற்றி எங்களை கேட்பதா..! இவ்வாறு கேட்கும் மனப்பான்மை கொண்டவர்களு மல்ல. தமது மனதிலே எரிந்து கொண்டிருக்கும் பிரச்சினைகளை வெளியில் கொணர்வதற்காகவே இவர்கள் எழுதுகின்றார்கள். உருவம் பற்றி இவர்கள் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. உள்ளடக்கம் பற்றியே கவலை படுகின்றார்கள். எங்கள் மண்ணிலே வாழ்கின்ற மக்களை எண்ணுகின்றார்கள். அவர்களின் விடிவுக்காக எமது மண்ணின் விடிவுக் காகவே இவர்கள் எழுகின்றார்கள்.

இவர்களுக்கு ஈழத்தில் கவிதை வளரவில்லையே சிறுகதை வளருகின்றதே என்கின்ற கவலை இல்லை. எமது பிரச்சினைகளை பிரச்சினையை தீர்க்கும் வழிகளை எந்த வடிவத்தில் எழுத முடியுமோ அந்த வடிவத்தில் எழுதுகின்றார்கள்.

தூண்டில், மனிதம், அ.ஆ.இ, சுவடுகள் வரிசையில் வெளிவ ருகின்ற பத்திரிகைகளை நாங்கள் பார்த்தால் இந்த உண்மையினை உணரமுடியும் இவர்களில் இருவகை யினர் இருக்கின்றார்கள். ஒரு பகுதியினர் புலிகளைப் பற்றி எழுதுவதும் அவர்களின் அராஜகத்தி கெதிராக எழுதுவதும் தான் இன்றைய கடமை என்று எண்ணு கின்றார்கள். மறுபகுதியினர் இன்றைய புலிகளின் அராஜக செயல்களை அம்பலப்படுத்துவது மட்டுமல்ல நமது விடியலுக்கான தேடலையும் நடாத்துகின்றார்கள். அதன் அடிப்படையில் அவர்களது உள்ளடக்கங்கள் அமைந்திருக கின்றது.

இன்னும் சிலருக்கு பத்திரிகை எப்படி நடாத்துவது என்று தெரியும், ஒரு இயக்கத்துக்கு அதன் ஆதரவாளர் களின் அடாவடித்த னங்களை மறைப் பதற்கு பினாமி பத்திரிகை நடாத்து வதற்கு, பினாமி எழுத்தாளர்களாக இருப்பதற்கு இவர்களுக்கு தெரியும். எங்கள் பிரச்சினை பற்றி, மக்களின் அவலங்கள் பற்றி இவர்களுக்கு கவலை இல்லை. இவற்றை எப்படி பணம் பண்ணுவதுதான் இவர்களின் நோக்கமாகும். இன்னும் சிலர் இறுதிவரை இயக்கங்களில் இருந்த வர்கள் இன்று இயக்கங்களை விட்டு வந்துவிட்டார்கள். இன்றுவரை தமது நிலைபற்றி தாமிருந்த இயக்கம் பற்றி ஒன்றுமே சொல்லாது விடுதலை, புரட்சி, அகதி என்றெல்லாம் பாடி வருகின்றார்கள். இவர்களின் நோக்கம் என்ன? இவர்கள் தமது பெயரையும், புகழையும் நிலைநிறுத்த எழுதுகின்றார்கள். இவர்களுக்கு கவிதை தெரியும், கவிதை எப்படி எழுதுவது என்றும் தெரியும் இப்போது பொதுவாக எப்படி எழுத வேண்டு மென்றும் இவர்களுக்கும் தெரியும். இவர்களது பிழைப்புவாத பம்மாத்து அரசியல் இலக்கிய வேலைகளும் தொடருகின்றது. இவர்களின் இலக்கியங்களில் மயங்கி மாலை போடுவதற்கும் சிலர் இருக் கின்றார்கள்.

மேலே எழுதுபவர்கள் பற்றி மேலெழுந்த வாரியாக பார்த்தோம். இவர்களின் வாசகர்கள், விமா சகர்கள் பற்றியும் பார்ப்போம்.

இன்றைய இளைஞர்கள் தமது கடந்த கால அனுபவங்களால் பெரிதும் பாதிக் கப்பட்டு இருக் கின்றார்கள். இவர்கள் எழுதியதை மட்டுமல்ல. எழுதுபவனையும் பார்க கின்றார்கள். கவிதை என்றாலென்ன, கட்டுரை என்றாலென்ன அவை கவிதையா, கட்டுரையா என்று உருவத்தைப் பற்றி சிந்திப்பதற்கு முன்னர் உள்ளடக்கம் பற்றி பார்க் கின்றார்கள். ஒவ்வொரு வரியும் ஒவ்வொரு சொல்லும் ஏன் எழுதி யிருக்கிறதென்று பார்க்கின்றார்கள். பிய்த்துப் பிடுங்கி விமர்சனம் செய்கின்றார்கள். இவர்களுக்கு விமர்சனம் என்றால் என்னவென்று தெரியாமல் இருக்கலாம். அது பற்றி ஆழமாக பலர் எழுதிய புத்தங்களை வாசிக்காமால் இருக்கலாம். ஆனால் இவர்கள் தம் மண்ணின் மக்களை, மண்ணின் விடுதலையை எண்ணிய வாறு இருக்கின்றார்கள். அதற்கு சாதகமான பாதகமான கருத்துக்களை அலசி ஆராய்கின்றார்கள். இன்னொரு வகையினர் இருக்கின்றார்கள். இவர்கள் படித்தவர்கள், பல புத்தகங்கள் வாசித்தவர்கள். நாகரீகமான விமர்சனங்களை முன்வைக்க விரும்புவர்கள். உருவம் அழகாக இருந்தால் இவர்களுக்கு மிக்க மகிழ்ச்சி. உள்ளடக்கம் பற்றிக் கவலையே இல்லை. பற்பல புதிய சொற்களை அழகாக பாவிப்பார்கள், அடிக்கடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பல்வேறு நாட்டு வேற்று மொழி கவிஞர்களின் பெயர்களை உச்சாடனம் செய்வார்கள். மாக்ஸிசம் இவர்களுக்கு கௌரவமான ஒரு சொல்பதம். கவிதையிலோ, நாடகத் திலோ, சிறுகதையிலோ உருவரீதியான பிரச்சினை ஒன்று என்றால் இவர்களுக்கு நாடி நரம்பெல்லாம் முறுக்கேறி சத்தம் போடுவார்கள். கவிதை அழிகிறதே, சிறுகதை வளரவில்லையே என்று கூப்பாடு போடுவார்கள். உள்ளடக்கத்தில் வெறும் விரக்தியில் எழுதினால் என்ன, 649 பற்றி கவிதை எழுதினால் என்ன, கனடியத்தில் குளிரையும் குளிர்ச்சியான பெண்களைப் பற்றியும் எழுதினால் என்ன உருவம் நன்றாக இருந்தால் ஆனந்த கண்ணீர் வடிக்கும் இவர்களும், கலை இலக்கியம் கலைக்காக என்று சொல்பவர்களின் கூட்டாளிகள்தான்.

இவ்வாறு கலை இலக்கியம் பற்றி கவலைப் படுபவர்கள், நாட்டு நிலை பற்றி கவலைப்பட்டு கலை இலக்கியம் படைப் பவர்கள், கவிதை எழுத வேண்டும் என்பதற்காக இன்று விலை போகும் பொருளைத் தெரிந்து கவிதை எழுதுபவர்கள், இன்று புலம் பெயர்ந்த இலக்கியகாரர்களாக இருக்கின்றார்கள்.

இவர்களில் நாட்டு நிலை பற்றி அணுகு வதற்கு கலை இலக்கியத்தை தமது ஊடகமாக கொள்பவர்கள் பற்றியே நாம் சிந்திக்க வேண்டும். மற்றவர்கள் பற்றி பெரிதாக ஒன்றும் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

நாட்டில் இன்றுள்ள சூழ்நிலையிலும் நிறைந்த நம்பிக்கையை கொடுத்து இலக்கியம் படைப்பவாகள் இருக்கின்றார்கள். அராஜகத் திற்கு எதிராகவும், இந்திய இலங்கை அரசுகளின் ஒடுக்குமுறைகட்கு எதிராகவும் இலக்கியம் படைக்கின்றார்கள். இந்த நிலைமைகளுக்கு அடிப்படையான காரணம் என்ன? இன்றைய நம் மண்ணின் அரசியல் நிலைமைகளே.

இன்று புலிகளின் அராஜக செயல்களை அம்பலப்படுத்துவதுதான் பிரதான அரசியல் நிலைபாடு என எண்ணுபவர்கள், சோஷலிச தமிழீழம் தான் சரியான நிலைப்பாடு என எண்ணுபவர்கள், தனிநாடா சுயநிர்ணய உரிமைக்கான போராட்டமா என எண்ணு பவர்கள், முழு இலங்கை விடுதலைக்கான போராட்டமே இன விடுதலையின் சாத்தியமாகும் பாதையென எண்ணுபவர்கள். இவ்வாறு பலவழிகளிலும் சிந்திப்பவர்கள் தமக்குள்ளே பல குழப்பங்களையும் கொண்டுள்ளார்கள். இவர்களின் குழப்பங்களின் வெளிப்பாடுகளே இன்றைய புலம் பெயர்ந்தோர் இலக்கியமாகும். சரியான தெளிவான அரசியல் பாதை ஒன்றின் முன்னே நம் மண்ணின் செயல்பாடுகள் ஆரம்பிக்கும் போது உருவமும் உள்ளடக்கமும் ஒன்றிணைந்து பல தரமான இலக்கியங்கள் மண்ணிலும் மண்ணைவிட்டு புலம் பெயர்ந்தோர் மத்தியிலும் வெளிவரும்.

## அழியும் இளமை

ஒருத்தியின் உறவுக்காய்
உருகும் உன் சத்தம்
ஒருவருக்கும் கேட்காமல்
உருக்குலைந்து ...

ஓ! என் இதயமே!
மன்னித்துவிடு
உன்னை வெறுமையாய்
வைத்திருப்பதற்காக.

அறியாயோ ?
என் வாழ்வில் நீ
இரண்டாம் தாரம்

பாழ்பட்ட பூமியில்
பிரசவிக்க முன்,
பத்து மாதங்கள்
அம்மாவும் நானும்
ஒரே இதயத்தை
பகிர்ந்தவர்கள்.

தன் மகளை தாரை
வார்த்து
தாகம் தீர்க்க துடிக்கும்
தாயிதயமும்
என் இதயமே.

ஒருவருக்கும் புரியாத
என் இளமை அழிப்பு
சுயவிரயஉழைப்பு
நீயாவது புரிந்து கொள்
ஓ! என் இதயமே

விதுரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தாயகம்: சில கருத்துக்கள்

## தாயகம் ஒரு அரசியல் ஸ்தாபனமா?

ஒரு பத்திரிகையானது பல்வேறு தரப்பினுல் பல்வேறு நோக்கங்களுக்காக ஆரம்பிக்கப்படுகிறது. உலகில் பல்லாயிரக் கணக்கான பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. பெரும்பாலான பத்திரிகையின் நோக்கம் பணம் பண்ணுதலே. முதலாளித்துவ பொருளாதார சமூக அமைப்பில் வெகுசன தொடர்புச் சாதனம் என்பது இலாப நோக்கத்தின் அடிப்படையிலான பண்ட உற்பத்தியே. மக்கள் நலனே சமூக அக்கறை இவர்களுக்கு கவலை ஏதுவும் கிடையாது உண்மை, நடுநிலை என்ற பெயரில் மக்கள் நலனுக்கு அரசையும், பொருளாதார அமைப்பையும பாதுகாத்து திரிக்கப்பட்ட மக்களை திசை திருப்பக்கூடிய செய்திகளையுமே வெளியிட்டு வருகின்றன.

> விமர்சனத்தில் கேலி, குத்தல், நக்கல் என்பன ஒரு விடயம் குறித்தஆரோக்கியமான பார்வையில் இருந்து, வேறு ஒரு நிலைக்கு விமர்சனத்தை கொண்டு சென்று விடும்.

அடுத்த வகையினதாக வெளிவரும் பத்திரிகைகளின் நோக்கம் தாம் சாந்திருக்கும் கட்சியையோ அல்லது ஸ்தாபனங்களினதோ கருத்தை பிரச்சாரப்படுத்துவதும் அதனை நியாயப்படுத்தலையுமே பெரும்பாலும் செய்து வருகின்றன.

மிகக் குறைந்த அளவிலே வெளிவரும் இலக்கிய ஈடுபாடு மற்றும் ஆர்வம் காரணமாக தொடங்கப்படும் பத்திரிகைகளை எதிர்த்து "திறந்த கருத்து பரிமாற்றத்" தளத்தை வழங்கும் தன்மை கணிசமான அளவு உண்டு. ஆனுல் அதுவும் பிரசுரிப்பவர் அல்லது ஆசிரியரின் அறிவத்திறன் கருத்து நிலைப்பாடு, ஜனநாயகத்தன்மை ஆகியவற்றை பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது. இந்த வகைக்குள்ளேயே தாயகத்தையும் சேர்க்க முடியும். என கருதுகிறேம்.இதன் அடிப்படையில் தான் தாயகத்தை இங்கு நாம் விமர்சனத்திற்கு உள்ளாக்குகின்றேம்.

தமிழ் மக்கள் கருத்துக்களை எழுதவோ, பேசவோ முடியாத நிலைமையொன்று திட்டமிட்டு படிப்படியாக உருவாக்கப்பட்டது. இலங்கையில் மட்டுமல்ல கடல் கடந்து பரம்பல் அடைந்த நாடுகளெல்லாம் கூட மாற்றுக் கருத் துக்கள் வெளிவர முடியாது குரல் வளைகள் நெருக்கப்பட்டன. உண்மையான செய்திகள் மக்களுக்கு எட்டுவதில்லை என்ற நிலைமை நீடித்து பல உண்மைச் சம்பவங்கள் மக்களுக்கு எட்டாமலே திட்டமிட்டு முடி மறைக்கப்பட்டன.

ஒவ்வொரு மனிதனுக்கும் தனது கருத்தை கூறுவதற்கும், தனது கருத்திற்காக ஸ்தாபனம் அமைப்பதற்கும் உரிமை உண்டு. இந்த உரிமையை இழந்துள்ள இலங்கை தமிழர்கள், இலங்கையில் மட்டுமின்றி தாம் பரம்பல் அடைந்த நாடுகளிலும் இவ்வுரிமையை இழந்து வாழ்கின்றனர். மக்கள் இந்த ஜனநாயக உரிமையை பறித்தெடுப்பதில் புலிகளே பிரதான பங்கை வகிக்கின்றனர்.

பிற நாட்டிற்கு பல்வேறு பட்ட காரணங்களால் புலம் பெயர்ந்து அகதிகளாக வந்திருந்தும் கூட, தமது சுயலாபங்களுக்காக புலிகள் "தமிழ் மக்கள் இங்கும் இருப்பதனுல் யாழ்பாணம் என நினைத்துக் கொண்டு" இங்கும் தமது அராஜக நடவடிக்கைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளனர். தமது இருப்பிற்கு எதிரான எந்த வகைப்பட்ட நிகழ்வுகளையும் மிரட்டவோ அடிபணியாது போனுல; தாக்கவோ முயற்சித்துள்ளார்கள்.

> எந்த ஓர் முடிவையும் விமர்சிக்க முன்பு, அது சம்பந்தமான அறிவைப் பெறுதல் அவசிய மானது, அடுத்து அந்த முடிவுக்கு மாற்றீடான இன்னமொன்றை, அல்லது காரியத்தை வழி நடத்த வேண்டிய வேலை முறையை தெரிவு செய்தல் முக்கியமானது.

உண்மைகளை எழுதினுல் கேள்விகள் கேட்டால் குறிப்பாக "தமிழ விடுதலைப் புலிகளை" விமர்சனம் செய்தால் அச்சுறுத்தலுக்கும் பிரச்சனைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டி ஏற்படும். உயிருக்கு உத்தர வாதம் இல்லை என்ற நிலைமைகளையும் மீறி தாயகம் ஆரம்பிக்கப்பட்ட போது அதன் ஆரம்ப இதழ்கள் சர்வ சாதாரண இந்திய வியாபார சஞ்சிகைகளை பிரதிபலித்தன. "தாயகம்" "உண்மை" "தேடல்" என்ற தாயகத்தின் பதப்பிரயோகங்களுக்கும் பத்திரிகைக்கும் சம்பந்தம் இல்லை என்பதையே இந்த இதழ்கள் தெரிவித்தன.

ரஜனி காந் சாமியாராகிறர், ராஜேந்திரர் வீட்டில் திருட்டு, விஜி கராத்தே கற்றுக் கொள்கிறர், விஜயகாந் கார் நொருங்கியது, சீதாவை திருமணம் செய்ய பார்த்தீபன் மறுப்பு, ராதிகாவும் பிரதாபும் இணைகிறர்கள் போன்ற செய்திகள் இந்த இதழ்களில் காணலாம். தன்னை ஜனநாயகப் பத்திரிகை என்று கூறிக் கொண்டு சீரழிவுப் பத்தி ரிகைகளின் பாதையில் இது செல்வதை வெளிப்படுத்தியது.

இச் சமயத்தில் ஒரு அரசியல் சமூக அக்கறையுடன் பத்திரிகை ஒன்றின் தேவையை உணர்ந்து கொண்டு ஆனுல் அதற்கான வசதியற்றிருந்த சிலர் உண்மை, தேடல், தாயகம் போன்ற குறியீடுகளின் வெளிப்பாட்டினுல் தாயகம் பத்திரிகையுடன் தம்மை இணைத்துக் கொண்டனர். (பின்னர் ஏற்பட்ட முரண்பாடுகளினுல் இவர்கள தங்களை சுயவிமர்சனம் செய்து வெளி யேறினர்) இவ் இணைவுக்குப் பின் தாயகம் பத்திரிகையின் உள்ளடக்கம் மாறத் தொடங்கியது. சினிமாச் செய்திகள் அற்றுப் போயின. தாயகம் சாதரண பத்திரிகை என்பதைவிட ஒரு வித்தியாசமான கண்ணேட்டத்துடன் பார்க்கப்பட்டது. தாயகம் ஒரு குழு என்றும், புலிகளுக்கு எதிரான மாற்று ஸ்தாபனம் என்று கருதுமளவுக்கும் அபிப்பிராயங்கள் தோன்றியுள்ளன. தாயகம் மூன்று ண்டுகளை கடந்து விட்ட நிலையில் இக் கருத்து நிலை மேலும் வளர்ந்துள்ளது. தாயகமே இதற்கு பதில் சொல்ல வேண்டிய நிலைமைக்கு இட்டுச் சென்றுள்ளது.

உண்மையிலேயே தாயகம் ஒரு பத்திரிகை மட்டுமே. பத்திரிகை என்ற வரையறைக்கும் அப்பால் குழுவாகவோ, அமைப் பாகவோ தாயகம் இருக்கவில்லை என்பதுடன் அத்தகைய நோக்கம் எதையுமே தாயகம் கொண்டிருக்குவில்லை என்பதே உண்மை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'எய்ட்ஸ்' பற்றி நாம் தெரிந்து கொள்வோம்



'எய்ட்ஸ்' பற்றிய தகவல்கள் நாளுக்கு நாள் மாறிக் கொண்டு வருகிறது. எய்ட்ஸ் பற்றிய ஆராய்ச்சிகளின் முன்னேற்றங்களும், 'எய்ட்ஸ்' ஆல் பாதிக்கப்பட்ட மக்களின் தொகை போன்ற சில விடயங்களே அடிக்கடி மாறுகின்றன

ஆனால் 'எய்ட்ஸ்' சைப் பொறுத்தவரை மற்ற விடயங்கள் தொடக்கத்திலிருந்து மாறவில்லை அதாவது எப்படி 'எய்ட்ஸ்' தொற்றுகிறது என்பதோ அல்லது 'எய்ட்ஸி'லிருந்து எப்படிப் பாதுகாப்பது என்பதோ மாறவில்லை.

**2, எய்ட்ஸ் என்றால் என்ன?**

எய்ட்ஸ் என்பது HIV என்று சொல்லப் படும் 'வைரசினால்' உண்டாகும் நோய். (HIV - HUMAN IMMUNEDIFICIENCY VIRUS மனித நோய்த் தடுப்பு சக்தி பற்றாக்குறை வைரஸ்) இந்த வைரஸ் உடலில் இருக்கும் தடுப்பு முறைகளின் ஒரு பாகத்தை அழித்துவிடும். எய்ட்ஸ் வியாதி உள்ளவர்கள் அசாதாரண தொற்று நோய்களையோ, அரிதாக ஏற்படும் சில புற்றுநோய்களையோ எதிர்க்கும் சக்தி இல்லாது இறந்து போவர்.

**3. வைரஸ் இருக்கும் எல்லோருக்கும் "எய்ட்ஸ்" இருக்குமா?**

இல்லை. HIV வைரஸ் தொற்றியிருக்கும் பலருக்கு இவ்வியாதியின் அறிகுறிகள் தோன்றுவதில்லை. ஒரு முறை வைரஸ் ஒருவருக்கு தொற்றுமாயின் ஒரு சில மாதங்களிலிருந்து பத்து வருடங்களுக்குள் நோயுற்று விடுவர். ஆயினும் வைரஸ் இருக்கும் அநேகர் கடைசியில் நோயாளியாகி விடுவர்.

**4. வைரஸ் எப்படி பரவுகிறது?**

இந்த வைரஸ் இரத்த மூலமாகவும், ஆண்விந்து அல்லது பெண் உறுப்புக்களிலிருந்து சுரக்கும் நீர் மூலமோ ஒருவரிலிருந்து மற்றவருக்கு இரண்டு வழிகளில் கொண்டு செல்லப்படும்;

* வைரஸ் தொற்றியுள்ள ஒருவருடன் உடலுறவு கொள்வதால் 'வைரஸ்' கலவி மூலம் (யோனி அல்லது குதம் மூலமாக) ஒருவரிலிருந்து மற்றவருக்குக் கொண்டு செல்லப்படும்.

* 'வைரஸ்' உள்ளவர்களுக்கு பாவித்த ஊசி அல்லது சிரிஞ்சை திரும்ப பயன்படுத்துவதால், அதிலிருக்கும் இரத்த மூலம் 'வைரஸ்' பரவும். இந்த வைரஸ் தொற்றியிருக்கும் பெண்கள், தங்கள் குழந்தைகள் பிறப்பதற்கு முன்பே கருவிலிருக்கும் சிசுவுக்கு பரப்பலாம். இதைவிட தாய்ப்பால் ஊட்டுவதன் மூலமும் பரவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**5. யாருக்கு 'எய்ட்ஸ்' நோய் தொற்றும்?**
யாரும் 'எய்ட்ஸ்' நோயால் பீடிக்கப் படலாம். கனடாவில் அதிகமாக ஆண்களில் 'எய்ட்ஸ்' நோய் காணப்ப டுகிறது. ஆபிரிக்கா தேசத்தில் ஆண்கள் அளவு பெண்களுக்கும் 'எய்ட்ஸ்' நோய் உண்டு. பாலியல் உடலுறவு மூலமும் ஆண்களிலிருந்து ஆண்களுக்கோ, ஆண்களிலிருந்து பெண்களுக்கோ, பெண்களிலிருந்து ஆண்களுக்கோ, பெண்களிலிருந்து பெண்களுக்கோ வைரஸ் கொண்டு செல்லப்படும். சட்ட விரோதமான போதை மருந்தை ஏற்றுவதற்கு பயன்படுத்தப்பட்ட ஊசியை மற்றவர்கள் பாவிப்பதன் மூலம் சிலருக்கு 'எய்ட்ஸ்' நோய் பரவுகிறது.

**6. எப்படி 'எய்ட்ஸ்' வைரஸ் ஒருவருக்கு இருக்கிறதென்பதை அறியமுடியும்?**
உங்களால் அறியமுடியாது. எத்தனையோ மனிதர்கள் வைரஸ் இருந்தும் நல்ல ஆரோக்கியத்துடன் பார்வைக்கு நல்ல திடகாத்திரமாகவும் இருக்கிறார்கள். தங்களுக்கு வைரஸ் இருக்கிறதென்று அவர்களுக்கே தெரியாமல் இருக்கும். ஆனால் அவர்கள் மூலம் வைரஸ் மற்றவர்களுக்கு பரவலாம்.

**7. எவ்விதமாக என்னை நான் HIV/ 'எய்ட்ஸ்' வைரஸ் வராதபடி பாதுகாக்க முடியும்?**
நீங்கள் வைரஸ் எப்படி பரவுகிறதென்று விளங்கிக் கொள்வதன் மூலமும், ஆபத்து ஏற்படுத்தக்கூடிய செயற்பா டுகளில் ஈடுபடாமலிருத்தலாலும் தற்பாதுகாப்பு அளிக்க முடியும்.
கூடிய பாதுகாப்பாக இருக்க;
* பாலியல் உடலுறவுகளைத் தவிர்த்து நடத்தல்.
* உடலுறவில் ஒருவருடனே மட்டுமே இருத்தல், அவ்வொருவரும் 'எய்ட்ஸ்' நோயினால் பீடிக்கப்படாதிருக்க வேண்டும்.
* ஊசி வழியாக போதை மருந்து எடுத்த ஒருவருடன் பாலியல் கலவி கொள்ளும்போது, பாதுகாப்பற்ற முறையில் செல்ல வேண்டாம்.
* பலருடன் பாலியல் உடலுறவு கொண்டிருக்கும் ஒருவருடன் பாலியல் உடலுறவு கொள்ளும்போது பாதுகாப்பற்ற முறையில் கொள்ள வேண்டாம்.
* வியாதி இருந்தவர்களோடோ அல்லது முன்பின் தெரியாத ஒருவருடன் பாலியல் உறவு கொள்ளும்போது திரவப்பசை நுரை (LATEX CONDOM) கொண்ட அடிப்பாகமுள்ள பாதுகாப்பு உறை பாவிக்கவும்.
* போதை மருந்தை ஏற்றுவதற்கு ஊசிகளை பாவிக்க வேண்டாம். போதை மருந்துப் பழக்கத்தை கைவிடுவதற்கு உங்கள் வைத்தியரிடம் ஆலோசனை பெறவும். போதை மருந்தை நீங்கள் பாவிக்க வேண்டி வந்தால் மற்றவர்கள் பாவித்த ஊசியையோ அல்லது உபகரணங் களையோ பாவிக்க வேண்டாம்.

**8. வைரஸ் உள்ளவர்களுக்குப் பக்கத்தில் இருப்பதாலோ அவர்களைத் தொடுவதாலோ எனக்கு வைரஸ் தொற்றுமா?**
இல்லை. 'எய்ட்ஸ்' வைரஸ் என்பது மக்களுடன் சாதாரணமாக தினசரி பழகும் முறைகளினால் தொற்ற மாட்டாது.
பின்வருவனவற்றிலிருந்து உங்களுக்கு வைரஸ் தொற்ற மாட்டாது:
* தொலைபேசி
* மலசலம் கழிக்கும் இருக்கை
* நீச்சல் குளம்
* வாவி அல்லது குளம்
* கட்டி அணைத்தல்
* மற்றவர்களின் உணவுப் பாத்திரங்கள், கிளாஸ் பாவிப்பதால்
* மின்சார வண்டி, பஸ்

**9. நுளம்புகளிலிருந்து எனக்கு 'எய்ட்ஸ்' தொற்றுமா?**
இல்லை. 'எய்ட்ஸ்' வைரஸ் பூச்சிகளால் பரப்பப்படுவதில்லை. ஒரு பூச்சிக்குள் வைரஸ் பெருகுவதற்கு வழியில்லை. ஆனபடியால் இரத்தம் குடிக்கும் பூச்சிகள் கூட தொற்ற வைக்க முடியாது.

**10. 'எய்ட்ஸ்' வைரஸ் எச்சிலில் இருப்பதாக நான் கேள்விப்பட்டேன். முத்தம் இடுவதன் மூலம் எனக்கு 'எய்ட்ஸ்' வருமா?**
'எய்ட்ஸ்' தொற்றியிருக்கும் மனிதரின் எச்சிலில் 'எய்ட்ஸ்' வைரஸ் வெகு சொற்பமான அளவிலேயே காணப்பட்டி ருக்கிறது. ஆனாலும் உலகம் முழுவதிலுமிருந்து கிடைத்த ஆயிரக் கணக்கான உறுதிப்படுத்தப்பட்ட 'எய்ட்ஸ்' அறிக்கைகளின்படி ஒருவருக்காயினும் 'எய்ட்ஸ்' வைரஸ் முத்தமிடுவதால் தொற்றவில்லை. இதுவரைக்கும் எவருக்காயினும் 'எய்ட்ஸ்' வைரஸ் முத்தம் இடுவதால் பரவவில்லை.

**12. நான் தொடர்ச்சியான ஒரு உறவில் இல்லை. நான் 'எய்ட்ஸ்' பற்றி கவலைப்பட வேண்டுமா?**
ஆம். 'எய்ட்ஸ்' பாலிய உடலுறவு மூலம் பரவும் ஒரு நோய். நீங்கள் கவனமாக இருத்தல் வேண்டும். நீங்கள் பாலியல் உறவில் அதிக நாட்டமுள்ள வராயிருந்தால் எப்பவும் லேட்டக்ஸ் பாதுகாப்பு உறை பாவிக்க வேண்டும். அல்லது பாலியல் உறவை தவிர்ப்ப தற்கும் அதே நேரத்தில் அன்பைச் செலுத்துவதற்கும் வேறு வழிகளைக் கண்டு பிடிக்கவும்.

**13. எனக்கு ஐந்து வருடங்களுக்கு முன்பு இரத்தம் ஏற்றப்பட்டது. நான் 'எய்ட்ஸ்' பற்றி கவலைப்பட வேண்டுமா?**
1985ம் ஆண்டுக்கு முன்பு விஞ்ஞானிகள் 'எய்ட்ஸ்' வைரஸுக்கு பரிசோதனை செய்யாத காலத்தில் இரத்தம் ஏற்றுவதன் மூலம் வெகு சொற்ப வீதமானோருக்கே 'எய்ட்ஸ்' நோய் பரப்பப்பட்டது.

**14. நான் சத்திர சிகிச்சைக்குப் போகிறேன். இரத்தம் ஏற்ற வேண்டி நேரிடக்கூடும். நான் 'எய்ட்ஸ்' பற்றி கவலைப்பட லேண்டுமா?**
1985ம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் கனடிய செஞ்சிலுவைச் சங்கம் கிடைக்கும் இரத்த தானங்கள் எல்லாவற்றையும் பரிசோதனை செய்கின்றது. வைரஸின் அறிகுறி கண்டால், அவ் இரத்தம் ஒருக்காலும் பாவிக்கப்படுவதில்லை. அப்படி இருந்தும் பரிசோதனையில் தென்படாமல் 'எய்ட்ஸ்' வைரஸ் சில சமயங்களில் எப்படியாவது செல்லக்கூடிய வாய்ப்பு உண்டு. ஆனால் அப்படி நடப்பது மிக அரிது.

**15. இரத்த தானம் கொடுப்பதன் மூலம் எனக்கு 'எய்ட்ஸ்' வருமா?**
இல்லை. இரத்தம் எடுப்பதற்கு பாவிக்கும் ஊசி நன்கு சுத்திகரிக்கப்பட்டது. அவற்றை ஒரு முறை பாவித்தவுடன் எறிந்து விடுவார்கள்.

**16. 'எய்ட்ஸ்' உள்ளவர்களுக்காகவும், வைரஸ் உள்ளவர்களுக்காகவும் நான் என்ன உதவி செய்யலாம்?**
'எய்ட்ஸ்' வைரஸ் உள்ளவர்களை உங்களுக்கு சில நேரங்களில் இன்னும் தெரியாமலிருக்கலாம். ஆனால் ஒரு நாளைக்குத் தெரிய வரலாம். பயப்பட வேண்டாம். சூழ்நிலையைப் புரிந்து கொள்ள முயலுங்கள். அந்த ஒருவர் இறக்கும் வியாதி உள்ள ஒருவரைப் போல் துயரத்திற்கும், பயத்திற்கும் உள்ளாகிக் கொண்டிருப்பர். அவனோ அவளோ உங்கள் நற்குணத்தையும் கவலையையும் பாராட்டுவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரளயம்

சகாப்தன்

வாழ்வு பற்றி
இப்போதைக்கு
எதுவும்
சொல்வதற்கில்லை
முன்னரைவிட
அசிங்கமாக
அவலட்சணமாக....

எங்கள் மக்கள்
பரவலாய் பரவினர்
எங்கள் மண்ணோ
மாமிசம் உண்டது

துப்பாக்கி மட்டும்
அனைத்துக்கும் தலைவனாய்,
பொரிந்து போன
மிருகக் கூட்டங்கள்
முட்டி மோதின
எம்மைப் பற்றி
எவருக்கு அக்கறை ?

என்னமோ எல்லாம்
எமக்கு நடந்திடினும்
எஞ்சி இருப்பதோ
ஒரு சிறு துளி நம்பிக்கை
அதுவே பிரளயம்
ஆகிவிடும் என்பதில்
அசைக்க முடியாத நம்பிக்கை.

# அறிவது கேட்கின்.

சிவசேகரம்

இந்தத் தெருவழியே நடக்கையில்
அய்யாவின் தோளிற் தொங்கிய சால்வையும்
அம்மாவின் மார்பை மூடிய ரவிக்கையும்
பருத்திச் சீலைதான். என்றாலும்
சரிகை வைத்த பட்டைவிட அழகானவை.

என் அம்மாவும் அய்யாவும்
எனக்கு வைத்த நீண்ட பேர்
மிகவும் பழையதுதான். என்றாலும்
எந்தக் கவிதையையும் விடக் கேட்க இனியது.

பாடசாலையில் நான் அமர்ந்த பழங்கதிரை
மலிவான பலகைதான். என்றாலும்
எந்தச் சிம்மாசனத்திலும் சிறப்பானது.

சிற்றுண்டிச்சாலையில் நான் உறுஞ்சும் கிண்ணம்.
உள்நாட்டுப் பீங்கான்தான். என்றாலும்
மணிபதித்த பொற்கிண்ணத்திலும் விலையுயர்ந்தது.

நான் நுழைகின்ற ஆலயமோ
உலகப் புகழ் பெற்றதல்ல. என்றாலும்
மதுரையையும் தஞ்சையையும் விட மகத்தானது.

ஊர்க் கிணற்றில் அள்ளிக் குளிக்கின்ற நீரோ
உவர்ப்பானது. என்றாலும்
கங்கையையும் காவிரியையும் விடப் புனிதமானது.

ஏனென்று கேட்கிறாய்.

ஒவ்வொன்றும்
நானும் என் அம்மாவும் அய்யாவும்
பாட்டியும் பாட்டனும்
போராடி வென்றது ....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐக்கியத்திற்காக போராடுவோம் போராடுவதற்காக ஐக்கியப்படுவோம்

நெப்போலியன்

இன்றைய எமது இனப் பிரச்சினைக்கு பின்னனியில் எம் மத்தியில் தூவப்பட்ட இனத்து வேஷத்தை முக்கிய காரணமாகக் கூறலாம். தமிழர் கட்சிகளும் சரி, 1970களில் தமிழீழ கோஷத்தை எழுப்பிய தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் சரி இன விதை யைத் தூண்டுவதில் முக்கிய பங்கு வகித்தனர். இதே போன்றே சிங்களக் கட்சிகளும். 1977ல் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தமிழ் மக்களின் எதிரியாக சிங்கள மக்களை அறிமுகப் படுத்தினர். 1956ல் ஆட்சிக்கு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதன் பின்னர் வந்த ஆளும் கட்சிகள் அனைத்தும் இதனையே செய்தனர். இதன் விளைவால் இரு இன மக்கள் மத்தியிலும் பகை மூண்டது. தற்பொழுது இவ்வாறே முஸ்லீம் மக்களும் அறிமுகப படுத்தப்படுகின்றனர்.

உண்மையிலேயே எமது எதிரி யார்? தமிழ், சிங்கள, முஸ்லீம் முதலாளி வர்க்கம். இவர்கள் அடையாளம் காட்டப்படுவதற்கு பதிலாக எமக்கு அறிமுகப்படுத்தப் பட்டவர்கள் சிங்கள மக்கள். வர்த்தக போட்டி, பொருளாதார நெருக்கடி, வேலையில்லாப் பிரச்சினை என்பனவே எமது பிரச்சினை களுக்கான முக்கிய காரணங்களாகும். இதைவிட 1900ன் ஆரம்ப கால கட்டத்தில் தொடர்ந்த தொழிலாள வர்க்க போராட்டங்கள் பிரித்தானிய அரசாங்கத்தை நிலைகுலையச் செய்தன. குறிப்பாக தமிழ், சிங்கள, முஸ்லீம், இந்திய தொழிலாளர்களுக்கிடையேயான ஒற்றுமை அவர்களை ஆட்டம் காண வைத்தது.

இத்தொழிலாளர்களுக்கிடையே யான ஒற்றுமையை உடைக்கவே பிரித்தானியரின் பின் ஆட்சிக்கு வந்த ஆளும் கட்சிகள் முயன்றன. குறிப்பாக 1970ல் ஆட்சிக்கு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டு முன்னணி ஆட்சியில் இலங்கை வங்கி ஊழியர்கள் தொடர்ந்து 40 நாட்களுக்கு மேலாக வேலைநிறுத்தம் ஒன்றில் ஈடுபட்டனர்.

சிங்களத் தொழிலாளர், தமிழ், முஸ்லீம் தொழிலாளிகள் மத்தியில் நிலவிய நாற்பது வருட வர்க்க ஒருமைப்பாடு முனைப்பாக காட்டப் படவும், நினைவு கூரப்படவும் வேண்டும். தொழிலாளர் இயக்கம் பொய்மை உணர்வுடனும் இனப் பற்றுடனும் திசை திருப்பப்படும் இன்றைய காலகட்டத்தில் பல வேலைநிறுத்தங்களை தொடர்ச்சியாக செய்து முதலாளித்துவ, காலனி த்துவ அரசுகளுக்கு எதிராக ஒரே வர்க்கமாக நின்று செயற்பட்ட அன்றைய காலகட்டம் நினைவு கூரப்பட வேண்டும்.

1929ம் ஆண்டில் நடைபெற்ற "ட்ராம்" வண்டித் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் குறிப்பிடத்தக்கது. இத்தொழிலாளர் "பெளரஸ்ட் சகோதரர்கள்" என்னும் கம்பனியில் வேலை பார்த்து வந்தனர். இவர் களுக்கு ஆதரவாக துறைமுகத் தொழிலாளர் இக்கம்பனியின் பொருட்களை ஏற்றவோ இறக்கவோ மறுத்தனர். மொத்தமாக 5 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். 950 பேர் காயமடைந்தனர். இதுபற்றி பிலிப் குணவர்த்தன குறிப்பிடுகையில் "சீரழிந்த முதலாளித்துவ சமூகத்தில் அதிகாரத்தை வெளியேற்ற முடிந்தது" எனக் குறிப்பிட்டார்.

தொழிலாள வர்க்கத்தின் ஒற்றுமையும் அதன் விளைவுகளும் எவ்வாறு இருந்தது என்று சற்று திரும்பிப் பார்ப்போமாயின் எமது எதிரி யார் என்பதை நாம் அடையாளம் காண்போம்.

பிரித்தானியர் எமது நாட்டை எம்மிடம் விட்டுச் சென்ற பொழுது பிரித்தாளும் கொள்கையையும் விட்டுச் சென்றார்கள். சிறுபான்மை யினருக்கு கூடுதலான கல்வியை அளித்து நிர்வாக வேலைகளில் அமர்த்தினார்கள். உதாரணமாக யாழ் ஒரு சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவில் 12 பாடசாலைகள் உள்ளன.

தேசிய பயிர்களுக்கு பதிலாக பணப்பயிரை பயிரிட்டார்கள். உ+ம் தேயிலை, இறப்பர், கொக்கோ என்பன. இவற்றை வெளிநாடுகளில் விற்று அப்பணத்தை தம் நாட்டிற்கு கொண்டு சென்றார்கள். இவற்றில் குறைந்த வேதனங்களுக்கு வேலை செய்வதற்கென இந்தியாவில் இருந்து தொழிலாளர்களை குடி யமர்த்தினார்கள். இவர்களின் வாழ்க்கைத்தரம் இன்னமும் இவ்வாறே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இது மாத்திர மல்ல கலாச்சார, மத ரீதியான மாற்றங்களை செய்து எம் மத்தியில் மாற்றங்களை ஏற்படுத்தினார்கள். ஏர் பிடித்த கைகள் பேனா பிடிக்கத் தொடங்கியது இக்காலத்திலேயே.

இரு இனங்களுக்கிடையில் திட்டமிட்ட முறையில் பகைமையை உருவாக்கினார்கள். உதாரணமாக 1875 1900 கால கட்டத்தில் பிரித்தானிய, வட தென்னிந்திய முதலீடுகள் இலங்கையின் கால னித்துவ பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தின. உண்மையில் இலங்கைத் தமிழரும், சிங்கள வரும், பிரித்தானியர் முஸ்லீம் களுடன் போட்டி போடக் கூடிய வகையில் இருக்கவில்லை. உள்நாட்டு வர்த்த கத்தில் புறக்கோட்டை அரிசி, புடவை வியாபாரத்தின் பெரும்பகுதி 73 நாட்டுக் கோட டைச் செட்டிக் கம்பனிகளில் தங்கியிருந்தது. பல சரக்கு விற்பனையில் 35 முஸ்லீம் கம்பனிகள் பங்குபற்றின. இவ் வருடத்தில் தமிழ் அல்லது சிங்களக் கம்பனிகள் ஒன்றுமில்லை. 1880ல் 86 செட்டிக் கம்பனிகளும், 64 முஸ்லீம் கம்பனிகளும் முதன்மை பெற்றன. 1890ல் குஜாரத்தைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சேர்ந்த புதிய முஸ்லீம் வர்த்தகக் கம்பனிகள் போரா, கோவூா, பேமன் போன்றோர் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் இடம் பெற்றனர். இவர்களே புதிய வியாபார முக்கியஸ்தர்களாக மாறி பிரித்தானியர்களின் கூட்டு பங்கு தாரர்களாகவும் அமைந்தனர்.

இதன் விளைவே 1915ல் சிங்கள முஸ்லீம் கலவரம் ஏற்பட்டது. 1929க்கும் 1932க்கும் இடையில் ஏரிக் கரையகம் (Lake House - 1929) கண்டி குயின்ஸ் ஹோட்டல் (1931) நடைபெற்ற வேலைநிறுத்தங்களில் வேலை நிறுத்தம் செய்வோருக்கு பதிலாக மலையாளிகளை வேலைக்க மர்த்தினர். இதனால் இலங்கையில் பிரித்தானியர்களால் குடியமர்த தப்பட்ட மலையாளிகளுக்கும், சிங்களவருக்குமிடையில் பகை மூண்டது.

1930களில்ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியால் பல தேயிலை இறப்பர்த் தோட்டங்கள் மூடப்பட்டன. இதனால் ஏற்பட்ட வேலையில்லாத் திண்டாட்டம் இனவெறியாக மாறியது. இந்தியர்கள் குடியேறியமையால் தம் வேலைகள் பறிபோயின என்ற மாயை வளர்க்கப் பட்டது. (இதே போன்ற ஓர் நிலைமைதான் தற்பொழுது கனடா விலும். உண்மையில் நாங்கள் இங்கு அகதிகளாக வந்தமையால்தான் பல தொழிற சாலைகள் மூடப்பட்டு பலர் வேலையிழந்துள்ளார்களா ? அல்லது அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றமா?)

1896, 1930ம் ஆண்டுகளுக்கிடையில் ஏற்பட்ட பல வேலை நிறுத்தங்கள் பிரித்தானிய அரசிற்கு ஓர் உதாரணமாக அமைந்தது. சலவைத் தொழிலாளர் (1896), யாழ் சுருட்டுத் தொழிலாளர் (1886), 'Times of Ceylon அச்சகத் தொழிலாளர் (1898), துறைமுகத் தொழிலாளர் (1901), கொழும்பு மாட்டு வண்டிக்காரர்கள் (1905), ரயில் வேலை நிறுத்தம் (1912), துறைமுகத் தொழிலாளர் (1920), முதலாவது பொது வேலை நிறுத்தம் (1923), இரண்டாவது பொது வேலை நிறுத்தம் (1933), டிராம் வண்டி வேலை நிறுத்தம் (1929), குறிப்பாக 1927ம் ஆண்டு துறைமுக வேலை நிறுத்தம் 3 வாரங்களாக 13,000 தொழிலாளர் கள் வேலைக்கு செல்லவில்லை.

மேற்குறிப்பிட்ட வேலைநிறுத்தங்கள் யாவும் தொழிலாளர்களு (தமிழ்,சிங்கள, முஸ்லீம்) க்கிடையே ஏற்பட்ட ஒற்றுமையின் விளைவே. இதனை உடைப்பதே பிரித்தானியரின் முதல் வேலையாகவும் இருந்தது.

சுதந்திரத்திற்குப் பின்னர் 60 களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் பொருட்களின் விலையை பெருமளவு உயர்த்தியது. இதே போன்று 1968 ம் ஆண்டு சர்வதேச நாணய நிதியத்தின் வற்புறுத்தலால் அரிசி மானியம் குறைக்கப்பட்டு ரூபாய் மதிப்பும் குறைக்கப்பட்டது. இதனால் விலைகள் உயர்ச்சியடைந்தன."

சிறுபான்மை இனங்களுக்கிடையிலான முரணபாடுகளுக்கு பின்வரும் காரணங்களை கூறலாம்.

(1) 1977ம் ஆண்டு தொடக்கம் வேகமடைந்த திறந்த பொருளாதாரக் கொள்கையால் சிங்கள, தமிழ், முஸ்லீம் வாணிப முதலீடுகள், கைத்தொழிலாளர்,பெருந்தொழில்கள் ஆகியவற்றிற்கிடையே ஏற்பட்ட போட்டிகள்.

(2)சிங்கள, தமிழ் உத்தியோகத்தர்களுக்கிடையே ஏற்பட்ட போட்டி.

(3) சகல இனங்களையும் சார்ந்த சிறு தொழில் செய்வோர், கடைக்காரர், குட்டி வியாபாரிகளுக்கிடையே ஏற்பட்ட போட்டி.

(4) குறைவாக உள்ள அரசாங்க வேலைகளுக்கு சிங்கள தமிழர்களுக்கிடையே ஏற்பட்ட போட்டி.

(5) பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் என்பனவற்றில் நுழைவதற்கான தீவிரப் போட்டி.

(6) பணவீக்கம், வேலையின்மை, வியாபாரப் போட்டிகள் என்பன குறிப்பிடத்தக்கன.

இவ்வாறு வளர்க்கப்பட்டுள்ள இன வெறியை காரணம் காட்டி சிங்கள தமிழ் உழைக்கும் மக்களின் ஒற்றுமை சாத்தியமில்லை என்ற கூற்று எவ் அடிப்படையில் தோன்றியது?

இம் முரண்பாட்டின் ஆரம்பத் தோற்றுவாய்களான வாக்குரிமை பறிப்பு, தனிச் சிங்களச் சட்டம் போன்றவை ஏன் கொண்டு வரப்பட்டவை?

இலங்கை காலனித்துவ அமைப்பிலிருந்து விடுதலை அடைந்த ஆரம்பக் கால கட்டங்களில் மலையக மக்களின் வர்க்க நிலை காரணமாக அவர்களின் வாக்குரிமையினால் 10க்கும் மேற்பட்ட இடதுசாரி உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்குத் தெரிவாயினர். அத்தோடு முழு இலங்கையிலும் இருந்து மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களில் 40% ஆனோர் இடது சாரிகளே தெரிவாயினர். இதனாலேயே மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. மேலும் மலையாளித் தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர், இந்திய வர்த்தகர்கள் போன்றவர்களுக்கு எதிரான தேசியவாதக் கோஷம் சிங்கள முதலாளித்துவ வாதிகளால் எழுப்பப்பட்டது. முதலாளித்துவ நிர்வாக அமைப்பு தன்னைப் பாதுகாப்பதற்கும், தன் சுரண்டலுக்கு ஏற்றவாறும் மக்களிடையே பல வீனங்களான தேசிய, மத, சாதிய வேறுபாடுகளைத் தோற்றுவிக்கிறது. இவ்வகையான மக்களிடையே உள்ள உண்மையற்ற முரண்பாடுகளை வளர்ப்பதனால் உண்மையான வேறுபாடானை வர்க்க வித்தி யாசத்தை அரசு மறைக்கின்றது. எனவே இன முரண்பாட்டின் அளவானது அதாவது இனவாதம் அதன் ஆரம்பக் கட்டத்தில் உள்ளதா? அல்லது வளர்த்து வெறியூட்டப்பட்டுள்ளதா? என்கின்ற நிலைமைகள் 'உண்மையான மக்கள் விடுதலையின்' நோக்கும் வேலைத் திட்டத்தின் அடிப்படைக்கருத்தியலை மாற்றுது. எந்த அளவில் உள்ள இனவாதமாயினும் அது உடைக் கப்படல் வேண்டும். இதற்கு மிகவும் அவசியமானது பொது எதிரியை இனங் காட்டல் ஆகும்.

உதாரணமாக இலங்கையில் இந்திய இராணுவம் நிலை கொண்ட காலங்களில் சிங்கள முதலாளித்துவ அரசுக்கும் சரி தமிழ்ப் பூர்சுவா விடுதலை அமைப்புகளுக்கும் சரி பொது எதிரி பிராந்திய ஆதிக்க வாதியாக இந்தியா தோற்றமளித்தது. அவ்வகையான பிரச்சாரத்தையே மக்களிடமும் கொடுத்தார்கள். இதன் மூலம் சிங்கள, தமிழ் மக்களிடையே பகைமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உணர்வு முற்றாக விடுபடா விட்டாலும் வெறித்தனமான மோதல்கள் தவிர்க்கப் பட்டிருந்தன.

வாழ்வில் பல பிரச்சினைகளை எதிர் கொள்ளும் மக்களுக்கு யாரை எதிரியாக இனங்காட்டப் படுகின்றார்களோ அவர்கள் மீதே எதிர்ப்புணர்வு ஏற்படும். சிங்கள, தமிழ் உழைக்கும் மக்களை ஒருவருக்கு ஒருவரை எதிரியாக்கிக் காட்டி ஏமாற்றித் தொடர்ந்தும் மோதவிட்டு அதன் மூலம் நாட்டைப் பிரித்து பின்னர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது என்பது பரிசீலிக்க வேண்டியதாகும்.

மற்றும் சமுத்திரனின் கட்டுரையின் சில பகுதிகளைப் பார்ப்பின் அவர் கூறுகின்றார்

(1) "ஒரு இனத்தை ஒடுக்கும் பிறிதோர் இனமும் தனது சுதந்திரத்தை இழந்து விடுகின்றது. தமிழ் மக்களைக் கொடுமையாக ஒடுக்கும் ஒரு அரசினால், சிங்கள மக்களையும் அடக்காமல் இருக்க முடியாது. தமிழ் மக்களின் உரிமைகளை மறுக்கும் ஓர் அரசினால் இறுதியில் சிங்கள மக்களையும் திருப்திப் படுத்த முடியாது. இன்று ஒடுக்குமுறைக்கு உள்ளாகிப் போராடும் தமிழ் மக்கள், நாளை போராடும் சிங்கள மக்களின் உடனடி நண்பர்கள் என்பதை திரைபோட்டு மறைத்துள்ளது."

(2) "அரசியல் நேர்மையும், புரட்சிகர சிந்தனையும் கொண்ட சகல சிங்களவர்களும் தமிழ் மக்களின் மத்தியில் உருவாகி வரும் தேசிய விடுதலை இயக்கத்தை ஆதரிக்காமல் இருக்க முடியாது"

(3) வரலாற்றுச் சூழ்நிலைகளால் தமிழ் மக்களிடையே ஜனநாயக உரிமைப் போராட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்பினையும், முற்போக்கு சிந்தனையையும் தொடர்ச்சியாக உள்வாரிப் படுத்தி வருகின்றது. இன்றைய அரசின் நடைமுறை அதன் சர்வதேச உறவுகள் தமிழர்களின் போராட்டத்தை மேலும் மேலும் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மை கொண்டதாக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

(4) சிங்கள முற்போக்காளர்கள் இதன் காரணத்தால் பெரும் தேசிய இனவாதத்தை எதிர்த்துப் போராட மேலும் சக்தி பெறுவார்கள். ஒவ்வொரு சிங்களச் சகோதரனின் ஜனநாயக உணர்வினை மனிதத்துவத்தினைப் பரீட்சிக்கும் போராட்டம் அமைந்துள்ளது. சிங்கள மக்கள் பெரும் தொகையில் இந்தப் பரீட்சையிலுந் தேர்வு பெறும் காலம் அவர்களினதும் தமிழ் மக்களினதும் விடுதலையின் வருகையினைப் பறைசாற்றும்.

மேற்கூறிய நாலு பகுதிகளுமே அவரின் கருத்துக்களில் முரண்பட்டவையாக காணப்படுகின்றன. மேற்கூறியவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்பின் அவற்றின் உண்மை நிலையினை அறிய முடியும்.

முதலாவது பகுதியில் கூறிய கருத்து சிங்கள மக்களும் சிங்கள இனவாத முதலாளித்துவ அரசினால் அடக்கப்படுகின்றார்கள் என்றும் இனவாதத்தினால் திரைபோட்டு மறைக்கப்பட்டுள்ளது என்றும் கூறுகின்றார். இக்கூற்றின் படி பார்த்தால் உண்மையாக ஏமாற்றப்பட்டு அடக்கப்படும் மக்களின் விடுதலையினையும் சேர்த்து எவ்வித வேலைத்திட்டமும் எந்த இயக்கத்தாலும் இது வரையும் வைக்கப்படாமல் இனவாதத்தினை எவ்வாறு ஒழிக்க முடியும்.

மற்றும் எம் தமிழ் மக்களிடையே உள்ள பிரிந்து போதல் என்னும் பதம் பிற்போக்குத் தனமான தேசியக் கலாச்சார வாதத்தினையே வளர்க்கின்றது, தாமே உயர்வான தமிழர் என்றும் வக்கிர உணர்வினை தோற்றுவிக்கின்றது. இந்த நிலைப்பாடு பாட்டாளி வர்க்க கலாச்சாரத் தேவையினை நோக்கி நிற்கும் உழைக்கும் தமிழ் பேசும் மக்களின் உணர்வினை மாற்றி தேசிய முதலாளித்துவவாதத்தை நோக்கித் திசை திருப்பும், இவ்வாறான வெளிப்பாடே மலையக முஸ்லீம் மக்களைத் தாழ்வாகவும், அவர்களின் அரசியல், வாழ் நிலைத் தேவைகளை உணராமலும் பெரும்பான்மைத் தமிழர்களால் ஒதுக்கப்படும் மனோநிலையினைத் தோற்றுவிக்கின்றது. இவ்வகையான வெளிப் பாடுகளில் சிலவே சாதி ரீதியாகவும், பிரதேச ரீதியாக மன்னார், வன்னி, கிழக்கு என்றும் மக்களைப் பிரிக்கின்றது. நாம் எல்லோருமே ஒடுக்கப்படும் இனம் என்றும் உன்னதமான பாட்டாளி வர்க்க சுபாவம் தமிழ் பேசும் மக்களிடையே ஒட்டு மொத்த வடிவமாக தோன்றாமைக்கான காரணம் என்ன?

தமிழ் மக்களிடையே முதலாளித்துவ தேசியவாதமே புரையோடியுள்ளது.

*சமுத்திரனின் சமீபத்திய கட்டுரை அ.ஆ.இ. வில் (நெதர்லாந்திலிருந்து வெளிவரும் சஞ்சிகை) வெளிவந்துள்ளது. அதல் அவரே கூறியுள்ளார். " தமிழ்த் தேசிய வாதம் தனது எதிரியான சிங்களத் தேசிய வாதத்தின் பிம்பம் போன்று சீரழிந்துள்ளது என நான் கருதுகின்றேன்" என்றும் பிறதொரு பகுதியில், "தமிழ் தேசிய வாதத்தின் அதி உயர்ந்த மேலாதிக்கத் தன்மையானது இனவாத பிற்போக்கு சிங்களத் தேசிய வாதத்தினைப் போன்றதாகும்" என்றும் கூறுகின்றார். இக்கருத்துகளும் இவரின் முன்னைய கருத்துக்களுடன் முரண்பட்டவையாக உள்ளன.*

மற்றும் அரசுக்கெதிரான போராட்டம் என்பது முதலாளித்தவ அழிவுக்கானதாகும். ஆனால் எமது தேசிய விடுதலைப் போராட்டம் அதனை உருவாக்க வழிசெய்யாது. எனவே "இன்று விடுதலையாகும் தமிழர்கள் நாளை போராடும் சிங்களவர்களுக்கு உடனடி நண்பர்கள்" என்றும் சமுத்திரனின் கூற்று எவ்வாறு சாத்தியமானது. எமது இன்றைய தேசிய விடுதலையினை பிரநிதித்துவப் படுத்துவது முதலாளித்துவத் தன்மை மிக்க குறுந் தேசிய வாதமே!

மேலும் இரண்டாவது பகுதியினைப் பார்த்தால் புரட்சிகர கருத்துகளை உடைய சிங்கள சக்திகள் தமிழ் தேசிய இயக்கத்தை அங்கீகரிக்காமல் இருக்க முடியாது என்பதே! தமிழ்த தேசிய இனத்தினுள் புரட்சிகர சக்திகள் புரட்சிகரமான சக்திகள் தங்களை வெளிப்படுத்தி வேலை செய்ய முடியாமைக்குக் காரணம் குறுந் தேசிய முதலாளித்துவ அமைப்புகள் என்பது வெளிப்படை. அதே போன்றே சிங்கள புரட்சிகர சக்திகளுக்கு சிங்கள முதலாளித்துவம் தடையாக உள்ளது. இருந்த போதிலும் யாழ் பல்கலைக் கழக மனித உரிமைகள் குழுவின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறிக்கையில் "தமிழ் மக்களிடையே முற்போக்கான சக்திகள் வெளிப்பட முடியாத இன்றைய நிலையில் தென்பகுதியில் பல முற்போக்கு சிந்தனை கொண்ட சக்திகள், பத்திரிகைகள் என்பன வற்றைக் காணக்கூடியதாக உள்ளன." என்று தெரிவிக்கின்றது. மேலும் ஓட்டு மொத்தமாக ஒரு சமூகத்தினுள் முற்போக்கான புரட்சிகர சக்திகள் இல்லை என்று எண்ணுவது முதலாளித்துவ தன்மை மிக்கதாகும்.

அடக்கப்படும் ஒரு சமூகமாகிய சிங்கள இனத்தினுள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ புரட்சிகர சக்திகள் உருவாகவில்லை என்பது இயங்கியல்புக்கு எதிரான பிற் போக்குக் கருத்தாகும். மற்றும், சிங்கள புரட்சிகர சக்திகள் ஆதரிக்கக் கூடிய அளவிற்கு தமிழ்ப் பூர்சுவா விடுதலை அமைப்புகளும், பிற்போக்குத்தனமான கட்டமைப்பிலேயே பிரிவது என்ற கோரிக்கையும் புரட்சிகரமானதா என்பது மறுபரிசீலனைக்குரியதாகும். மேலும் உண்மையான புரட்சிகர சிங்கள சக்திகளுடன் எந்த அளவிற்கு தமிழ் தேசிய விடுதலை அமைப்புகள் தொடர்பினை ஏற்படுத்தின என்பதும் கேள்விக்குரியதே! மற்றும் மூன்றுவது பகுதியினைப் பார்க்கும்போது தமிழ்த் தேசிய விடுதலை அமைப்புகள் வரலாற்றுச் சூழ்நிலைகளால் ஏகாதிபத்திய எதிர்ப்பையும் முற்போக்குச் சிந்தனைகளையும் உள்வாரிப்படுத்தி வருகின்றது என்ற கருத்து எமது விடுதலை அமைப்புகள் அமெரிக்க, ரஷ்ய ஏகாதிபத்தியங்கள் பற்றிய நிலைப்பாட்டையும், மொசாட், றோ போன்றவற்றின் தொடர்புகளை பற்றியும் மீண்டும் ஆராய்ந்தால் உண்மை புரியும்.

நான்காவது பகுதிக்கான கருத்தினைப் பார்ப்பின் எந்த ஒரு பகுதி மக்களையும் போராட்டத்திற்கு அணிதிரட்டப்படும் வேளையில் அவர்களின் சொந்தக் கோரிக்கையினை உள்ளடக்கினுல் மட்டுமே ஆதரவு பெறமுடியும். இது தவிர்க்கவியலாத ஒன்று. உதாரணமாக பாரிய தொழிலாளரின் போராட்டங்களில் கூட விவசாயிகள் பங்களிப்பு இருப்பதில்லை. ஓட்டு மொத்தமான உழைக்கும் மக்களின் கோரிக்கைகளின் போதே; தொழிலாளர், விவசாயிகள், ஊழியர்கள் போன்றோரின் பங்களிப்பு காணப்படும். இதே போன்று சிங்கள உழைக்கும் மக்களிற்குமான கோரிக்கை அற்ற போராட்டத்தில் அவர்களின் பங்கினை எதிர்பார்ப்பது நடைமுறை சாத்தியமற்றது. மேலும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் இரண்டு வகைப்பட்ட தன்மைகள் உண்டு.

1. தேசிய முதலாளித்துவத்தின் தேவைகளைச் சார்ந்திருத்தல்.

2. பாட்டாளி வர்க்கமான உழைக்கும் பெரும்பான்மையின் நலனைச் சார்ந்திருத்தல்.

தேசிய முதலாளித்துவக் கோரிக்கையின் தன்மைகள்

அ. தனது இனத்திற்கு விசேட உரிமைகள், அந்தஸ்துகள் தேவை என்ற ரீதியிலேயே இனப் பிரச்சினையை அணுகுகின்றது.

ஆ. பிற தேசிய இனங்களின் நிலை எதுவாயினும் தன் தேசிய நலனிற்கே உத்தரவாதம் தேடுகின்றது.

இ. பாட்டாளி வர்க்கத்திற்கு எதிராக மற்றத் தேசிய இனங்களின் முதலாளித்துவத்துடன் உடன்பாட்டுக்கு வருகின்றது.

ஈ. வர்க்கப் போராட்டத்தை பின் தள்ளி இனப் பிரச்சினையை கூர்மைப் படுத்துகின்றது.

பாட்டாளி வர்க்கத்தின் தேசிய கோரிக்கை அதிலிருந்து வேறுபட்டதாகும்.

அ. தேசியப் போராட்டத்தில் தேசிய முதலாளித்துவத்துடன் சேர்ந்து ஆதரவு வழங்கும்.

ஆ. அதே சமயம் ஒடுக்கப்படும் இனத்திற்கென விசேட உரிமைகள் கோருவதை எதிர்க்கும்.

இ. ஒரு நாட்டில் உள்ள எல்லாத் தேசிய இனங்களிற்குமான சுயநிர்ணயக் கோரிக்கைக்காகப் போராடும்.

ஈ. சுயநிர்ணய உரிமை கோரும் அதேவேளை பாட்டாளிகளின் ஐக்கியத்தினையும் வலியுறுத்தும்.

உ. பிரிவினையோ, சுயநிர்ணய உரிமையோ அல்லது இனப் பிரச்சினைக்கான எந்தத் தீர்வையும் பாட்டாளி வர்க்க நலனின் பக்கமிருந்தே நோக்கும்.

ஊ. தேசியம், முதலாளித்து வத்துடன் தோன்றி முதலாளித்துவத்தின் முடிவிலேயே முடியும். எனவே பாட்டாளி வர்க்கம் இனவாதத்தினை ஒழிக்க வேலை செய்யும்.

பாட்டாளிகளின் தேசியக் கோரிக்கைக்கான விடுதலை அமைப்புகளோ அல்லது அகச் சமுதாயச் சூழலோ எம்மிடம் இதுவரை பெரிய அளவில் இல்லை. எனவே முதலாளித்துவ அமைப்பிலேயே பிரிவது எவ்வகையானது? இதனை விரும்புவர்கள் ஐரோப்பிய இனங்களின் சுதந்திரமான தேசிய முதலாளித்துவ வளர்ச்சியினை உதாரணம் காட்டுகின்றனர். அதே நேரம் வேறொன்றையும் மனதில் கொள்ளல் வேண்டும். ஐரோப்பிய இனங்களின் தேசிய முதலாளித்துவ வளர்ச்சி நடந்த அதேவேளை ஐரோப்பிய தேசிய முதலாளித்துவம் அடைந்த நன்மையைப் போன்று 10 மடங்கு அவலங்களையும்; சுரண்டல்களையும் நவ காலனித்துவ முறை மூலம் 3ம் மண்டல நாடுகளுக்கு வழங்கின இதுவும் ஐரோப்பிய தேசிய முதலாளித்தவ வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தது. இம்முறையை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள் வோமானுல் நாம் எப்படி சோசலிசத்தை ஆதரிக்க முடியும். இதுவே மற்றைய தேசிய இனங்களினைச் சுரண்டுவதை அங்கீகரிக்கின்ற தல்வா?

மற்றும் பிரிவினைக் கோரிக்கை முதலாளித்துவத் தன்மையிலேயே தமிழ்ச் சக்திகளிடம் உள்ளதால், ஓர் உண்மை வெளிப்படை! அதாவது முஸ்லீம் மக்களை அணிதிரட்ட முடியாமையும், மலையக மக்களிடம் காலூன்ற முடியாமையும் ஆகும். மலையக, முஸ்லீம் மக்களின் வாழ்நிலைத் தேவைகளை அரசியல்த் தேவைகளை கணக்கில் கொள்ளாததால் அவர்களை தேசிய இனமாகத் திட்டவட்டமாக கூறுமல் தனித்துவம், மதக் கலாச்சாரம் என்று மழுப்பி வந்தனர். அண்மைக் காலத்திற்கு முன்பு வரையும் இவர்களையும் தமிழ் பேசும் தேசிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனமாக ஒரே வேலைத் திட்டத்தினையே கொண்டிருந்தனர். இனியும் மாற்றுவார்களோ தெரிய வில்லை. சோசலிசத் தமிழீழம் அமைக்க எண்ணும் அமைப்புகளும் இக்கருத்தையே கொண்டிருந்தன.

மேலும் மலையக முஸ்லீம் இனங்களை அந்நியர்களாக்கி அவர்களின் தேவை பற்றி தமக்கு அக்கறையில்லை என்று தமது தேசிய நலனை மேலும் முதலாளித்துவத் தன்மையுடன் குறுக்கிக் கொண்ட னர். இதனை சமுத்திரனே கூறுகின்றார் "முஸ்லீம் மக்களின் சுயநிர்ணய உரிமை மீதான அபிலாசை மீது எவ்வாறு பழைய தமிழ் தேசியத் தலைமை ஓர் புத்திசாலித்தனமற்ற போக்கை கொண்டிந்ததோ அதே போக்கினை சில தமிழ்க் குழுக்கள் பெற்றுள்ளன" மேற்படித் தன்மைகள் தமிழ் தேசிய விடுதலை அமைப்புகள் தங்களின் கோரிக்கையானது முழுதான முதலாளித்துவ தேசியக் கோரிக்கை யாகவே இனங்காட்டியுள்ளன.

இவர்கள் பாட்டாளி வர்க்கக் கோரிக்கையான சக தேசிய இனங்களுக்குமான சுயநிர்ணய உரிமை கோசத்தினை முன்வைக்கவில்லை. தேசிய இனங்களுக்கான வரை யறைகளில் அரசியல், பொருளாதார வாழ்வு என்பதும், வாழும் பிரதேசம் என்பதும் வட கிழக்கு தமிழ் முஸ்லீம் மக்களிடம் இருந்து மலையக மக்கள் முற்றாக வேறுபடுவதால் அவர்கள் முற்றாகத் தேசிய இனமே! ஆனால் இன்னமும் இது சில தமிழ்க் குழுக்களால் அங்கீகரிக்கப்படவில்லை.

சிங்கள முஸ்லீம் மக்களை நேரடி எதிரியாக்கிய தனி நாட்டு கோரிக்கையும் தேசிய வாதமும் இலங்கை அரசு தொடர்ந்து நிலைப்பதற்குச் சார்பான நிலைகளை உருவாக்குகின்றது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் அரசு பாதுகாப்பிற்கான இராணுவ ஆட்சேர்ப்பு, தமிழ் பிரதேசங்களில் பெளத்த மத மேலாதிக்க ஊடுருவல் போன்றவற்றிற்கு உணர்வு பூர்வமாக சிங்கள மக்களின் ஆதரவினைப் பெறுகின்றது.

மற்றும் தமிழீழக் கோரிக்கையை முன்வைக்கும் விடுதலை அமைப்புகள் தேசிய விடுதலை தீர்வாக பிரிவினைக்காகப் போராடும் அதே நேரம் சோசலிசத்திற்கான கூட்டுமொனமாகிய கலாச்சார மாற்றங்களுக்கு எந்த வகையில் பங்காற்றினர்? உதாரணமாக கடற் தொழிலாளர், விவசாயிகள், சிறுகைத் தொழிலாளர் ஆகியோரின் நிலைபற்றி தீர்க்கமான ஆய்வு எதுவும் முன் வைக்கவில்லை. மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களாகிய சிறுபான்மைத் தமிழர் மீதான அடக்குமுறை பற்றியோ அதற்கான தீர்வுக்கான வேலைத் திட்டமோ தீர்க்கமோ எதுவும் இல்லை.

இவர்களால் எவ்வாறு சோசலிசக் கட்டுமானத்திற்கு உழைக்க முடியும். தேசிய விடுதலையில் கூட எவ்வளவு உளப்பூர்வமாக ஈடுபடுவார்கள் என்பது கேள்வி ?

1987ம் ஆண்டு சிங்களக் கவிஞரான ஜயவிருதானு என்பவரால் எழுதப்பட்ட கவிதை

**பனையும் தென்னையும்**

*தென்னை மரமொன்று*
*பனை மரத்தின் மீது*
*சரிந்து விழுந்தது*
*பனை மரத்தின் கழுத்து முறிந்தது.*
*"நான் அவனுடைய கழுத்தை முறித்துவிட்டேன்."*
*ஆணவமாகப் பேசி*
*திரும்பிப் பார்த்த பொழுது*
*தான் பூமியிலிருந்து பிடுங்கப்பட்டிருப்பது*
*தென்னை மரத்துக்கு தெரிந்தது.*

**ஐக்கியத்திற்காக போராடுவோம்.**
**போராடுவதற்காக ஐக்கியப்படுவோம்.**

## அப்பால் போ அப்பாலும்போ

நீரில் மூழ்கினன் சூரியன்
விழித்தது கோடை.
சுனை தேடியது நா
நடந்தது களைத்து வரண்டது
விசாலித்து உயர்ந்தது கண்
விழித்தது பின் முழிந்தது
மடிந்தனன் மனிதன்.

மனிதர் வந்தனர் கடிந்தனர்
தோண்டினர்,' பாறைகள் பிளந்தனர்
பிரிந்தது பூமி பரிந்தது ஊற்று
இழுத்தனர் இறைத்தனர்
குடித்தனர் குளித்தனர் களித்தனர்.

சூரியன் விரண்டனன்
"கோடை கொடிது
அதனையும் வெல்லும்
மனிதன் வலியவன்.
மனிதர் மடிவர் எனினும் எழுவர்"
என்றவன் புரிந்தனன்.

இருண்டது,' வானம் பொழிந்தது
விழித்தது மாரி.
நிறைந்தது வழிந்தது
தெரிந்தவை அமிழ்ந்தன
குடித்ததும் பெருத்தது வயிறு
முட்டியது; மூச்சு இழுத்தது
பின் மிதந்தது
மடிந்தனன் மனிதன்.

மனிதர் எழுந்தனர் வந்தனர்
நிரப்பினர் எழுப்பினர் கட்டினர்
அணைகள் நீண்டது தடுத்தது
மீண்டனர் வேய்ந்தனர் வாழ்ந்தனர்
விதைத்தனர் அறுத்தனர் பகிர்ந்தனர்.

மாரி நிலை குலைந்தனள்
"கொடுமைகள் அழுத்தினும்
கிளர்ந்தெழும்பார் மனித வாழ்வு.
மனிதர் இறப்பர் ஆயினும் இருப்பர்"
என்றவள் அறிந்தனள்.

பா.அ.ஜயகரன். 2ஆடி 1991



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எழுதாத கவிதை

எழுதுங்களே ன்,
நான்
எழுதா து செல்லும்
என்
கவிதையை
எழுதுங்களேன்!

ஏராளம்.....
ஏராளம்... எண்ணங்கள்
எழுத எழுந்து வர
முடியவில்லை!
எனவே எழுதாத என்
கவிதையை
எழுதுங்களேன்!

சீறும்
துப்பாக்கியின் பின்னால்
என் உடல்
சின்னாபின்னமாக்கப்பட்டு
போகலாம்
ஆனால்
என் உணர்வுகள்
சிதையாது
உங்களை
சிந்திக்க வைக்கும்.
அப்போது,
எழுதாத
என் கவிதையை
எழுதுங்களேன்!

மீட்கப்பட்ட எம்
மண்ணில்
எங்கள்
கல்லறைகள்
கட்டப்பட்டால் அவை
உங்கள்
கண்ணீர் அஞ்சலிக்கோ
அன்றேல்
மலர்வளைய
மரியாதைக்காகவே அல்ல!
எம் மண்ணின்
மறு வாழ்விற்கு
உங்கள் மன உறுதி
மகுடஞ்சூட்ட வேண்டும்
என்பதற்காகவே!
எனவே
எழுதாத
என் கவிதையை
எழுதுங்களேன்!

அர்த்தமுள்ள
என் மரணத்தின் பின்
அங்கீகரிக்கப்பட்ட
தமிழீழத்தில்
நிச்சயம் நீங்கள்
உலாவ வருவீர்கள்!
அப்போ

எழுதாத
என் கவிதை
உங்கள் முன்
எழுந்து நிற்கும்
என்னை
தெரிந்தவர்கள்...
புரிந்தவர்கள்....
அன்பு காட்டியவர்கள்...
அரவணைத்தவர்கள்
அத்தனை பேரும்

எழுதாது
எழுந்து நிற்கும்
என் கவிதையை
பாருங்கள்!
அங்கே....
நான்
மட்டுமல்ல...

– வானதி –




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இனியாவது புரிந்துகொள்வார்களா?

ராஜீவ் காந்தியின் கொலையின் பின் இந்தியாவில் இன்று இலங்கைத் தமிழ் அகதிகள் இந்திய, தமிழக அரசினதும், RAW, CBI போன்ற உளவு ஸ்தாபனங்ளினுலும் திட்டமிட்ட முறையில் **(சந்தர்ப்பந்தத்தை பயன்படுத்தி)** நெருக்கடிக்கு உள்ளாகுகிறார்கள். இது ஒன்றும் இந்திய மண்ணுக்கு புதிய விடயம் இல்லை. இந்திரா காந்தியின் கொலைக்குப் பின் சாதாரண சீக்கிய மக்கள் பயங்கரவாதிகளாக சித்தரிக்கப்பட்டு இந்தியக் குடிமகனில் இருந்து அந்நியப்படுத்தப்பட்டார்கள். இதில் எப்படி இந்திய ஆளும் வர்க்கம் வெற்றி கண்டதோ அதே போல் திட்டமிட்ட முறையில் ராஜீவ் காந்தியின் கொலையைச் சாட்டாக வைத்து தமிழ் மக்கள் விடுதலையைக் கொச்சைப்படுத்தவும், அதேநேரத்தில் தமிழ் மக்களை பயங்கரவாதிகளாகவும் சித்தரித்து போராட்டத்திற்கு தமிழகத்திலும், இந்தியாவிலும் இருந்த ஆதரவை இந்திய ஆளும்வர்க்கம் அழிக்கப் பார்க்கிறது. இந் நெருக்கடிகளில் இருந்து மீள தமிழ் அகதிகள் தமிழக மக்களிடமிருந்தும், அரசியல்வாதிகளிடமிருந்தும் பாதுகாப்பையும், ஆதரவையும் எதிர்பார்க்கிறார்கள். ஆனுல் இவ்வளவு காலமும் தமிழீழ விடுதலையை முன்னெடுத்தவர்களாக சொல்லிக் கொண்டவர்களால்: இனவாத அரசியல்வாதிகள், பிற்போக்கு இலக்கியவாதிகள், சிந்தனையாளர்கள், சினிமாக் காரர்கள், பத்திரிகைக்காரர்கள் ஆகியோரே தமிழ் பேசும் மக்களுக்கு காட்டப்பட்டனர்

உதாரணமாக தமிழீழம் சென்று வந்த (ஒன்றல்ல பல தடவை) நெடுமாறன், தளபதி வை.கோபாலசாமி, இன மானத்தலைவன் வீரமணி போன்றோரின் கவர்ச்சிகர பேட்டிகளினுலும், பேச்சுகளினுலும் தமிழ் பேசும் மக்களின் பாதுகாவலர்களாக காட்டிக் கொண்டு, தமிழக அரசியலில் "லாபம்" தேடினர். சாலை இளந்திரையன், கி.ஆ.பெ.விசுவநாதன் (தமிழக புத்திஜீவிகள்?) ஆகியோர் 2000 ஆண்டுகளுக்குப்பின் புறநானூற்றைப் புரட்டி அதில் தளபதி பிரபாகரனை தோண்டி எடுத்து தமிழ் மக்களுக்கு காட்டினர். (இதன் மூலம் தங்களுக்கு வீர உணர்வுகள் வந்ததாகவும் சொன்னுர்.)

கடந்தகாலங்களில் தமிழ் மக்களின் பிரச்சினைகளில் அதீத கவனம் காட்டுவதாகவும், மேற்கூறியவிதமாக மேடைப்பேச்சுகளில் காலங்களைக் கழித்தவர்கள் ராஜீவ் காந்தி மறைவுக்குப் பின்னர் மௌனமாகவும், ஓடி ஒளித்தும் இருக்கிறார்கள். இக்காலங்களில் தமிழ் மக்களின் உண்மையான நண்பர்கள் புரட்சிகர இளைஞர்



www.tamilarangam.net

முன்னணி (RYF), மக்கள் கலை இலக்கியக் கழகம், பு.வி.வி.தொ.மு, ம.உ.க, ம.க.க இந்திய ஆளும்வர்க்கத்தின் திட்டமிட்ட பிரச்சாரத்துக்கு (தமிழ் விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான உணர்வையும், தமிழ் பேசும் மக்கள் பயங்கரவாதிகளாகவும் சித்தரிக்கப்படுவதற்கும்) எதிராக தங்களது உழைப்பை செலுத்துகின்றனர். இவர்கள் அன்றிலிருந்து இன்றுவரை தமிழ் பேசும் மக்கள் விடுதலைப் போராட்டம் தொடர்பாக தெளிவான சமரசமற்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால் தமிழ் பேசும் மக்களின் விடுதலையை முன்னெடுத்த (LTTE. EPRLF. PLOT. TELO. EROS) வர்களால் இவர்கள் அடையாளம் காணமுடியாமல் போனது முன்னெடுத்தவர்களின் அரசில் வங்குரோத்தே ஒழிய தற்செயலானது அல்ல.

இன்று தமிழ் பேசும் மக்கள் தமிழகத்தில், அநாதையாக்கப்படும் சூழ்நிலையில் இவர்களின் அரசியல் நடவடிக்கைகளால் தமிழ் பேசும் மக்கள் மட்டுமல்ல தமிழ் மக்கள் விடுதலைப் போராட்டமும் அங்கீகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்காக அவர்கள் அரசியல் கூட்டு வேலைத் திட்டங்களில் இறங்கியுள்ளனர். **அகதிகளை வெளியேற்றாதே! போராளிகளை இழிவு படுத்தாதே!** என்ற முழக்கங்கலுடன் தமிழகம் முழுவதும் தெருமுனை கூட்டங்கள், சுவர் ஒட்டி போராட்டங்கள் மூலம் தமிழக மக்களுக்கு எடுத்துச் செல்கின்றனர். இத்திட்டங்களில் ஈடுபடும் தோழர்களின் கஷ்டங்கள்**

ரஜீவ் காந்தியின் கொலையின் பின் தமிழகம் ஒரு இருண்ட சூழலில் இருந்தது வருகிறது. இந்த நிலையில் காந்தியத்தின் மூலம் முற்போக்கு சக்திகளின் பத்திரிகைகள் மேல் அவசர காலச் சட்டத்தின் கீழ் செய்தித் தணிக்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் முதலாளித்தவ பத்திரிகைகள் மேல் இது நடைமுறையில் இருக்கவில்லை. ஏனெனில் அவர்கள் தங்களுக்குள் போட்டி போட்டு அரசு இயந்திரங்களின் செய்திகளையும், திரிபுச் செய்திகளையும் தங்களுடைய கற்பனை வளத்தின் (வழமை போல்) மூலம் வெளியிட்டு அரசுக்கான தமது விசுவாசத்தையும், அரசின் தேவைகளையும் பிரதிபலித்து வருகின்றனர்.

ஆனால் இதே பத்திரிகைகள் அன்றைய இந்திய அரசின் விஸ்தரிப்புவாதக் கொள்கைகளுக்கும் தமது சொந்தலாபத்துக்கு ஏற்ப தமிழகத்தில் தமது பிரச்சாரங்களை நடத்தினர். குறிப்பாக புலிகளின் தலைவர் பிரபாகரனின் படங்கள் அட்டைப் படங்களாகவும், தளபதி கிட்டுவின் தொடர் கதைகளையும் மற்றும் புலித்தலைவர்களின் பேட்டிகளையும், இவர்களை சந்தித்தவர்களின் பேட்டிகளையும் வெளியிட்டனர். இதன் மூலம் இப்பத்திரிகைகள் (ஜீனியர் விகடன், இந்தியா டுடே, தேவி, இந்து, ஆனந்த விகடன்) போலியாக தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையில் முன்னணி பாத்திரம் வகித்தனர். இதில் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றல் புலிகள் இவர்களுக்கு ஆதரதவாகவும், இசைவாகவும் நடந்து கொண்டமையே. (இது இவர்களின் அரசியல் வங்குரோத்து நிலைமையை மீண்டும் ஒரு முறை எமக்கு நிருபிக்கிறது.) இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை திரித்தும் மூடிமறைத்தும் பிரசுரிப்பதன் மூலம் தம்மை மிகத் தெளிவாக அடையாளம் காட்டியுள்ளனர். அ+து தமது தேவைகளுக்கு ஏற்ப எமது பிரச்சினைகளைப் பயன்படுத்தி சுயலாபம் அடைந்தனர்.

ஆனால் முற்போக்குப் பத்திரிகைகளோ அரசியல் வேலைத்திட்டங்களை வைத்து செயற்படுவதன் காரணமாக அவர்கள் மேல் மறைமுகமாகவும் நேரடியாகவும் காந்தியம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. உதாரணமாக புதிய ஜனநாயகத்தின் அச்சுப்பதிப்பாளர்களிடம் C.B.I. சென்று அச்சுறுத்தியதன் விளைவாக பதிப்பகத்தார் அச்சடிக்க மறுத்ததால் பத்திரிகையை இரண்டு பதிப்பு நிறுத்தப்பட்டது. ஆனால் தொடர்ந்தும் இப்பத்திரிகை தடைகளை மீறி மட்டுமல்ல C.B.I.யை அம்பலப்படுத்தும் முறையில் கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது.

வரலாறு இன்று நம்முன் சில பாடங்களை விட்டுச் சென்றுள்ளது. இதனை நாம் ஒழுங்காக பகுத்தாயா விட்டால் இதேவித பிழைகளை நாம் சந்திப்பது தவிர்க்க முடியாததாக இருக்கும். இன்றுகூட புலிகளின் சர்வதேசச் செயலாளர் கிட்டு ராஜீவ் காந்தி கொலையின் போது இந்தியன் எஸ்பிறஸ், தினமனிக்கு அளித்த பேட்டியில் *"தமிழ் நாட்டில் பல தீவிரவாத அமைப்புகள் செயல்படுகின்றன அவர்களில் சிலர் அதிகார பூர்வ பத்திரிகைகள் கூட நடத்துகின்றனர். 'புதிய கலாச்சாரம், புதிய ஜனநாயகம்' இவைகள் எல்லாம் லண்டனில் கூட வினயோகிக்கப்படுகிறது. ரஜீவ் கொலை ஆசாமி குருதா அணிந்தவர் இவர்களின் நிருபராகவும் இருக்கலாம் அவர் இலங்கை ஆசாமி போல் இல்லை, பரிச்சயம் ஆனவர் போல் தொரியவில்லை"* அதே வேளையில் புதிய ஜனநாயகம் பத்திரிகை இக்கொலையை "படுகொலையல்ல! அரசியல் பழிவாங்கல்" என்று கூறியது குறிப்பிடத்தக்கது. (லண்டனில் புலிகள் புதிய ஜனநாயகத்தின் நிலைப்பாட்டை பிரதி எடுத்து மக்களிடம் கொடுத்தனர்) ஆகவே இவர்கள் (புலிகள்) தமது கொல்கையில்ல அரசியல் வங்கிரோத்துத் தனத்தால் தமிழ் பேசும் மக்களின் நன்பர்களை காட்டிக் கொடுப்பது மட்டுமில்லாமல் தமிழ் பேசும் மக்களுக்கும் துரோகம் இழைத்துள்ளனர். இந்த இக்கட்டான சூழ் நிலையில் இநிதியாவில் இருக்கும் தமிழ் பேசும் அகதி மக்களுக்கு பாதுகாப்பும், இவர்களின் போராட்டத்திற்கான அங்கீகரிப்பும், அதற்காக குரல் கொடும் சக்திகளை இனம் கண்டு அவர்களுடன் கைகோர்ப்பதே எமது விடிவுக்கு வழி.

*கி.சே.ச*






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிவரமணியின் கவிதை

மாலை நேரங்களில்
எல்லாச் சுமைகளும் அதிகரித்துப் போய்விடும்.

செத்துப்போன பகல்களின் மீது
தவிர்க்க முடியாத படி
உரசிக் கொண்டிருந்த ஒளியும் வெப்பமும்
சிலேட்டில் கிறுக்கப்பட்ட எழுத்துக்களைப்போன்று
அடையாளமற்று அழிந்து மறையும்போது
எனது மூச்சை
எண்ணி எண்ணி வெளியே விடுவது
நேரத்தைப் போக்க மட்டுமல்ல.



விளக்கின் அருகில்
ஈசல்கள் ஒவ்வொன்றாகா விழுந்து இறந்துகொண்டிருந்தன.
எதை என்னுவது புத்திசாலித்தனம்
ஈசல்களையா?
இறந்துபோனவர்களின் கண்களைப்போன்று
விளக்கமற்ற அர்த்தங்களை
விடுத்துக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களையா?

எனக்கு உண்மைகள் தெரியவில்லை.
பொய்களை கண்டு பிடிப்பதும்
இந்த இருட்டில் இலகுவான காரியமில்லை.
ஆனால்,
பரீட்சைக்குப் புத்தகம் படிக்கும்
என் தங்கையிடம்
உனது பழக்கத்திற்கான
அர்த்தங்களை தேடு என்று கூறமுடியாது.

என்னிடம்
ஒரு துண்டுப் பிரசுரத்தைப் போல
நம்பிக்கையும் முடிவும் சொல்லத்தக்க
வார்த்தைகள் இல்லை.

இரவு
இரவினால் அதிகாரமிடப்பட்டால்,
நாளைக் காலையில் சூரியன் உதிக்குமா என்பதில்கூட
சந்தேகம் கொண்டுள்ள என்னிடம்
கனவுகள்.
தம் அர்த்தத்தை இழந்தவைதான்.

இந்தச் சமூகத்தின் தொப்புள் கொடிக்கு
துப்பாக்கிநீட்டப்படும்போது
ஒரு மெல்லிய பூ நுனியில்
உட்காரக்கூடிய
வண்ணத்துப் பூச்சியின் கனவு
எனக்கு சம்பந்தமற்ற
ஒரு சம்பவிப்பு மட்டுமே.




நான் மனிதனாய் வாழும் முயற்சியில்
பூக்களை மரத்துடன் விட்டுவிட விரும்புகிறேன்.
எனக்கு
பகலால் உருவாக்கப்பட்டு அழகிய இரவு
கனவாய் உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு அகதியின் பாடல்



என்
அன்பான தாய்நாடே
போய்வருகிறேன் விடைகொடு
நீலக் கடல் பரப்பின்
வெண் அலைத் திரளில்
எல்லாம் இழந்து
எம்மை மட்டும்
கொண்டு செல்கிறோம்
அகதிப் படகில் ...

பிலாத்துவின்
முன்னே
மௌனம் சுமந்த
இயேசுநாதரைப் போல்
இராணுவமுகாமில்
பிலாத்துக்களின்
முன்னே
எங்கள் மௌனம் ...

எங்கள் தேகத்தை
ரணமாக்கி
எங்களைப் பிணமாக்கிய
செய்திகளைக்
கூறிக் கொண்டு நாங்கள் ...

வானத்தில் வட்டமிடும்
வல்லூறுகள்
கோழிக் குஞ்சுகளைத்
தேடுவது போல்
எங்கள் தேசத்தின்
எங்கள் இராணுவமே
எங்களைத் தேடி
அலையும் ...

பனைமரங்களின் ஊடே
பவனி வந்த ....
செம்மண் பாதைகளில்
கிராமத்துத் தெருக்கள்
வழியே
பாதங்கள் சிவக்க சிவக்க
'அவள்களின்' பின்னே
அலைந்த காலங்கள்
எல்லாம் பறித்து
எங்கள் சொந்தம்
எல்லாம் சிதைத்து....

எங்கள்
உயிர் பறிக்கும்
இராணுவத்தின்
தலைகளில் தப்பி
எங்கள் மண்ணைவிட்டு
ஓடுகின்றோம்...

தூரத்தில்
வடலியின் தலை
புள்ளியாய்த் தெரிகிறது...

எனது மண்ணை
இந்தப் பயணம்
எங்கள்
உயிரின் நிலையை
உத்தரவாதப்படுத்திக் கொள்ள
இது முடிவல்ல
ஆரம்பம்
விரைவில் வருவோம்
விரைவில் வருவோம்
எங்கள் மண்ணில் ...
நாங்கள் வாழ.

—வி. மைக்கல் கொலின்ற்—



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "சுழலும் வாழ்க்கை சக்கரத்தில்"

மார்க்சியம் உலகைப் புரிந்து கொள்வதற்கு மட்டுமல்ல அதை மாற்றி அமைப்பதற்கும் வழிகாட்டும் தத்துவமாகும். பல்வேறு தத்துவப் போக்குகளுடையே முதன்முதலாக உலகைப் புரிந்து கொள்ளவும், மாற்றி அமைக்கவும் வழிகாட்டிய தத்துவம் மார்கசிசமே. மார்க்சிசம் என்பது வறட்டுக் கோட்பாடல்ல. வளரும் விஞ்ஞானமாகும். உலகில் புதிய நிலைமைகள் தோன்றும்போது அதை புரிந்து கொள்ளவும், புரட்சிகரமாக மாற்றி அமைக்கவும் அது வழிகாட்டுவதோடு அதுவும் வளர்ச்சியடைகிறது.

இருபது ஆண்டுகளுக்கு முன் தத்துவார்த்த போராட்டத்தை புறக்கணித்து கட்சியை கட்டவும் புரட்சியை நடத்துவும் முயன்றதன் விளைவு இன்று இருபது ஆண்டுகளுக்கு பின்னும் இந்திய கம்யூனிஸ்ட் புரட்சியாளர்கள் முன் அதே கடமை எதிர் கொண்டிருக்கிறது வரலாற்றுச் சக்கரம் 20 ஆண்டுகள் சுழன்று மீண்டும் அதே இடத்தில் ஆனுல், புதிய தேவைகளையும் சேர்த்துக் கொண்டு வந்து நிற்கிறது. வரலாறு அவசியமான போராட்டங்களை தவிர்த்துவிட்டு முன்னேறிவிட முடியாது என்ற உண்மை மீண்டும் ஒரு முறை நிருபிக்கப்பட்டிருக்கிறது.

60ம் ஆண்டுகளில் குருச்சேவ் அதிகாரத்திற்கு வந்து, திரிபுவாதத்தை புகுத்திய போது உலகம் முழுவதிலும் இருந்த முதலாளித்துவவாதிகள் கம்யூனிசம் தோற்றுவிட்டது, மார்க்சியம் தோற்றுவிட்டது என்று கூரைமேல் நின்று மகிழ்ச்சியுடன் கூச்சல் இட்டார்கள். அதே நேரத்தில் திரிபுவாதிகள் இதுதான் மார்க்சிச வழி, கம்யூனிசம் என்றும் பிரச்சாரம் செய்தார்கள். குருச்சேவின் திரிபுவாதத்திற்கு எதிராக மாவோ நடத்திய மாபெரும் விவாதத்தில்; மார்க்சிசம் வெல்லப்பட முடியாதது என்றும், கம்யூனிசத்தின் வெற்றி தடுக்கப்பட முடியாதது என்றும், குருச்சேவின் திரிபுவாதம் முதாலாளித்துவ சித்தாந்தமே தவிர மார்க்ஸிசம் அல்ல என்றும் மாவோ நிருபித்துக் காட்டினுர்.

இன்று ரசியாவில் கோர்பர்சசேவும், சீனத்தில் டெங்சியாவோபிங்கும் மேற்கொண்டிருக்கும் அதிவேக முதாலாளித்துவ மீட்சி சீர்திருத்த நடவடிக்கைகளைப் பார்த்து முதலாளித்துவவாதிகள் மார்க்சிசம் தோற்றுவிட்டது, கம்யூனிசம் தோற்றுவிட்டது என்று குருச்சேவ் காலத்தைவிட பெரும் கூச்சல் இடுகிறுர்கள். இந்த நேரத்தில் குருச்சேவ் திரிபுவாதத்திற்கு எதிராக மட்டுமின்றி லீயு டெங், கோர்பசேவ் திரிபுவாதத்திற்கு எதிராகவும் போராட்டம் நடத்தப்பட வேண்டும்.

1953ல் ஸ்டாலின் மறைந்தார். 1956ல் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது காங்கிரஸ் கூடியது. இந்த மூன்று ஆண்டுகளில் கட்சியிலும் அரசாங்கத்திலும் முழு அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்ட குருச்சேவ், கட்சியின் இருபதாவது காங்கிரசில்; உலக நிலைமையில் "புரட்சிகர மாற்றங்கள்" ஏற்பட்டுள்ளன என்ற காரணம் கூறி "பாரளுமன்றபாதை" மூலமாக சோசலிசத்திற்கு அதையான முறையில் மாறிச் செல்வது என்ற திரிபுவாதக் கோட்பாட்டை முன்வைத்தார். பல்வேறு சமுதாய அமைப்பைக் கொண்ட நாடுகளுடன் சமாதான சக வாழ்வு என்ற சரியான லெனின் கோட்பாட்டை மாற்றி "மூன்று சமாதானக் கொள்கைகள்" என்ற திரிபுவாதக் கோட்பாட்டை முன்வைத்தார். சமாதான சக வாழ்வை ரசியாவின் வெளிநாட்டுக் கொள்கையின் பொதுவழியாக அறிவித்தார். இதன் மூலம் சோசலிச நாடுகளில் பரஸ்பர உதவி, ஒத்துழைப்பு, ஒடுக்கப்பட்ட நாடுகளின் மக்களின் பேராட்டங்களுக்கு உதவி என்ற வெளிநாட்டுக் கொள்கையை புறக்கணித்தார். இவை எல்லாவற்றையும் சமாதான சக வாழ்வு என்று கொள்கையின் கீழ் கொண்டு வந்தார். மேலும் ஸ்ராலின் தவறுகளை விமர்சிப்பது என்ற பேரில் அவருடைய சாதனைகளை தாக்கி இழிவுபடுத்தினுர்.

1957 நவம்பரில் சோசலிச நாடு களைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் மாநாடு மாஸ்கோவில் நடைபெற்றது. இதில் ரசியக் கம்யூனிஸ்ட் கட்சி வைத்த நகல் அறிக்கை முற்று முழுக்க அதன் 20 வது காங்கிரசில் திரிபுவாதக் கோட்பாடுகளேயே கொண்டிருந்தது. மாவோ தலைமையில் கலந்து கொண்ட சீனக் கட்சியின் பிரதிநிதிக் குழுவும் பிற சகோதரக் கட்சிகளும் அவ் அறிக்கையின் திரிபுவாதக் கோட்பாடுகளுக்கு எதிராக போராடினர். இதன் விளைவாக "பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பது புரட்சியின் தொடக்கம் தானே தவிர முடிவல்ல. முதலாளியமா, சோசலிசமா எது வெல்லும் என்ற பிரச்சனை தீர்க்கப்பட நீண்ட காலமாகும்" என்பது போன்ற சரியான கருத்துக்களும் சேர்க்கப்பட்டன. மேலும் முதலாளித்துவத்தில் இருந்து சோசலிசத்திற்கு அமைதி வழியில் அல்லாத மாற்றம் பற்றிய கருத்து க்களும் சேர்க்கப்பட்டன.

எனினும் ரசியக் கட்சியின் தலைவர்கள் பிரகடனத்தில் சேர்க்கப்பட்ட நிலைப்பாடுகளை பின்பற்றுகின்றவர்களாக இல்லை. தொடர்ந்தும் போரில்லாத உலகம், ஏகாதிபத்தியங்களின் நல்லெண்ணம் அமைதி வழி மாற்றம் பற்றிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்துக்களையே பரப்பிவந்தன. இதனுல் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் ஏற்பட்ட குழப்பத்தைக் களைவதற்காக சீனக் கட்சி, ரசியக் கட்சியின் தவறான கருத்துக்களை விமர்சித்து "லெனினியம் நீடூழி வாழ்க", மற்றும் இரண்டு கட்டுரைகளையும் 1960 ஏப்பரலில் வெளியிட்டது.

விரிவான நலம் கருதி இக் கட்டுரைகளில் ரசியக் கட்சியின் பெயர் குறிப்பிட்டு விமர்சிப்பதை சீனக் கட்சி தவிர்த்திருந்தது. ஆனுல் ரசியக் கம்யூனிசக் கட்சியின் அணுகுமுறை வேருக இருந்தது. கட்சிகளுக்கு இடையிலான முரண்பாட்டை அது அரசு மட்டத்துக்கு உயர்த்தியது. 1957ல் ரசியாவுக்கும் சீனுவிற்கும் இடையில் உருவான தேசிய பாதுகாப்புக்கான தொழில் நுட்ப ஒப்பந்தத்தை தன்னிச்சையாக கிழித்தெறிந்தது; அணுகுண்டு தொழில் நுட்ப விபரங்களையும், மாதிரியையும் சீனத்துக்கு அளிக்க மறுத்தது. ரசியாவும், சீனுவும் இரு நாடுகளின் நட்புறவுக்காக வெளியில் விடுவதென தீர்மானித்திருந்த பத்திரிகைத் திட்டத்தை ரத்துச் செய்தது. மேலும் சீனத்தில் பணியாற்றி வந்த எண்ணற்ற ரசிய தொழில் நுட்ப வல்லுனர்கள் அனைவரையும் தன்னிச்சையாக திரும்பப் பெற்றுக் கொண்டதுடன் அது சம்பந்தமான ஒப்பந்தங்கள் அனைத்தையையும் ரத்து செய்தது.

1960ல் புகாரேஸ்டில் கூடிய சகோதரக் கட்சிகளின் கூட்டத்தில் சீனக் கட்சியை வரட்டு வாதிகள், இடதுசாரித் தீவிரவாதிகள், பிளவுவாதிகள், போலிப் புரட்சியாளர்கள், பைத்தியக்காரர்கள், யுத்த வெறியர்கள், டிராஸ்கிய வாதிகள் என்றெல்லாம் அவதூறு பொழியும் கடிதம் ஒன்று சுற்றுக்கு விடப்பட்டது.

1961ம் ஆண்டு நடந்த இருபத்திரண்டாவது காங்கிரசில் குருசேவ் திரிபுவாதிகள் 20ம் காங்கிரசின் திரிபுவாதக் கொள்கைகளுடன் "அனைத்து மக்கள் அரசு", "அனைத்து மக்கள் கட்சி" என்ற திரிபுவாதக் கோட்பாடுகளையும் சேர்த்துக் கொண்டனர். 22வது காங்கிரஸ் திட்டம் முதலாளித்துவத்தை பாதுகாக்கின்ற முதலாளித்துவத்தை மீண்டும் கொண்டு வருகின்ற திட்டம் என்று சீனக் கம்யூனிஸ்ட்கட்சி தலைவர்கள் ரசியக் கம்யூனிஸ்ட்கட்சி தலைவர்களிடம் நேரிலே விமர்சித்தனர். ஆனுல் குருசேவ் இவ்விமர்சனங்களுக்கு செவி மடுப்பவராக இல்லை. இந்த நேரத்தில் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமையைப் பேணவேண்டுமென்ற நோக்கத்துடன் வியட்நும், இந்தோனுசிய, நியுசிலாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்த சகோதரக் கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டத்தை கூட்ட வேண்டுமென்ற யோசனையையும், சீனக் கட்சி முன்வைத்த ஐந்து ஆலோசனைகளையையும் ரசியக் கட்சி நிராகரித்துவிட்டது. மேலும் சீனுவுக்கு எதிராக இந்தியா மேற்கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் ரசியா இந்தியாவை ஆதரித்ததுடன் அதற்கு ஆயுத உதவியும் அளித்தது.

ரசியாவின் திருத்தல்வாத நிலைப்பாடுகளை எதிர்த்து சீனக் கட்சி பகிரங்கமாக ஒன்பது விமர்சனக் கட்டுரைகளை வெளியிட்டது. அவை மாக்சிசக் கோட்பாடுகள் மீது குருசேவ் கும்பல் தொடுத்த தாக்குதலை முறியடிக்கின்றன. யுகோஸ்லாவியாவின் திரிபுவாத டிட்டோ துரோகக் கும்பலால் முதலாளித்தும் மீட்டமைக்கப்பட்டிருப்பதை நிறுவுவதுடன் சமாதான சக வாழ்வு பற்றிய லெனினியக் கோட்பாட்டை குருசேவ் கும்பல் திரித்து தனது மேலாதிக்க நோக்கங்களுக்காக முன்வைப்பதை அம்பலப்படுத்துகின்றன. குருசேவ் கும்பலின் வர்க்க சாராம்சம் ரசியாவிலுள்ள சலுகை பெற்ற சுரண்டும் கூட்டமென்பதையும், அதன் திரிபுவாத கோட்பாடு முதலாளித்துவ கோட்பாடு என்பதையும் தெளிவுபடுத்துகின்றன.

இவ்விமர்சனக் கட்டுரை வெளிவந்த சில மாதங்களிலேயே குருசேவ் வீழ்ச்சியடைந்தார். ஒரு ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் பிரஷ்னேவ், கோசிஜின் கும்பல் கட்சியிலும், அரசாங்கத்திலும் குருசேவை விரட்டி விட்டு அதிகாரத்தை கைப்பற்றியது. குருசேவுக்கு பின் அதிகாரத்திற்கு வந்த அதிகாரக் கும்பல் குருசேவின் திரிபுவாதக் கொள்கைகள் எதிலும் மாற்றம் கொண்டு வரவில்லை. குருசேவின் திரிபுவாத பாதையை பின்பற்றியது என்பதோடு அல்லாமல் மேலாதிக்க நோக்கங்களுடன் திட்டமிட்டு செயற்படத் தொடங்கியது. 1970ல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி லெனினியமா? சமூக ஏகாதிபத்தியமா? என்ற கட்டுரை ஒன்றை வெளியிட்டு ரசியா ஒரு சமூக ஏகாதி பத்தியமே என்று பிரகடனப்படுத்தியது.

1957-70 ஆண்டுகளுக்கிடையில் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் நடைபெற்ற மாபெரும் விவாதம் புரட்சி குறித்த இரண்டு பிரச்சினைகளை மையம்கொண்டிருந்தது.

1. பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவது பற்றியது.

(அதாவது தயாராக இருக்கும் முதலாளித்துவ அரசு இயந்திரத்தை நொருக்கி எறிந்து விட்டு பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசை நிறுவுவதா அல்லது பாராளுமன்ற பாதையை பின்பற்றி முதலாளி வர்க்கத்திடம் சரணடைவதா என்பதாகும்.

2. பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றிய பின் பாட்டாளி வர்க்க சர்வாதிகரத்தின் கீழ் வர்க்கப் போராட்டத்தை தொடர்ந்து நடத்தி சமூதாயத்தை கம்யுனிச சமூதாயக் கட்டத்துக்கு வளர்த்துச் செல்லுவதா அல்லது வர்க்கப் போராட்டத்தை கைவிட்டு முதலாளித்துவத்தை மீட்டமைப்பதா என்பதாகும்.)

இந் நூற்றுண்டின் தொடக்கத்தில் இரண்டாம் அகிலத்தின் சந்தர்ப்பவாதிகள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை எதிர்த்தனர். உள்நாட்டு புரட்சி யுத்தத்தை கைவிட்டனர். அதித ஏகாதிபத்தியம், சோசலிசத்தில் காலனியம் நன்மை பயக்கும், உலக யுத்தத்தின் போது தாயகத்தை பாதுகாப்போம் என்ற முழக்கங்களின் மூலம் ஏகாதிபத்தியத்தையும் ஏகாதிபத்தியக் கொள்கைகளையும் ஆதரித்தனர். சோசலிசம் பேசிக்கொண்டே புரட்சி யுத்தத்தை எதிர்ப்பவர்களாகவும் இருந்த இவர்களை சமூக தேசிய வெறியர்கள் என்றும் சமூக ஏகாதிபத்திய வாதிகள் என்றும் லெனின் அடையாளம் காட்டினுர். இரண்டாம் அகிலத்தின் சந்தர்ப்பவாதிகளைப் போலவே 60ம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆண்டுகளின் குருச்சேவ் புரட்டல் வாதிகள் "முதலாளித்துவப் பாரளுமன்றத்தில் பெரும்பான்மை மூலம் பாரளுமன்றத்தை மக்களின் விருப்பத்திற்கான கருவியாக மாற்றுவது. பாரளுமன்ற பாதைமூலம் முதலாளித்துவத்தில் இருந்து சோசலிசத்திற்கு சமாதான முறையில் மாறுவது. போன்ற கோட்பாடுகளை முன்வைத்ததின் மூலம் குருச்சேவ் உள்நாட்டு புரட்சிகர யுத்தங்களை எதிர்த்தார்; பாட்டாளி வர்க்கத்தை முதலாளி வர்க்கத்திடம் சரண் அடையச் செய்தார்.

குருச்சேவின் இத் திரிபுவாதக் கொள்கைகளை எதிர்த்து மாவோ போராடினுர். ஒவ்வொரு நாட்டின் பாட்டாளி வர்க்கமும் தமது சொந்த நாட்டின் புரட்சிகர உள்நாட்டு யுத்தத்தை நடத்த வேண்டியதன் அவசியத்தை மீண்டும் மீண்டும் எடுத்துரைத்தார். உலக மெங்கும் பாட்டாளி வர்க்கம் நடத்தும் புரட்சிகர யுத்தங்கள் மூலம் மட்டுமே ஏகாதிபத்தியங்கள் ஒழிக்கப்பட் முடியும் என்பதை எடுத்துரைத்தார்.

சோசலிசம் என்பது முதலாளியத்துக்கும் கம்யூனிசத்திற்கும் இடையிலான ஒரு கால கட்டம்; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தினுடாக ; புரட்சிகர மாற்றத்திற்கான காலகட்டம் என்று மார்க்ஸ்சும், மடிந்து வரும் முதலாளித்துவத்திற்கும், இளம் பருவத்தில் இருக்கும் கம்யுனிசத்திற்கும் இடையிலான போராட்ட காலகட்டம் என்று லெனினும் எடுத்துக் கூறியிருக்கிறுர்கள். ஆனல் குருசேவ் ரஷ்யாவில் வர்க்கங்களும், வர்க்கப் போராட்டமும் இல்லை யென்றும் அரசும், கட்சியும் அனைத்து மக்களுக்குமானதாக மாறிவிட்ட தென்றும் புரட்டல்வதக் கொள்கையை முன்வைத்தார். இதன் மூலம் உள்நாட்டில் சோசலிசத்தை கைவிட்டு முதலாளித்துவத்தை மீட்டமைப் பவராகவும், அதன் பாதுகாவலரா கவும் இருந்தார்.

இதை எதிர்த்துப் போராடிய மாவோ சோசலிச சமுதாயத்தில் நீண்ட காலத்திற்கு வர்க்கங்களும் வர்க்கப் போராட்டமும், இரு பாதைகளுக்கு இடையிலான போராட்டமும் நீடிக்கும என்றும், எது வெல்லும் சோசலிசமா முதலாளித்துவமா என்பது நீண்ட காலத்துக்கு தீர்மானிக்கப்பட முடியாது என்றும், முதலாளித்துவம் மீட்டமைக்கப்படுவத ற்கான அபாயம் நீடிக்கும் என்றும் எடுத்துரைத்தார்.

லெனினுக்குப் பின் ரஷ்யாவின் சோசலிசக் கட்டுமானத்தில் நிகரற்ற சாதனைகள் நிகழ்த்தியவர் ஸ்ராலின். அவர் உற்பத்திச் சாதனங்களில் தனியுடமை ஒழித்து கூட்டுறவு மயமாக்கத்தை நிறைவேற்றினுர். அதற்கு எதிரான எல்லா முதலாளித்துவப் பாதை யாளர்களேயும் முறியடித்தார். ஆனுல் புதிய நிலைமைகளில் வர்க்க ஆய்வு செய்து பாட்டாளி வர்க்க சர்வா திகாரத்தின் கீழ் வர்க்கப் போராட்டத்தை, புரட்சியை வழி நடத்த தவறினுர். கூட்டுறவு மயமாக்கத்திற்குப் பின்னும் சோசலிச சமூதாயத்தில் தொடர்ந்து வர்க்கப் போராட்டம் தொடர்கிறது. முதலா ளித்துவ மீட்சிக்கான அபாயம் நிகழ்கிறது என்பதை கானத் தவறினுர். ஸ்டாலின் மறைவுக்கு பின் அதிகாரத்துக்கு வந்த குருச்சேவ் சோசலிசத்தில் வர்க்கங்களும், வர்க்கப்பரோராட்டமும் இருப்பதை மறுத்தார். 25ஆண்டுகளில் உற்பத்தியையும், உற்பத்தி சக்திகளேயும் பிரமாண்டமான அளவுக்கு வளர்த்து கம்யூனிச சமூதாயத்தை கட்டிவிடப் போவதாக பகட்டினுர்.

அதே ஆண்டுகளில் சீனத்திலும் இதே போன்ற போக்குகள் வெளிப்பட்டன 1956ல் சீனக்கட்சியின் எட்டாவது காங்கிரசில் லீயுசோஷி சீனத்தில் கூட்டுறவு மயமாக்கம் ஏறக்குறைய நிறைவேற்றப்பட்ட நிலயில் முத லாளி வர்க்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் இடையிலான முரண்பாடு அடிப்படையில் தீர்ந்துவிட்டதென்றும், முன்னேறிய உற்பத்தி உறவுகளுக்கும் பின் தங்கிய உற்பத்தி சக்திகளுக்கும் இடை யிலான முரண்பாடே பிரதான முரண்பாடாக இருக்கிறது என்றும் எனவே உற்பத்தி சக்திகளை வளர்ப்பதே தற்போதைய பிரதான பணி என்றும் அறிவித்தார். இதே கோட்பாடுகளே பின்னர் லின்பியோவாலும், டென்சியாவோ பிங்காலும் முன்வைக்கப்பட்டது உண்மையில் உற்பத்தி சக்திகள் பற்றிய இவர்களுடைய கோட்பாடு முதாலாளித்துவ உறவுகளை புகுத்தும் கோட்பாடாகும். உற்பத்தியை பெருக்குவதற்காக இவர்கள் பொருளாதார ஊக்கம் லாபத்தோடு இணைந்த உற்பத்தி, உற்பத்தியோடு இணைந்த ஊதியம் போன்ற முதலாளித்துவ கோட்பாடுகளையே முன்வைக் கிறுர்கள்.

உற்பத்தி பெருக்கத் திற்காகவும், உற்பத்தி சக்திகளின் வளர்சிக்காகவும் என்ற பெயரில் சோசலிச உற்பத்தி உறவுகளை பின்னுக்குத் தள்ளி முதலாளித்துவ உறவுகளை கட்டமைக்கிறுர்கள். இந்த விஷச் சூழல் இறுதியில் முதலாளித்துவ உறவுகளை உடைத்தெறிந்து மீண்டும் சோசலிச உறவுகளை நிறுவும் புரட்சியின் அவசியத்தை முன் நிறுத்துகிறது.ரசியாவிலும் சீனுவிலும் முதலாளித்துவப் பாதையாளர்கள் அதிகாரத்துக்கு வந்த பின்னர் தொடர்ந்து ஏற்படும் நெருக்கடிகள் காரணமாக மேலும் மேலும் முதலாளித்துவ உறவுகள் விரிவா க்கப்படுவது இந்த உண்மையை புலப்படுத்துவது ஆகும்.

ஆனுல்சோசலிச சமுக அமைப்பில் உற்பத்தி சக்திகளின் தங்குதடை அற்ற வளர்ச்சிக்காக உற்பத்தி உறவுகள் மேலும் மேலும் புரட்சிகரமாக மாற்றி அமைக்கப் படுகின்றன. சோசலிச உற்பத்தி உறவுகளும் சோசலிச ஆண்மிக ஊக்கமுமே இலக்குகளாக வைக்கப் படுகினறன. தொடர்ச்சியான சோசலிசக் கல்வியாலும் கலாச் சாரப் புரட்சியாலும் மக்கள் பயிற்றுவிக்கப் படுகிறுர்கள். இந்த புரட்சிகர மாற்றம் பெரும்பாலும் அமைதிவழி மாற்றமே எனினும் சில சமயங்களில் உற்பத்தி சக்தி கோட்பாட்டாளர்கள் உள்ளிருந்தே அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்டு முதலாளித்துவப் பாதையில் சமூதாயத்தை வழிநடத்த முனையும்போது சோசலிச சமுதாயத்துக்குள்ளாகவே பாட்டாளி வர்க்கம் மீண்டும் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான புரட்சிப் போராட்டமாகவும் இது வெடிக்கும். சீனத்தில் லீயுசோஷி தலைமையை தூக்கி எறிவதற்காக நடத்தப்பட்ட கலாச்சாரப் புரட்சி உண்மையில் பாட்டாளி வர்க்கம் மீண்டும் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காகன புரட்சியாகவே இருந்தது என்பது இதற்கு உதாரணமாகும்.

உற்பத்தி சாதனங்களில் தனியுடமை முறையை ஒழிப்பது; அரசுமுதலாளித்துவம் மற்றும் கூட்டுறவு முறை மூலம், கூட்டுடமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முறைக்கும் அரசுடமை முறைக்கும், நகர்புறத்துக்கும் கிராமப்புறத்துக்கும் இடையிலான வேறுபாட்டையும், மூளை உழைப்பிற்கும் உடல் உழைப்பிற்கும் இடையிலான வேறுபாட்டையும் விவசாயத்திற்கும் தொழிற்துறைக்கும் இடையிலான வேறுபாட்டையும் களைவது; சோசலிசக் கல்வி, கலாச்சாரப் புரட்சி மூலம் மக்களின் சோசலிச உணர்வை வளர்ப்பது இவ்வாறு சோசலிசத்தில் உற்பத்தி உறவுகள் மேலும் மேலும் புரட்சி கரமாக மாற்றப்பட்டு கம்யூனிச சமுதாயம் நிறுவப்படும். இது பாட்டாளி வர்க்க சர்வதிகாரத்தின் கீழ் முதலாளித்துவ வர்க்கத்திற்கும், முதலாளித்துவ பாதைக்கும் எதிரான போராட்டம் இன்றி சாத்தியமற்றதாகும்.

மாவோவின் மறைவுக்குப் பின் சீனத்தில் டெங்சியாவோ பிங்கும், லெனினுலும் ஸ்டாலினுலும் தலைமை தாங்கப்பட்ட ரசியாவில் குருச்சேவின் வாரிசாக கோர்பச்சேவும் மிகத் துரித வேகத்தில் முதலாளித்துவ உறவுகளை விரிவாக்கும் பணியில் ஈடு பட்டிருக்கின்றனர்.

மறுசீரமைப்பு, பகிரங்கப்படுத்துதல், ஜனநாயகப்படுத்துதல் என்றெல்லாம் பெருத்த கூச்சலுடன் கோர்பச்சேவ் செய்து வருவதும், நன்கு நவின மயமாக்கலுக்காக சீனத்தில் டெங்சியாவோ பிங்கும், உற்பத்தியிலும் நிர்வாகத்திலும் முழுவேகத்தில் முதலாளித்துவ உறவுகளை கொண்டு வருகின்றார்கள். இவற்றை பார்த்து உலகம் முழுவதும் முதலாளித்துவ வாதிகள் கூக்குரல் இடுகிறார்கள். குருச்சேவுக்கு அவர்கள் தெரிவித்த மகிழ்சியைவிட கோர்பச்சேவுக்கும், டெங்குக்கும் தெரிவிக்கிறார்கள். கோர்பச்சேவ் மாபெரும் புரட்சியை நிகழ்த்தி இருக்கிறார் என்றும் அவர் மாபெரும் புரட்சியாளர் என்றும் அவருடைய முதலாளித்துவ நடவடிக்கைகளை அவர்களுடைய மொழியில் வர்ணிக்கி றார்கள். உண்மையில் கோர்பச்சேவ் குருச்சேவின் விரிவாக்கம் என்பதற்குமேல் வேறு எதுவும் இல்லை.

குருச்சேவ் முன்வைத்த அனைத்து மக்கள் அரசு, அனைத்து மக்கள் கட்சி, லாபத்துடன் இணைந்த உற்பத்தி , பொருளாதார ஊக்கம், உற்பத்தியுடன் இணைந்த ஊதியம் என்பனவே கோர்பச்சேவின் கொள்கைகளாக இருக்கின்றன. குருச்சேவின் திரிபுவாதக் கொள்கைகள் அனைத்தையும் அப்படியே பின்பற்றும் கோர்பச்சேவ் செய்யும் சீர்திருத்தம் எனபதெல்லாம் உள்நாட்டில் குருச்சேவின் முதலாளித்துவக் கொள்கையால் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியின் காரணமாக மேலும் முதலாளித்துவ கொள்கையை விரிவுபடுத்துவதன்றி வேறல்ல. முதலாளித்துவம் மேலும் முதலாளித்துவ உறவுகளையே உருவாக்கும் என்பது முதலாளித்துவத்தின் பெது விதியே.

ரசியாவின் இன்றைய நிலைமை என்ன? பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும், கட்சியையும் வர்க்கப போராட்டத்தையும் கைவிட்டு கால்நூற்றாண்டிற்கு மேல் ஆகி விட்டது. சீனத்தின் நிலை என்ன? நன்கு நவீன மயமாக்கல் அவர்களுடைய தாரக மந்திரம் என்றும் பாட்டாளி வர்க்க சர்வதிகாரத்தின் கீழ் புரட்சியை தொடர்வது, வர்க்கப்போராட்டத்தை கேந்திரக் கண்ணியாக கொள்வது போன்ற கோட்பாடுகள் தவறானவை என்று பிரகடனப் படுத்திவிட்டார்கள் இந்நிலையில் இந்நாடுகளை சோசலிச நாடுகள் என்று கூறுவது பாட்டாளி வர்க்கத்தை ஏமாற்றுவதே ஆகும்.

சொல்லில் சோசலிசம் செயலில் ஏகதிபத்தியம் என்று சமுக ஏகாதிபதியத்திற்கு விளக்கமளித்த லெனின் இரண்டாம் அகில சந்தர்ப்பவாதிகளை சமூக ஏகாதிபத்திய வாதிகள் என்று அழைத்தார். பாட்டாளி வர்க்கத்தில் இருக்கும் சலுகை பெற்ற பிரிவினர் தொழிலாளி வர்க்க பிரபு குலத்தோர் "உண்மையில் இவர்கள் பாட்டாளி வர்க்கத்தில் இருக்கும் முதலாளி வர்க்கத்தினர், வர்க்க விரோதிகள்" இவர்களிடம் இருந்து தீர்மான கரமாக முறித்துக் கொண்டு அவர்களுடைய சந்தர்ப் பவாதத்தை அம்பலப்படுத்துவதால் மட்டுமே பாட்டாளி வர்க்க புரட்சி இயக்கம் வளர முடியும் எனவும் அவர் சுட்டிக் காட்டினர். குருச்சேவ் கோர்பச்சேவ் திரிபுவாதிகள் ரசியாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் வர்க்கப் போரட டத்தையும் கைவிட்டு விட்டார்கள் என்பதை அவர்களே பிரகடனப்படுத்தி இருக்கிறார்கள். "பாரளுமன்ற பாதை" பற்றிய போதனை மூலம உலகம் முழுவதும் முதலாளித்துவ கம்யூ னிஸ்ட் கட்சிகளை அமைத்து எல்லா நாடுகளின் புரட்சியையும் காட்டிக் கொடுத்து அவற்றின் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களுடன் கூட்டமைத்துக் கொண்டிருக்கிறார்கள். "மூன்று சமாதானக் கொள்கைகள் மூலம் உலக மேலாதிக்கத்திற்கான முழுத்திட்டத்தையும் வகுத்து செயல்படுத்தி வருகிறார்கள். இவர்களுடைய வர்க்க அடிப்படை, சுரண்டும் சலுகைபெற்ற பிரிவு என்றும், அது ரசியாவில் மிகப் பெரிய பரந்துபட்ட மக்களுக்கு எதிரி என்றும் சமுக ஏகாதிபத்தியம் என்றும் மாவோ அம்பலப்படுத்தி இருக்கிறார்

*(இக்கட்டுரை கேடயம் வெளியீடான மாபெரும் விவாதத்தின் முன்னுரையில் இருந்து தரப்படுகிறது. )*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- நூல் வெளியீடு.

# உள்ளும் புறமும்

-செல்வம்-

( அண்மையில் ரொறன்ரோவில் வெளியிடப்பட்ட க.நவத்தின் "உள்ளும் புறமும்" சிறு கதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் பேசப்பட்ட உரை இது. பேசப்பட்ட போது அச் சூழ்நிலையில் சரியாக Present பண்ண முடியாமல் போன தினும் நூல் வெளியீட்டு விழாவிலேயே அந்நூல் பற்றி விமர்சனம் செய்யும் முறை பிழையான மரபு என எண்ணுகின்றேன்.

கனடாத் தமிழரில் இலக்கிய ஆர்வம் உள்ளவர்களுக்கும் தமிழ் பத்திரிகை வாசிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கும் நவம் அவர்களை அறிமுகம் செய்து வைக்கும் அவசியம் இல்லை. ஆகவே விமர்சனமும் இல்லாமல், இச் சிறுகதைகள் தொடர்பாகவும் இச்சிறு கதைகளில் படைத்தவரின் ஆளுமை பற்றியும் மற்றும் கலை இலக்கியம் பற்றியும் சிறிதாக ஏதாவது சொல்லலாம் என எண்ணுகின்றேன்.

ஏழு சிறு கதைகள் தாங்கி அழகான அட்டையுடன் ஒரு கையடக்க பிரதியாக வெளிவந்திருக்கும் புத்தகத்தின் அமைப்பே அதைப் புரட்டிப் பார் எனத் தூண்டும் வண்ணம் அமைந்துள்ளது. தரமான தாளில் அழகான அச்சுப் பதிவில் எழுத்துப் பிழைகள் அற்று பல பேரின் ஒத்துழைப்பில் நவத்தின் உழைப்பு தெரிகின்றது.

உள்ளும் புறமும் அழகாகவே இருக்கின்றது. இங்கு மேலைநாடுகளில் நாவல் இலக்கியம் தோன்றி நூறு வருடங்களின் பின்தான் சிறு கதை இலக்கிய வடிவம் பிறந்தது. தமிழில் நாவல் தோன்றி ஐம்பது வருடம் கழித்தே சிறு கதை ஒரு தனியான இலக்கிய வடிவம் என அங்கீ கரிக்கப்பட்டது. சிறு கதை கைத்தொழில் நாகரீகத்தால் நவீனப்பட்டு வரும் சமூகத்துக்குரிய ஒரு புதிய இலக்கிய வடிவமாகும். 19ம் நூற்றண்டின் ஆரம்ப காலங்களில் மேலைத் தேசங்களில் தோன்றி வளர்ந்த இவ் இலக்கிய வடிவம் ஆங்கிலேயரின் தொடா பினுல் இந்நூற்றண்டின் ஆரம்பத்தில் தமிழில் தோன்றியது. இலங்கையைப் பொறுத்த வரை 1930ம் ஆண்டுகளில் சிறுகதை தோன்றி வளரத் தொடங்கியது.

மௌனி, புதுமைப்பித்தன், லா.சா.அமிர்தம், கு.பா.ரா., எஸ். பொன்னுத்துரை என்பவர்களால் வளம் பெற்ற தமிழ் சிறுகதைகள், இன்னும் சிறு கதை இலக்கியத்தில் உலகில் உன்னத இடத்தைப் பெறவில்லை.

ஈழம், தமிழ் நாடு என்று பிரிந்திருப்பது போல் தமிழ் சிறு கதையும் தமிழ் நாட்டில் ஒரு போக்காயும் ஈழத்தில் இன்னுெரு ஓட்டமாகவும் இருக்கின்றது.

அங்கு கலைகளின் ஊற்றுக் கண்களையெல்லாம் வணிக மனப் பான்மை ஆக்கிரமித்துக் கொள்ள வாசகனுக்கு தீனி போடும் சிறு கதைகளே வாராவாரம் வெளியாகும் வியாபாரச் சஞ்சிகைகளில் நிறைந் துள்ளன. எங்கள் ஈழத்திலோ ஜனரஞ்சகமான வியாபாரப் பத்திரிகைகள் இல்லாததினுலும் பிரச்சினைக்கு முடிவைச் சொல்லுதல் அல்லது பிரச் சினையைச் சொல்லுதல் என்ற முற்போக்கு கொள்கை யுடையவர்கள் என்று தங்களை சொல்லும் படைப்பாளிகள் அதிகமாக இருப்பதாலும் சிறுகதை இலக்கியம் என்பது இலக்கிய மாகவே வலுப் பெற்றது. எஸ்.பொ., தளையசிங்கம், வரதர், யேசுராசா எனற இந்த வட்டத்தில் இல்லாத வர்கள் இருந்தாலும் ஈழத்தின் பிரதான போக்காக முற்போக் காளர்களே இருந்தார்கள்.

நவம் அவர்களின் இந்த ஏழு சிறு கதைகளையும் எடுத்துக் கொண்டால், இந்த ஏழு கதைகளையும் இணைக்கும் மெல்லிய கோடாக யதார்த்தத்தை சூழ்ந்திருக்கும் பொய்க் கோலம் தெரிகின்றது. இந்த ஏழு சிறு கதைகளும் ஒரு புத்தகமாக வெளிவர வேண்டிய அவசியத்தை எனக்கு இது உணரப்பண்ணுகின்றது.

வாழ்க்கை சிக்கலானது. குழப்பம் உறச் செய்வது. திகைப்பூட்டுவது.

---

## தேடலின் பக்கங்கள்..

இப்படியான நிலைப்பாடு உடையவர்களால் பொது எழுச்சி சாத்தியமா?

புலிகளை கண் மூடித்தனமாக எதிர்ப்பவர்கள் பற்றிப் பார்த்தால் குறிப்பாக ஈழ விடுதலை என்று தொடங்கி புலி எதிர்ப்பு என்று குறுகி நிற்கும் இயக்கங்கள். இவ்வி யக்கங்கள் எல்லாம் கொள்கைகளால் வேறுபட்டவர்கள். இவர்களுக்குள் எந்தக் கருத்து உடன்பாடும் இல்லை. புலி என்று ஒரு பொது எதிரிக்கான யுத்தத்தில், ஒற்றுமையாக நின்று ஈழ விடுதலைப் போராட்டத்தை இலங்கை அரசுக்கும், இந்திய அரசுக்கும் விற்றுக் கொண்டிருக்கின்றனர். ஒருவேளை புலிகள் அழிந்து விட்டால் இவர்களால் செய்யப்படுவதற்கு எந்த ஒரு பொது வேலைத் திட்டமோ உடன்பாடோ இல்லை. தவிர அரசுடன் எந்த உடன்பாடு இல்லாத போதும் நிபந்தனையின்றி உதவி செய்கின்றனர். அரசியல் விடயத்தில் புலிகளுக்கு இவர்கள் சளைத்தவர்கள் அல்ல. இவர்களாலும் போராட்டத்திற்கு எதுவும் ஆகுமென்றல் கேள்விக் குறிதான். மாருக இவர்களின் நடவடிக்கைகள் ஏற்கனவே அரசியல் தெளிவற்ற மக்களின் மனங்களில் மனச் சோர்வை ஏற்படுத்தியுள்ளது.

அரசைப் பொறுத்த வரை பேச்சு வார்த்தை என்பது தனது அராஜ கத்தை மறைக்கும் ஜனநாயகப் போர்வையே. இதுவரை தமிழ் மக்களுக்கு என்று எந்த ஒரு அரசியல் தீர்வும் ஏற்படுத்தும் நோக்கம் அரசிடம் இல்லை. ஆனையிறவு யுத்த அழிவுத் துயரினுல் அரசியலின பால் கவனத்தைத்திருப்பிய புலம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போலித் தனங்களால் நிறைந்திருப்பது. அதிகமான கதைகளில் இதையே உணரக் கூடியதாக இருக்கின்றது. விரதம் கதையில் வரும் நல்லான் ஊர்கள் தோறும் இருக்கின்றன். எல்லோரோடும் சமரசமாகி வாழ்க்கையை இழுத்துச் செல்லும் அழகை அழகாக நவம் எழுதுகின்றார். விரதம் கதையில் அருமையாக இருந்து பிஞ்சு மனம் என்னைக் கவர்ந்த இரண்டாவது சிறுகதை யாழ்ப்பாணத்து கிராமத்தை அப்படியே படம் போட்டு கண் முன்னே கொண்டு வருகின்றார்.

"அலை" யேசுராசா ஒரு தடவை "தெணியானைவிட அவர் தம்பி நல்லாய் எழுதுகின்றார்" என்று சொன்னதாக என் நண்பர் ஒருவர் சொன்னார். அது ஏதோ கோபத்தில் சொன்னதல்ல என்று இச்சிறு கதைகளின்மூலம் உணருகின்றேன்.

இன்று எங்கள் காலத்தில் அதாவது காலத்தில் அதாவது எழுபதுகளில் தோன்றிய ஈழத்து எழுத்தாளர்கள் அ. யேசுராசா, குப்பிளான் சண்முகம், ஐ.சாந்தன், அ.வெ. முருகபூபதி, திக்குவெல்லை கமால், டானியல் அன்ரனி, அன்ரினி சேவியர், சிறிதரன், சட்டநாதன், தெணியான், உமா வரதராசன் இன்னும் சிலர் குறிப்பிடத்தக் கவர்கள். இச்சிறுகதைத் தொகுப்பின் மூலம் இந்தப் பட்டியலில் முன் வரிசையில் வரவேண்டும்.

எழுபதுகளில் கதை எழுபவனுக்கு ஒரு சௌகரியம் இருந்தது. ஒரு சிரமும் இருந்தது. 70களில் கதை எழுதுபவன் புதுமைப்பித்தனுக்கும், ஜானகிராமனுக்கும், மௌனிக்கும், பின்னால் வந்தவன். இவர்கள் சிறுகதையென்ற இலக்கிய உருவத்தை தமிழுக்கு ஏற்படுத்திக் கொள்ள செய்தவர்கள். இவர்களின் வெளிச்சத்தில் இந்த எழுபதுகளின் கதைக்காரர்கள் நடைபோட முடிந்தது. இது ஒரு சௌகரியம். அவர்கள் நடந்த தூரத்தை தாண்டி புதிய பரிணமங்களையும், புதிய எல்லைகளையும், புதிய திசைகளையும் காட்ட வேண்டிய கட்டாயம் இந்த எழுபதுக்காரருக்கு ஏற்பட்டுப் போன சிரமம். இப்படி பிரபஞ்சன் எழுதி வாசிச்ச ஞாபகம். இதை திரு.நவமும் இன்று புதிதாக கனடாவில் எழுதுபவர்களும் உணரவேண்டும்.

இந்தத் தொகுதியில் வந்த கதைகள் எதுவும் சமகாலப் பிரச்சினைகளைப் பிரதிபலிக்காதவை. நவம் அண்மையில் சிறுகதை எழுதி நான் பார்க்கவில்லை. யுத்தத்தின் தாக்கம் புதிய நல்ல எழுத்தாளர்களை உருவாக்கியது. அகதிகளாக நாம் வாழும் பல்வேறு நாடுகளிலிருந்தும் சிலர் நல்லாய் எழுதுகின்றார்கள். அலையில் வந்த ரஞ்சகுமார் எழுதிய "கோசலை" அண்மையில் நான் வாசித்த சிறுகதைகளில் என்னை மிகவும் பாதித்த கதை சொல்லாமல் போகும் புதல்வர்களையும் பெற்ற மனம் படும் பாட்டையும் துயர் விஞ்ச படைத்திருக்கின்றார்

. தேடலில் வந்த ஜோர்ஜ் குருசேவின் "ஒரு நைஜீரிய மூளைசாலி" என்ற சிறுகதை இன்றைய அந்நிய வாழ்வில் போலித்தனத்தை அகங்காரங் கலந்த வார்த்தையில் எழுதுகின்றார். எங்களை அடையாளம் காட்ட இது ஒரு நல்ல சிறுகதை. அப்பிடி இப்பிடி எழுதிக் கொண்டிருந்த குமார் மூர்த்தி தமிழிலில் மிகத் தரமான சிறுகதைகளை எழுதுகின்றார். திரு. நவம் அவர்கள் தொடர்ந்து எழுத வேண்டும். இங்குள்ள நெருக்கடிகள் தெரிந்ததுதான். இந்தச் சிரமங்கள் மத்தியிலும் தொடர்ந்து எழுதினால் தமிழ் படைப்பிலக்கியத்தில் அழியா இடத்தைப் பெறுவார். அதற்கு இத்தொகுப்பு சான்று.

எழுத்தாளர் இலங்கையர்கோனை பழுதாக்கினது விதானைமார். இலங்கையர்கோனை ஜீஏ, விதானைமார் புகழ்வதற்காக "ஐயா உங்கட கதைகள் திறம், திறம்" என்று வாசிக்காமல் சொல்லி அவரை நல்லாய் எழுதாமல் பண்ணி விட்டார்கள் என்று எஸ்.பொ. எழுதி வாசித்திருக்கிறேன்.

அதேபோல் பேசவிட்டதற்காக இல்லாதது பொல்லாததைச் சொல்லி இச் சிறுகதைகள் போல்த் தமிழில் இல்லை மிகத் திறமானவை என்று பொய் சொல்லாமல் தரமான கதைகள் சிறிய பிரச்சினைகளை சிறுகதைக்கான அம்சங்களுடன் அழகாக படைத் திருக்கின்றார். உண்மையில் நவம் தரமான படைப்பிலக்கியவாதி என்று கூறி இன்னும் நல்ல சிறுகதைகளை எழுதி ஈழத் தமிழ் இலக்கியத்தில் அழியா இடம் பெற வேண்டி வாழ்த்தி இடம் பெறுகின்றேன்.

---

பெயர்ந்தோர் மிகவும் தீர்க்கமாக சிந்திக்க வேண்டும். தமிழ் மக்கள் இந்திய்,. இலங்கை அரசிடமோ அன்றி அனைத்து ஈழ விடுதலைஇயக்கங்களிடமோ நம்பிக்கை இழந்திருக்கின்றார்கள

உளவியலாகவோ, உடலியலாகவோ அன்றி ஏதாவவது வழியில் தமிழ் மக்கள் அனைவரும் அகதிகளாகி நிற்கின்றார்கள். போராட்டத்துக்காக இழக்க எதுவும் இல்லை, உயிரைத் தவிர. குரல் கொடுக்க கூட சக்தியின்றி இருக்கும் தமிழ மக்களின் போராட்டத்திற்கு, தமிழ் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி சர்வதேசத்தின நல்லெண்ணத்தையும் பெற புலம்பெயாந்தவர்களும தங்களுக்கான பங்களிப்பைச் செய்ய முன்வர வேண்டும்.

**சமயத்தில்**
**எதிரி கிடைக்காவிட்டால்**
**ஊரில் மனிதர்களும்**
**மின்சாரக் கம்பங்களும்**
**உண்டு.**
**அதுவும் கிடையாத**
**போது**
**நெறி பிறழாத ஒரு**
**தோழனை...**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை




# மேபிள் மர நிழலில்

-தீபா வசந்தன்-

இலைகள் எதுவுமின்றி இளைத்துப்போய்
எலும்புக்கூடாக நின்றது. இலையுதிர் காலத்து
மேப்பிள் மரம்.
வானிலை மாற்றத்தால் இடம் தேடி எங்கிருந்தோ பறந்து
வந்த பறவைக் கூட்டம் ஒன்று ..
எச்சமிட்டும் ... சத்தமிட்டும் கொண்டு...!
இடையிடையே கிடைத்த உணவுப் பருக்கை
களுக்காக ஒன்றையொன்று கொத்திக் குதறி ...
சீ..என்ன பிறப்புகள், இருக்கவந்த இடத்திலயாவது
ஒழுங்காக இருக்காமல் அசிங்கம் பண்ணிக்
கொண்டு ...!

வானத்திலிருந்து ஒரே சீராக விழுந்து படிந்து
கொண்டிருந்த வெண்பனித்துகள்கள் இந்த
முரண்பட்ட பூமியைக்கூட எவ்வளவோ
அழகுபடுத்தின. மலைகள், மடுக்கள், வீதிகள், வீடுகள்
எல்லாம் மென்மையான
பனித்துகள்களின் ஆட்சிக்குள் ...!

உலகில் உண்மையான சமத்துவத்தைக் கொண்டு வர
மறந்த தத்துவங்களை எல்லாம் தோற்கடித்து, ஒரு
வெண்மையான சமத்துவத்தைத் தந்திருக்கும்
இயற்கை!

ஆண்டாண்டு காலமாக இந்த இயற்கையைப் பற்றி
எவ்வளவோ கவிஞர்கள் எழுதியும்கூட ...
இன்னமும் வெல்லப்பட முடியாத இயற்கை ...!

"மாரிப் பனி மழையின் மேகம்
இந்த மாநகரச்சாலை..."

.. சீ சனியன் பிடிச்சதுகள் ... இஞ்சையாவது கொஞ்சம்
நிம்மதியாய் இருப்பம் எண்டு வந்தால் மனுசனை
எழுதவும் விடாமல்..., சும்மா ஒண்டோட ஒண்டு
சண்டை பிடிச்சுக் கொண்டு ...இப்பதானே
சாப்பிட்டதுகள் ...
பேந்து ஏனுக்கும் சண்டை பிடிக்குதுகள் ...

மரத்திலிருந்த பறவைகளில் இரண்டு மூர்க்கமாக
ஒன்றை ஒன்று தாக்கிச் சண்டையிட்டுக கொண்டன.
சில
பறவைகள் கூச்சலிட்டுச் சண்டையை
வேடிக்கை பார்த்தன... வேறு சில வேண்டாம் என
ஒதுங்கியிருந்தன.

சண்டையிட்ட பறவைகளில் ஒன்று மிகவும்
காயப்பட்டுக் களைத்துவிட்டது. அப்படியிருந்தும்
மற்றப்பறவை அதனை விடாமல் தாக்கியது.
இறுதியில் காயம்பட்ட பறவை இரத்தம் சிந்தி நிலத்தில்
வீழ்ந்தபோது.. மற்ற எல்லாப்பறவைகளுமாகச் சேர்ந்து
மீண்டும் அதனைத்தாக்கின. வீழ்ந்த பறவையின் இரத்தம்
அந்த வெண்பனிப் படியலை அழுக்காக்கியது.

தன் சொந்தஇனத்தின் இரத்தம் அந்த அழகை
அழுக்காக்கியதை பற்றி கவலைப்படாமல்... மீண்டும்
எச்சமிட்டுக் கொண்டும், சத்தமிட்டுக் கொண்டும...!
ஆங்காங்கே மேலும் பல கறைகள் ...
ஓ! இது ஒரு தொடர்கதை ...

"என்ன ... கொப்பியும் கையுமாய் இந்தக்
குளிருக்குள்ள இருக்கறிங்கள் ...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவிதை எழுதுகிறிங்கள் போல இருக்கு ..."

அரைவாசிக் கால்களைப் பனியல் புதைத்தபடி ... தோலினுலான குளிராடையும், இரட்டைப் பின்னலுமாக செவ்விந்தியப் பெண்மணிபோல நின்று கொண்டிருந்தாள் வேணி.

"...இந்த இயற்கையின்ர அழகையும் அமைதியையும் ரசிச்சு ... ஒரு கவிதை எழுதுவம் எண்டுதான் வந்தன். ஆனுல் இந்தப் பறவைக் கூட்டம் எங்க எழுத விட்டுது. உங்க பாரும்... எப்பவும் ஒண்டோட ஒண்டு சண்டை பிடிச்சபடிதான்...
இந்த இயற்கையின்ர அழகை ஏன் அதுகளால் ரசிக்க முடியேல்லே ..."

" அதுகள் ரசிக்கிறது இருக்கட்டும். நீங்கள் எப்ப இயற்கையை எல்லாம் .. ரசிச்சுக் கவிதை எழுதத் தொடங்கினிங்கள்? ஞாபகம் இருக்கா ஒரு நாள் நீங்கள் சொன்னது? கவிஞன் எண்டா சும்மா வர்ணனைக் கவிதைகளை எழுதுகிறதை விட்டிட்டு ... தன்னைச்சுத்தியிருக்கிற யதார்த்தத்தைப் பற்றி எழுத வேணும் எண்டு ... ஏன் யதார்த்தமான கவிதைகளில் உங்களுக்கே நம்பிக்கை இல்லாமல் போச்சா ...!"

" ... அப்பிடியெல்லாம் நம்பிக்கை இல்லாமல் போகேல்ல .. ஆனுல் எது யதார்த்தம் என்று அடையாளம் காணமுடியாமல் சில வேளைகளில் குழம்பவேண்டியிருக்கு ..,
ஒரு பொய்யை ஆயிரம் பேர் சேர்ந்து உரக்கச் சொன்னுல் அதுவே வேதமாக மாறிடும் எண்டு சொல்லுவினம் ...
அது போல போலியான சிலவற்றை நாங்கள் எல்லாம் தொடர்ந்து செய்து வரேக்குள்ள ...
அது யதார்த்தமா என்ற குழப்பம் வருகுது.
அது யதார்த்தம் இல்லையென்ருல் அதையே நாங்கள் ஏன் தொடர்ந்து செய்யிறம் என்ற கேள்வி வருகுது...
இதுகளுக்கெல்லாம் விடைகொடுக்கக்கூடிய அறிவு எனக்கில்லே.."

" ஓ ... பழைய காலத்திலமுனிவர்மார் அறிவைத்தேடி இமயமலே போன மாதிரி
நீங்களும் அறிவைத் தேடி இயற்கையை நாடிவந்திருக்கிறிங்கள் போல இருக்கு "

கோடையில் பச்சைப் பசேலென்று பூத்துக் குலுங்கும் செடி கொடிகள் குளிர்காலத்தில் பனியினுல் மூடப்பட்டு .. அதன் களையிழந்து வாடிப் போய்விடும். மனிதனுக்கும் காலநிலே மாறுதல்கள் உண்டு போலும்... துன்பங்களால் மூடப்பட்டு வேணி இப்போது வாடிப் போய்விட்டாள். ஆனுல் அவளுடைய குளிர்காலம் கொடியது ..., நீண்டது .. கோடைக்கான அறிகுறியையே இன்னும் காணவில்லே

கூறிவிட்டுக் கலகலவென்று சிரித்தாள் வேணி ..., அவள் இப்படிச் சிரித்ததைப் பார்த்து எத்தனையோ நாட்களாகிவிட்டன. கோடையில் பச்சைப் பசேலென்று பூத்துக் குலுங்கும் செடி கொடிகள் குளிர்காலத்தில் பனியினுல் மூடப்பட்டு ... அதன் களையிழந்து வாடிப் போய்விடும்.

மனிதனுக்கும் காலநிலே மாறுதல்கள் உண்டு போலும்... துன்பங்களால் மூடப்பட்டு வேணி இப்போது வாடிப் போய்விட்டாள். ஆனுல் அவளுடைய குளிர்காலம் கொடியது ..., நீண்டது. கோடைக்கான அறிகுறியையே இன்னும் காணவில்லே

" அப்படியெல்லாம் ஒண்டுமில்லே வேணி ..,
ஒரு நாளுமே நான் இந்த இயற்கையை இவ்வளவு அமைதியாக இருந்து ரசிச்சது கிடையாது.
எங்கட நாட்டில எவ்வளவோ அழகான இயற்கைக் காட்சிகள் எல்லாம் இருக்கு. ஆனுல் அதுகளின்ர அழகை எல்லாம் நாங்கள் அப்ப ரசிக்கத்தவறி விட்டம். கடலேக் கண்டால் கரையான் எண்டும் .., மரத்தைக் கண்டால் .. தச்சன் எண்டும், மலேயைக் கண்டால் தோட்டக்காட்டான் எண்டும் வர்ணிச்சுத்தானே எங்களுக்குப் பழக்கம். அந்தத் தன்மைகளின்ர தாக்கம் இத்தனே ஆயிரம் மைல்கள் கடந்து இஞ்சை வந்தும் இன்னும் எங்களே விட்டுத்துலேயேல்ல.

நாங்கள் இயற்கையை ரசிக்கத் தவறிவிட்டம்..,
இயற்கையாக வாழத் தவறிவிட்டம்..,
மனிதர்களில் அமைதியையோ, உண்மையையோ காணுறது கடினமாக இருக்கு ...,
ஆனுல் இந்த இயற்கை எவ்வளவு நிதர்சனமாக இருக்கு பாத்தீரா.? இந்த நிதர்சனத்துக்கு அருகில இருக்கும் போதுதான் மனிசனுக்கு உண்மையான அமைதி கிடைக்குது. அந்த அமைதியிலேதான் கற்பனைத்திறன் வளம் பெறுகுது. இது இன்றைக்கு எனக்கு புதுஅனுபவம்..."

நாடியில் கையை ஊன்றியபடி நான் சொல்வதை அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தாள் வேணி. அவளுடைய முகத்தில் எந்தவித உணர்வும் இல்லே. நான் சொல்வதை அவள் ஆமோதிக்கிருளா அல்லது ஏதோ விசரன் அலட்டுகிறன் என்று பேசாமல் இருக்கிருளா தெரியவில்லே ...

"என்ன நான் என்ர பாட்டுக்கு ஏதோ பேசிகொண்டிருக்கிறன் நீர் ஒண்டுமே சொல்லாமல இருக்கிறீர் "

" சீ .. ஒண்டுமில்ல., இயற்கைக்கு அருகில இருந்து உங்கட கற்பனைதிறன் எப்படி வளம் பெற்றிருக்குது எண்டு பாப்பம்... எங்க உங்கட கவிதையை வாசியுங்கோவன்.."

" என்ன கவிஞரே ...
உங்கள் செந்தமிழில் வடிவெடுத்த கானம் என் செவிகளுக்கு எட்டிடுமோ நாளும் .."

அழகு தமிழ் வந்த திக்கை நோக்கித் திரும்பிப் பார்த்தேன் சிரித்தபடி நின்ருர் மகேந்திரன்.

"வாங்கோ..அண்ணை.., என்ன இந்தப்பக்கம்?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"இந்தப் பிள்ளைகள் 'சினே' வுக்குள்ள விளையாட வேணும் எண்டு ஒரே கரைச்சல் அதுதான் கூட்டிக் கொண்டு வந்தனான்...
அதுகளும் பாவம் எவ்வளவு காலம்தான
வீட்டுக்குள்ள சும்மா இருந்து ரி.வியை மாத்திமாத்தி பாத்துக் கொண்டிருக்கிறது.

பேசியபடியே
அருகிலிருந்த தாழ்ந்த மரக்கிளையொன்றில் உட்கார்ந்துகொண்டார்.

மகேந்திரன்.. !

நான் உண்மையாக மதிப்புவைத்திருக்கும் சில மனிதர்களில் ஒருவர். எந்த வயசுக் காரர்களானுலும் சரி அவர்களுடன் எளிதில் சினேகிதமாகிவிடும் சுபாவம்...,
எவருக்குமே தானுகமுன் வந்து உதவி செய்யும் நல்ல குணம்.., இவையெல்லாவற்றுக்கும் மேலாக அவரிடம் துள்ளி விளையாடிய செந்தமிழ்...
இவையெல்லாம் என்னை அவரிடம் இயல்பாகவே சினேகித மாக்கிவிட்டன.

" அது சரி வேணியின்ர பிரச்சினைகள் ஏதாவது சரிவந்ததோ ..."

அக்கறையாகக் கேட்டார் மகேந்திரன்.
ஆனுல் வேணியின் முகம் சட்டென்று மாறியது.
தலையைக் கவிழ்ந்து மௌனமாகிவிட்டாள்.
புரிந்து கொண்டார் மகேந்திரன்...!

" சரி.. இந்த அருமையான இடத்தில இருந்து ஏன் பழைய கதையளை கதைப்பான்...,
உங்கட கவிதையை இடையில நிப்பாட்டிப் போட்டன் போல கிடக்கு எங்க வாசியுங்கோவன் கேட்பம்"

எவ்வளவு இங்கிதம் தெரிந்த மனிதர்...,
எனக்குள் நான் பெருமைப்பட்டுக் கொண்டேன்.
புருவத்தைக் கையால் வருடியபடி, கண்களை சிறிது மூடி கவிதையைக் கேட்கத் தயாராஞர் மகேந்திரன்.
வேணி எங்கோ வெறித்துப் பார்த்தபடி இருந்தாள்.
பறவைக் கூட்டம் இன்னும் அந்த மேப்பிள் மரத்தடியில் கூச்சலிட்டு கொண்டு இருந்தது.
நான் அவற்றை அலட்சியப்படுத்தி என் கவிதையை வாசிக்கத் தொடங்கினேன்.

" மாரிப் பனி மழையின் மேகம் ..,
இந்த மாநகரச் சாலைகளின் ஓரம் ..,
வெண்பனியாய் படிந்துவிட்ட வேகம் ..,
என் கண்களுக்கு எட்டிவிட்ட யோகம் ..,

எலும்பு அதனை உருக்கிவிடும் கூதல் ..,
ஏற்ற உடுபுடவை இல்லையெனில் சாதல்...,
பனி மங்கையவள் பாருடனே காதல் ..,
பார்த்திருக்கும் என் மனதில் ஒரு மோதல் .., "

"ம்.. எதுகை மோனை எல்லாம் பரவாயில்லை.. ஆனுல் வசனங்களில இன்னும் கொஞ்ச உயிரோட்டம் வேணும்..

நீங்கள் விடாமல் எழுதுங்கோ..
அப்பதான் இன்னும் நல்லகவிதைகளை எழுதலாம்.."

அவருடையவிமர்சனத்தை என்றுமே முழுமையாக ஏற்றுக் கொள்ளுபவன் நான்..,
படைப்பாளியை போலியாக புகழாமலும், அதேவேளை குறைகளை அவன் மனந்த ளர்ந்து போகாதளவிற்கு பக்குவமாக சுட்டிக்காட்டி ஆக்க பூர்வமாக விமர் சனம் செய்யும் ஆற்றலும் மகேந்திரனுக்கு உண்டு.

**எங்கட நாட்டில எவ்வளவோ அழகான இயற்கைக் காட்சிகள் எல்லாம் இருக்கு. ஆனுல் அதுகளின்ர அழகை எல்லாம் நாங்கள் அப்ப ரசிக்கத்தவறிவிட்டம். கடலைக் கண்டால் கரையான் எண்டும் .., மரத்தைக் கண்டால் .. தச்சன் எண்டும், மலையைக் கண்டால் தோட்டக்காட்டான் எண்டும வர்ணிச்சுத்தானே எங்களுக்குப் பழக்கம். அந்தத் தன்மைகளின்ர தாக்கம் இத்தனை ஆயிரம் மைல்கள் கடந்து இஞ்சை வந்தும் இன்னும் எங்களை**

"மற்றது தம்பி எங்கடை ஆட்களிலே உள்ள மிகப் பெரிய குறைபாடு என்ன வெண்டால் எங்கட மண்வாசனை உள்ள படைப்புகளில இருக்கிற ஒரு தாழ்வுமனப்பான்மையும் தமிழ் நாட்டில் இருந்து என்ன குப்பைவந்தாலும் அதை கண்மூடித்தனமாக் ஏற்றுக் கொள்ளுகிறதும்தான். அதுக்கு சனங்களை மட்டும் குறைசொல்ல முடியாது. ஏனென்றல் எங்கட இலக்கியவாதிகளும் படைப்பாளிகளும்கூட தமிழ்நாட்டு இலக்கியத்துறையால ஈழத்துஇலக்கியத்துறை பாதிக்கப்படுது என்று காரணம் காட்டி தங்கட படைப்புக்களையும் ஆக்கங்களையும் வெகுவாக குறைச்சிட்டினம். இது எங்கட இலக்கியத் துறைக்கு ஒரு ஆரோக்கியமான நிலைமை இல்லை. ஆகவே எங்கடை படைப்பாளிகள் தங்கட படைப்புக்களை வெளியிடுவதற்கு முயற்சிக்க வேணும். எப்பவும் நாங்கள் வேகமாக ஓடி பந்தயத்தில வெல்லவேணும் என்று நினைக்க வேணுமே தவிர .. எதிராளியின்ர வேகத்தைக் குறைச்சு நாங்கள் வெல்ல வேணும் என்று நினைக்கக் கூடாது.

என்ன தம்பி .. நான் சொல்லுகிறது?

" உண்மைதான் அண்ணை ...., ஆனுல் ஒன்று எங்களில் முழுநேரப் படைப்பாளிகள் சரியான குறைவு. எல்லா எழுத்தாளர்களும் பகுதிநேர எழுத்தாளர்களாகவோ அல்லது பொழுது போக்கு எழுத்தாளர்களாகவோ தான் இருக்கினம். இந்த நிலைமையில உயிரோட்டமான படைப்புக்கள் வெளிவருகிறது சரியான கடினம் எண்டு நினைக்கிறன்."

எமது இந்த உரையாடல் எதிலுமே வேணி கலந்து கொள்ளவில்லை. அவள் ஓரளவு இலக்கிய ஆர்வம் உள்ளவள்தான்... என்றாலும் எனது கவிதையைப் பற்றி ஒரு வரிகூடக் கூறவில்லை. மரக்கிளையில் கூச்சலிட்டு கொண்டிருந்த பறவைக் கூட்டத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண்களில் வெறுப்புத்தெரிந்தது. இந்தப் பறவை கூட்டத்தின் மேல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவளிற்கு என்ன வெறுப்பு...?

அந்தப் பறவைகளின் கூச்சல் இன்னமும் குறைந்த பாடில்லை. எதிரே விளையாடிக கொண்டிருந்த இரு வெள்ளைக்காரக் சிறுவர்கள் கற்களை எடுத்துப் பறவைகளை நோக்கி விட்டெறிந்தனர் அந்த பறவைக் கூட்டம் சிவ்வென்ற வானில் கிளம்பி இரண்டு மூன்று முறை வட்டமடித்து விட்டு மீண்டும் அதே மரக்கிளையில் வந்து அமர்ந்து சத்தமிடத் தொடங்கின....

சீ வெக்கம் கெட்டதுகள்....!
இன்னமும் சரியாக இருளவில்லை. பனிகொட்டுவதும் ஒரளவு நின்றுவிட்டது. தூரத்தே மகேந்திரனின் பிள்ளைகள் விளையாடி முடித்துவிட்டு வந்து கொண்டிருந்தனர்.

"சரி... நான் போட்டு வாறன் நாளைக்குப் பிள்ளையளுக்குப் பள்ளிக்கூடம் வேற.... நீங்களும் வாறீங்களோ...?

"நீங்கள் போட்டு வாங்கோ அண்ணை... நாங்கள் கொஞ்ச நேரம் இருந்து கதைச்சுப் போட்டு வாறம்..."

மகேந்திரன் ஒன்றுமே பேசவில்லை. மெதுவாக எழுந்து சட்டையில் ஒட்டியிருந்த பனித்துகள்களைத்தட்டிவிட்டபடி நடக்கத தொடங்கினுர்..., பிள்ளைகளிரண்டும் ஒடிவந்து முத்தமிட்டு விட்டுத் தந்தையின் பின் நடக்கத் தொடங்கினர். அந்த மைதானத்திலிருந்து வீதி ஆரம்பமாகும் முனைக்குச் சென்றதும் மகேந்திரன் சற்றுத் தாமதித்து... ஒருமுறை எம்மைத் திரும்பிப் பார்த்துவிட்டு மேலும் நடக்கத் தொடங்கினுர். அந்தப் பார்வையின் அர்த்தம் எனக்கு விளங்கவில்லை.

தெளிவாக இருந்த வானத்தில் மெல்ல, மெல்ல இருள் சூழத்தொடங்கியது.

என்னுல் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நான் பலவீனமடைகின்றேனு என என் மீதே எனக்குப் பயம வந்தது. ஏமாற்றங்கள் என்னைவிரக்தியடையச் செய்தன. யதார்த்தமாக வாழவேண்டும் என நினைப்பதால் போலிகளோடு என்னுல் சமரசம் செய்துகொள்ள முடியவில்லை. என்னைச் சூழ்ந்துள்ள பெரும்பான்மையான வர்களால் நான் விளங்கிக்கொள்ளப்பட முடியாதவனுக இருக்கிறேன். எனது கருத்துக்கள் சில நடைமுறைச் சாத்தியமில்லை என்பர் சிலர் ..,
தனிமரம் தோப்பாக முடியாது என்பர் பலர்...,
சமுதாயத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு விடுவாய் என எச்சரிப்பார்கள் சில நெருக்கமான நண்பர்கள்... என்றுலும்கூட போலிகளோடு சமரசம் செய்து கொள்வது என்னுல் முடியாது இருக்கிறது.

இன்று காலையில் நடைபெற்ற சம்பவங்கள் மீண்டும் .., மீண்டும் என் நினைவில் வந்தன. இன்று தைப்பொங்கல். வீட்டிலுள்ளவர்கள் எல்லாம் உற்சாகமாகக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். உறவினர்கள், நண்பர்கள் எனப் பலபேர் வந்திருந்தார்கள். நண்பனெருவன் குடிபோதையில் வந்து அசிங்கம் பண்ணிக் கொண்டிருந்தான். என்றுலும் அருமையானவன் மன்னித்துத்தான் ஆகவேண்டும். இந்த இயந்திர வாழ்விலிருந்து ஒரு சிறு கணமாவது விடுபட்டு எம் நாட்டுச் சூழ்நிலையைச் சிறிது எட்டிப் பார்க்கக் கொள்ளை ஆசை பலருக்கு! வந்திருந்த பெண்கள் எல்லாம் சேலை கட்டி, பூவைத்துப் பொட்டிட்டு அழகாக இருந்தனர். ஆண்கள் சிலர் வேட்டி கட்டி வெட்கப்பட்டுக் கொண்டிருந்தனர். பலகாரங்களின் வாசனை மூக்கைத் துளைத்தது. என் தூரத்துத் தங்கை முறையான சுந்தரி அருமையாகப் பாயாசம் ஆக்கிக்கொண்டிருந்தாள்.

" இஞ்சை அண்ணை .. இந்தக் கசுக் கொட்டையைக் கொஞ்சம் உடைச்சுத் தாங்கோ ...,
வாயில ஒண்டும் போடுறேல்ல...எல்லாம் சாமிக்குப் படைச்சாப் பிறகுதான்.."

## அத்தியாயம் 2

பனி கொட்டுவது நின்று இரண்டு, மூன்று நாட்களாகி விட்டன. வீதியின் ஓரத்தில் வீழ்ந்து கிடந்த பனிப்படியல் வாகனங்களாலும், மனிதர்களாலும் மிதிக்கப்பட்டு ... அதன் அழகிழந்து அசிங்கமாகக் கிடந்தது. அதன் அலங்கோலம் மனிதிற்கு வேதனையைத் தந்தது.

"மண் மீது காதல் கொண்ட வெண்பனிப் பெண்ணே.. நீ.., விண்மீது இருக்கையில்தான் உண் வெண்மைக்கு அழகே"

காரணமில்லாமல் மனதில் ஒரு கவிதை வந்தது. இப்போது எல்லாம் சிறு சிறு வேதனைகளைக்கூட

" இஞ்சை பாரும் மற்ற பொம்பிளயள் எல்லாம் பொங்கல் எண்டவுடன் என்ன மாதிரி சீலை எல்லாம் உடுத்து வந்திருக்கினம்...,
தமிழ் பெட்டையள் எண்டால்
இப்படித்தான் இருக்கவேணும்.."

"வந்திருக்கிற ஆம்பிளயளில நாலைஞ்சு பேர் தான் வேட்டி கட்டியிருக்கினம்.., அப்படியெண்டால் மற்ற ஆம்பிளயள் எல்லாம் தமிழாக்கள் இல்லையே..?

"என்ன..சாமிக்கோ..? கஷ்டப்படுகிறது மட்டும் மனுசன் ஆனுல் படைக்கிறது சாமிக்கே..?"

"கஷ்டப்படுகிறது என்னவோ மனுசன்தான்.... ஆனுல சாமியால தானே நாங்கள் நல்லாய் இருக்கிறம்..."

"ஏன்.சாமியை நம்பாதவன் எல்லாம் என்ன கெட்டே போனுன்? என்னைப்பாரும்...நான் சாமியை நம்பிறதில்லை நான் நல்லாய் இல்லையே ?"

" நீங்கள் நல்லாய்த்தான் இருக்கிறீங்கள்.. ஆனுல் சாமி சமயத்தை நம்பிறதில்லை என்றுல் ஏன் பொங்கல் எல்லாம் கொண்டாடுறீங்கள்...?"
"பொங்கல் சமய விழா என்று ஆர்சொன்னது..?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொங்கல் செய்யிறதின்ர அர்த்தம் தெரியுமே உமக்கு..?
உழவுக்கு உதவி செய்யிற இயற்கைக்கும்,
உழவனுக்கு உதவி செய்யிற மாடு, மனுசன்
எல்லாவற்றிற்கும் நன்றி செலுத்திறத்துக்காக
செய்யப்படுகிற ஒருவிழாதான் பொங்கல்..!
தமிழர்களின்ர
விழாக்களுக்குள்ள
உண்மையான
அர்த்தமுள்ளது
பொங்கல்
ஒன்றுதான். ஆனுல்
நாங்கள் தான்
சாமி இல்லாமல்
ஒண்டும்
செய்யமாட்டமே...,
அது தான்
இதுக்குள்ளேயும்
சாமியைப்
புகுத்திப் போட்டம்.
எங்கட நாட்டில கிறித்தவர்கள், முஸ்லிம்கள் சில
பேர்கூட பொங்கல் கொண்டாடுகிறது நீர்
கேள்விப்படேலேயே...?"

"சும்மா போங்கோ அண்ணை... உங்களோட கதைச்சு
வெல்ல ஏலாது...

"உண்மைதான்... ஏனென்டா நான் சரியானதைக்
கதைக்கிறன்."
உடைத்த கசுக்கொட்டைகளில் ஓரிரண்டை எடுத்து
வாயில் போட்டபடி வெளியேறினேன்.

" உங்க பாருங்கோ சொன்னுப்பிறகும் வேணுமெண்டு
சாப்பிட்டுக் கொண்டு போகுது."

சுந்தரி முணுமுணுத்துக் கொண்டாள்.
வெளியே வேட்டி கட்டிய என் மைத்துனன்
வந்தவர்களுக்கு சந்தனம் கொடுத்துக் கொண்டிருந்தான்.
ஓரிருவர் சந்தனத்தை என்றுமே காணுதவர்கள் போல
பிகு பண்ணிக்கொண்டனர்.

"பரவாயில்லே.... அது ஒண்டும் செய்யாது எடுத்து
வையுங்கோ"

அவர்களுடன் கசமுசப்பட்டுக் கொண்டான் அவன்.
புதிதாக வந்திருந்த ஒரு சிலருக்கு 'வணக்கம்'
சொன்னுன்.

"இது என்ன புதிசா வணக்கம் எல்லாம் சொல்லுறியள்"
வந்திருந்த பெண்மணி ஒருத்தி வியந்து கொண்டாள்.

"ஆ என்ரஅப்பா, தமிழ்தானே அதுதான் வணக்கம்
சொல்லுறன். "
சிறிது குத்தலாகவே சொன்னுன் என் மைத்துனன்.
நான் எனக்குள் சிரித்துக் கொண்டேன். உள்ளே வேணி
வடை சுடும் போது கையையும் சுட்டுக் கொண்டாள்.
அவளுடன் வேலைபார்க்கும் யாரோ ஒருபெண்ணும்
வந்திருந்தாள். அவளின் பெயர்கூடஎன்னவென்று
கேட்கவில்லே நடையுடைபாவனைகளிலிருந்து அவள்
'கயானு' நாட்டைச்சார்ந்த பெண்ணுக இருக்கலாம் என
ஊகித்துக்கொண்டேன் வேணி வடைசுடும் விதத்தை
வியப்புடன் பார்த்துக் கேள்விகள் பல கேட்டபடி
நின்ருள்... கொச்சையாக ஆங்கிலத்தை ஸ்டைலாகக்
கதைக்க முயற்சித்தது பரிதாபமாக இருந்தது.
அண்மையில் தான் கனடாவிற்கு வந்திருப்பாள்
போலும்.., வீட்டிற்கு வந்தவளிடம் கதைக்காமல்
இருப்பது அழகில்லே....

**எங்கட எந்த ஆம்பிளேயளாளுமே எந்த ஒருமாதிரியான மாற்றத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது. தாங்கள் வெளிநாட்டுக்க வந்து குடிக்கலாம், வெறிக்கலாம் வேறு என்ன வேண்டுமானுலும செய்யலாம். அது தவறே இல்லே. ஆனுல் பெம்பிளேயாள் ஏதாவது செய்தால் அது தமிழ் கலாச்சாரத்துக்கே பெரிய இழுக்கு.**

" Hi .... Are you
enjoying the
funcion..?'
"Ya .....Kind of..."
"May I ask your
good name
please...?"
"I am Dani"
"Dani ..? is that
your full name..?
"well...."
அவள் சிறிது
தாமதித்தாள். எதற்கோ அவள் தயங்குவது போல
எனக்குப்பட்டது... என்னவென நான்
ஊகிக்க முயற்சிக்க முன்பு அவளே மேலே
தொடர்ந்தாள்
" No ... my full name is.. Vathani..., Vthani Nadarajah"
வேணி மீண்டும் கையைச் சுட்டுக் கொண்டாள்.

"கவனமாகப் பார்த்துப்போடும் வேணி. எண்ணே
சரியாகக் கொதிக்குதெல்லே.."
தாழியிலிருந்து கொதிக்கும் எண்ணே பயங்கரமாக
உறுமியது. வேணியின் அழகான பட்டுச் சேலேயில்
ஓரிரண்டு எண்ணேத் துளிகள் பட்டு அசிங்கப்படுத்தியது.

"So.. Vathni.. Sorry Dani.. which cuntry are you
from..?"

புருவத்தை மேலே உயர்த்தி என்னே வியப்புடன
பார்த்தாள் அவள்.

"Actually .. Iam from Ceylon."

"Ceylon... which part.?'

"..Jaffna.."

"ஓ... அதுதான் தமிழ் வருகுதில்லே..
யாழ்ப்பாணத்தில இருந்து வந்தால் தமிழ் கதைக்கிறது
கஷ்டம்தானே.."

எமது உரையாடலில் தானகவே புகுந்து கொண்டான்
என் மச்சான்.
"நல்ல காலம் இவளே கயானுப் பெட்டை எண்டு
நினேச்சு ஒண்டும் சொல்லேல்லே..."
நான் எனக்குள் சொல்லிக்கொண்டேன் இவள் வந்த
நேரம் முதல் இவள் எந்த நாட்டுக்காரி என
எல்லோரிடமுமே ஒரே கேள்விக்குறி. அங்கிருந்த அமளி
துமளியில் வேணியும் இவளே அறிமுகப்படுத்தத்
தவறிவிட்டாள் போலும்.

"இஞ்சை... Sorry... நான் சொல்ல மறந்து போனன்.
அண்டைக்குச் சொன்னன் என்ரேடை ஒரு தமிழ் Girl



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

work பண்ணுறு எண்டு... அவ தான் இவ."

இவளைத் தாமதமாக அறிமுகப்படுத்தியதற்காக வேணி மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள்.

"மன்னித்துக் கொள்ளும் வதனி.. இந்த நேரத்தில உது கதைக்கிற விடயமில்லை.... அவனுக்காக நான் மன்னிப்புக் கேட்கிறன்..."

"ஆனுல் இவவைப் பார்த்தால் தமிழ் Girl மாதிரித் தெரியேல்லையே"

முகத்தில் அறைந்தாற் போல் சொன்னுன் என் மச்சான் கொஞ்சம் கூட இங்கிதம் தெரியாதவன். வந்திருந்த பெடி, பெட்டைகள் எல்லாம் இவளை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்து முணுமுணுத்துக் கொண்டனர்.

சமூகத்திஞல் சாகடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு சந்ததியின் பிரதிநிதி...!
சாதி, சமயம், சீதனம், சீர்வரிசை எனற வேலிகளுக்குள் முடங்கி வெளியே வரமுடியாமல்.., வீணுகிப் போகும் பல இள வாழ்க்கைகளின் சோகம்..!
பெற்று வளர்த்த பிள்ளைகளைக் குப்பைகளாக்கி கூவி விற்கும், தந்தைத் தரகர்களிஞல் ஒருவனுடன் சொந்தமாக முடியாமல் இன்னும்...!

"ம்... கொப்பர் அங்க துலாவில.. இது இஞ்சை ..."

சிலர் வெளிப்படையாகவே பேசத் தொடங்கினர். நிலமை சிறிது திசை மாறத்தொடங்கியதை அவதானித்தேன்
தான் விரும்பியவாறு வாழுவதற்கு எவருக்குமே உரிமை உண்டு அதில் நாம் தலையிடமுடியாது.., அதுவும் வீட்டுக்கு விருந்தாளியாக வந்தவளின் தனிப்பட்ட விடயங்களில் தலையிட்டு அவமானப்படுத்துவது நாகரிகமல்ல ஆகவே நான் பேச்சைத் திசைமாற்ற நினைத்தேன்.., ஆனுல் அதற்குள் அவளே....

"ஏன் தமிழ் Girl எண்டா இப்படித்தான் இருக்க வேணும் எண்டு எங்கையாவது எழுதிவைச்சிருக்கே...?"

அவள் பேச்சில் அசல் யாழ்ப்பாண தமிழின் வாடை வீசியது.

" தமிழ் Girl எண்டா இப்படித்தான் இருக்க வேணும் எண்டு ஒருதரும் எழுதி வைக்கேல்லைதான் ஆனுல் எப்படியும் இருக்கலாம் எண்டும் இல்லைத்தான்., இஞ்சை பாரும் மற்ற பொம்பிளயள் எல்லாம் பொங்கல் எண்டவுடன் என்ன மாதிரி சீலை எல்லாம் உடுத்து வந்திருக்கினம்..., தமிழ் பெட்டையள் எண்டால் இப்படித்தான் இருக்கவேணும்.."

"வந்திருக்கிற ஆம்பிளயளில நாலைஞ்சு பேர் தான் வேட்டி கட்டியிருக்கினம்.., அப்படியெண்டால் மற்ற ஆம்பிளயள் எல்லாம் தமிழாக்கள் இல்லையே..?

மிகவும் சர்வசாதாரணமாக கேட்டாள் அவள் அவளிடத்தில் எந்த சலனமுமில்லை.. எதற்கும் தயாரானவள் போல இருந்தாள். என் மச்சான் எதுவுமே பேசவில்லை.

"உது உருப்படுகிற மாதிரித் தெரியேல்லை.." என்றவாறே வெளியேறிவிட்டான்.

"...சீச்சீ... பரவாயில்லை... உது மாதிரியான நக்கல்களை நான் நெடுகலும் கேட்கிறதுதான். எங்கட எந்த ஆம்பிளயளாலுமே, எந்த மாதிரியான மாற்றத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது., தாங்கள் வெளிநாட்டுக்கு வந்து குடிக்கலாம், வெறிக்கலாம், வேற என்ன வேணுமானுலும் செய்யலாம் அது தவறே இல்லை ஆனுல் பொம்பிளயள் ஏதாவது செய்தால், அது தமிழ் கலாச்சாரத்துக்கே பெரிய இழுக்கு..!, இவர்களைப் பார்த்தாவது கொஞ்சம் திருந்திற மாதிரியும் தெரியேல்லை எங்கட ஆம்பிளயளைப் பற்றி வெளியில கதைக்கவே வெட்கமாகஇருக்கு..., நல்ல காலம் நான் இதுகள் ஒண்டோடையும் மாட்டுப்படேல்லை.."

"இஞ்சை பாரும் வதனி.., சும்மா சமூகத்தில உள்ள ஒரு சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிக்கதைச்ச உடனே, எல்லாரும் பெரிய சமூக இயலாளர்களாக வரமுடியாது..., உமக்கு இப்ப எத்தினை ஒரு இருபத்தநாலோ அல்லது இருபத்தைஞ்சு வயசு தான் வரும் அதுக்குள்ள எங்கட ஆம்பிளயள் எல்லாரையும் ஒட்டு மொத்தமாக குற்றம் சாட்டிற அளவுக்கு நீர் என்ன சமூகத்தை முற்றிலும் அறிஞ்சிட்டிரே? எங்கட சமூகத்தில குறைபாடுகள் இருக்கிறது உண்மை. ஆணுதிக்கத்தண்மை இருக்கிறது உண்மை, அதால பெண்கள் பாதிக்க படுகினம் என்றதும் உண்மை, இதுகள் எல்லாம் சீர்திருத்தப்பட வேணும்.., அதை நான் நிச்சயமாக மறுக்கேல்லை. ஆனுல் உம்மைச் சுத்தி நடந்த ஏதாவது நாலு சம்பவங்களை வைச்சுக்கொண்டு, எல்லாரையும் ஒட்டு மொத்தமாகக் குறைசொல்லுறதை என்னுல ஏற்றுக் கொள்ளமுடியேல்லை. இப்ப என்னை எடுத்துக்கொள்ளும், நான் சமூகமாற்றத்தை விரும்புறஆளா? பெண்ணுரிமையைப் பற்றி என்ர கருத்து என்ன? என்ரை குணும்சம் என்ன? எண்டு எதுவுமே உமக்குத் தெரியாது. ஆனுல் வெள்ளைக்காரனைவிடக் கேவலமான ஆள் எண்டு நீர் என்னையும் சேர்த்துத்தான் குறைசொல்லுறீர். நீர் உண்மையிலேயே சமூக மாற்றத்தை விரும்பினுல் ஒருபோதும் சமூகத்தை உம்முடைய எதிரியாக நினைக்க மாட்டீர், சமூகத்தில இருந்து அன்னியப்பட நினைக்க மாட்டீர். மற்றது உம்முடைய தனிப்பட்ட நடவடிக்கைகளையும் விருப்புவெறுப்புக்களையும் நியாயப்படுத்திறத்திற்காக சமூகத்தின்ர குறைபாடுகளை ஒரு சாட்டாகவைச்சிருக்கிறீர் எண்டுதான் நான் நினைக்கிறன். இதுவும் ஒரு குறைபாடுதான் ஆனுல் மற்றதுகளை விடப் பாரதுராமானது மட்டுமலல்ல... சின்னப்பிள்ளைத் தனமானது கூட..."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனது குரல் சிறிது உரத்தே இருந்ததாக எனக்குப் பட்டது. அவளும் அதை அவதானித்திருக்க வேண்டும்... ஆனால் அவளுடைய முகத்தில் எந்த மாற்றமுமில்லை. அதே பழைய அலட்சியப் பார்வைதான். வேணி மட்டும் எம் இருவரையும் மாறி மாறி பார்த்தபடி இருந்தாள். அவள் கண்களில் தெரிந்த சிறுபதட்டம் இச்சம்பாசனையை அவள் விரும்பவில்லை என்பதைக்காட்டியது. வந்திருந்தவர்களின் கவனம் எமது உரையாடலின் பக்கம் இருந்தது. வேறு சிலருடன் பேசிக் கொண்டிருக்கும் பாவனையில் மகேந்திரனும் எமது பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்தார். ஆனால் எவரையும் பொருட்படுத்தாது வதனி பேச்சைத் தொடர்ந்தாள்.

கேட்ட சீதனம் அவ்வளவும் கொடுத்து கலியாணம்
செய்யிற அளவிற்கு வீட்டில வசதியில்ல.
எவனாவது சீதனம் வாங்காமல்
குணத்தை மட்டும் பார்த்து
கலியாணம் செய்யிறனா எண்டு பார்ப்பம் ..?
எட்டுப் பத்து வருசமாக காதலிச்சவனே
கலியாணம் என்டு வரேக்குள்ளே ஆயிரம் காரணத்தைச்
சொல்லி கையை நீட்டிக் கொண்டிருக்கிறான்..,

"சரி.. நீங்கள் இவ்வளவு கதைக்கிறிங்கள் நான் கேட்கிறதுக்கு என்ன பதில் சொல்லுறிங்கள் பாப்பம்.." அவள் சிறிது தாமதித்து சுற்று முற்றும் எல்லோரையும் ஒரு முறை அவதானமாகப் பார்த்துவிட்டு மீண்டும் பேசத் தொடங்கினாள். அவளது கண்கள் எதுவித தயக்கமுமின்றி நேராக எனது கண்களை உற்றுப்பார்த்தது. அதே அலட்சியப பார்வைதான். ஏனோ.. எனக்கு அது பிடித்திருந்தது.

"எனக்கு ஒரு கனேடியன் Boy friend இருக்கு இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறிங்கள்.?

"இதைப்பற்றி நான் என்ன நினைக்கிறது ஒண்டுமே நினைக்கேல்லை..., நீர் விரும்புகிறவரைக் காதலிக்கிறது உம்முடைய தனிப்பட்ட சுதந்திரம். அதில் யாரும் தலையிட முடியாது. நானும் தலையிட விரும்பேல்லை. ஆனால் நீர் இன்னொரு இனத்தவரை காதலிக்கிறதை நியாயப்படுத்துறதுக்காக, எங்கட பெடியள் எல்லாரையும் குறை சொல்லுறதைத்தான் என்னால ஏற்றுக்கொள்ள முடியவில்லை."

"ஆனால் Tamil Boys இன்ர mentality உங்களுக்குத் தெரியாதே... wifeற்கு எந்த Freedom மும் குடுக்கிறதில்லை எப்பவும் சரியான கட்டுப்பாடு.. எதுக்கெடுத்தாலும் சந்தேகம்."

"பொறும் வதனி... உமக்கு எத்தினை தமிழ் பெடியங்களைத் தெரியும்? குறிப்பாக என்னுடைய mentality என்ன எண்டு உமக்கு தெரியுமே? தெரியாது..! எல்லாத் தமிழ் பெடியங்களும் நீர் சொல்லுற மாதிரி குணம்சம் உள்ள ஆட்கள் எண்டு குற்றம் சாட்டிற அளவுக்கு.., உமக்கு எங்கட சமுதாயத்தை முழுக்கவும் தெரியாது. நீர் யாரையாவது காதலிச்சால்... அவரில் உள்ள நல்ல குணத்துக்காக காதலிக்கிறன் என்றோ .. அல்லது எனக்குப் பிடிச்சிருக்கு அதனால காதலிக்கிறன் என்றோ துணிஞ்சு சொல்லும்.., அதில தவறில்லை..,

அதைவிட்டுட்டு நீர்வெள்ளைக்காரனைக்காதலிக்கிறத்துக்கு. .ஏதோ எங்கட பெடியளின்ர பிற்போக்குத்தனம் தான் காரணம் எண்டு சொல்லுறதுதான் பரிதபமாய் இருக்கு. உம்முடைய இந்தக் காதல் ஏதோ ஒரு விதத்தில உம்முடைய மனதையும் உறுத்திக் கொண்டிருக்கு.., அதனால உமக்கு நீரே சமாதனம் சொல்லுறதுக்காக இப்படியான வரட்டு வாதங்களைச் செய்யிறீர் எண்டு தான் நான் நினைக்கிறன். மற்றது இன்னொரு இனத் தவரைக் காதலிக்கிறதோ கலியாணம் செய்யிறதோ பிழை எண்டு நான் சொல்லவரேல்லை. ஆனால் எங்கட சொந்த இனத்தின்ர கௌரவத்தை விட்டுக்குடுத்து..., எங்கட தனித்தன்மையை இழந்து போறதுதான் கேவலமானது. நான் மகாத்மா காந்தியை பின்பற்றுபவனில்லை. என்றாலும் அவர் சொன்ன ஒரு கோட்பாட்டைச் சொல்லுறன். "பிறருடைய கலை.., கலாச்சாரம்.., இலக்கியம் என்ற தென்றலுக்காக உங்கள் வாசற்கதவுகளைத் திறந்து விடுங்கள்... ஆனால் அதுவே புயலாக மாறி உங்கள் சொந்த கலை, கலாசாரம், இலக்கியம் என்பவற்றை அடித்துச் செல்லாமல் பாதுகாப்பதுதான் உங்கள் முதற்கடமை. இதை நான் ஏன் சொல்லுறன் எண்டால்... தன்னுடைய சொந்த இனத்தை மதிக்கத் தெரியாத எவராலும்..., மற்ற எந்த இனத்தையும் மதிக்க முடியாது. நான் இனவாதியில்லை... வதனி!, ஆனால் என்ர இனம், சமூகம்தான் எனக்கு எப்பவுமே பெரிசு.., இலங்கையன் என்றோ, தமிழன் என்றோ என்னைச் சொல்லுறதுக்கு என்றைக்குமே நான் வெட்கப்பட்டது கிடையாது. எங்கட சமூகத்தில உள்ள பிற்போக்குத் தனங்களை நான் அடியோட வெறுக்கிறன் ஆனால் என்னுடைய கோபம் தனிப்பட்ட பிற்போக்கு வாதிகளிலேயே தவிர ஒட்டு மொத்தமான சமூகத்திலயும் இல்லை. ஏனென்றால் மற்ற எந்த சமூகத்திலுமே இல்லாத அளவிற்குப் பெருமைப்படுகிற எத்தனையோ தன்மைகள் எங்கட சமூக்தில இருக்கு... அதனாலதான்!"

"நீங்கள் சொல்லுற மாதிரி.. எந்தப் பெருமைப்படுகிற விடயங்களும் எங்கட ஆக்களில இருக்கிறதாய் எனக்குத் தெரியேல்லை.."

"அப்படியெண்டா உம்மிலகூட எந்தப் பெருமைப்படுகிற விடயங்களும் இல்லை எண்டு சொல்லுறீரே..?"

"ஏன் ... நான் அப்பிடிச் சொல்லுறன்...?"

"ஏனென்டா நீரும் எங்கட சமூகத்தைச் சார்ந்வர்தான்"

"நான் .. அப்பிடி நினைக்கேல்லே .."
வதனி மிகவும் திடமாகச் சொன்னாள். அவளின் இதழ் ஓரத்தில் ஒரு கேலிச் சிரிப்புத் தென்பட்டது. நான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிதானத்தை இழப்பது போல எனக்குள் ஒரு உணர்வு. ஓ.. யாதார்த்தத்தின் நெருடலில்... தன்மானம் தலைகுனிந்து போகிறது. நான் தொடர்ந்து மேலே பதிலளிப்பதா .., வேண்டாமா என எனக்குள்ளே சிறு போராட்டம். அவள் கூறியது அங்கிருந்த அனைவர்க்கும் கேட்கத்தான் செய்தது. எவரும் எதுவுமே பேசவில்லை. அடுப்பில் வெடித்துப் பறக்கும் எண்ணை மட்டும் அங்கிருந்தவர்களின் மனநிலையை எடுத்துக் காட்டியது. மேலே எதுவும் பேசவேண்டாம் என வேணியின் கண்கள் கெஞ்சின... எட்ட இருந்த மகேந்திரன் பெருவிரலை நிமிர்த்துக் காட்டி, விட்டுக் கொடுக்க வேண்டாம் எனச் சைகை செய்தார்.

"உது நிக்கிற கோலத்துக்கு எங்கட எந்தப் பெடியன் கட்டுகிறான்.., அதுதான் உப்பிடிக் குறுக்கால போகுதாக்கும்."

சுந்தரி யாருடனோ முணுமுணுத்தாள். அதைத்தொடர்ந்து சில பெண்களின் சிரிப்பொலி.... விவாதங்கள் மூன்றாம் தரச் சச்சரவுகளாகப் போவது அசிங்கம். அவளிற்கு விளங்குமோ என்னவோ.., எனது மனநிறைவிற்காவது நான் பதிலளித்துத்தான் ஆகவேண்டும்.

"வதனி ... நீர் விரும்பினாலும் சரி .., விரும்பாவிட்டாலும் சரி ..உலகத்தில உள்ள நியதிகள் சிலவற்றை மாற்றவே முடியாது. உமக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக உம்முடைய அப்பா.., அம்மாவை மாற்ற முடியாது..,
நீர் தமிழ்ச்சி என்பதை மாற்ற முடியாது..,
இல்லை உம்முடைய தோல் கறுப்பு என்பதை மாற்ற முடியாது.., பிறப்பில எங்களுக்கு இயற்கையால வழங்கப்பட்ட நியதிகளோட தன்னையும், தன்னைச சார்ந்தவர்களையும் முன்னேற்றி முறையாக வாழுகிறவன்தான உண்மையான மனிதன். நீர் சமூக மாற்றத்தை விரும்புகிறீர்.., அது வரவேற்கக் கூடியது.., ஆனால் எது மாற்றம் என்று தெரியாமல் தடுமாறுகிறீர், அது கவலைக்குரியது...!,
அடக்கு முறைக்கு எதிராக நீர் போராட நினைக்கிறீர்... ஆனால் உண்மையான எதிரி யார் என்று உம்மால இனம் காண முடியேல்லை. 'காகம்' உமக்கு பிடிக்காத பறவை என்பதற்காக கறுப்பான எல்லாவற்றையுமே வெறுக்கிற கண் மூடித்தனமான நிலையில்தான் நீர் இருக்கிறீர். இன்றைக்கு நீர் ஓரளவாவது இப்படி நல்ல நிலைமையில இருக்கிறதுக்கு .. எங்கட சமூகம் கொஞ்சம் கூட உமக்கு உதவி செய்யவில்லை என்று உம்மால சொல்ல முடியுமே..? .. நிச்சயமாக முடியாது! உதாரணத்திற்கு நீர் இஞ்சை கனடாவிற்கு வாறத்திற்கு உம்முடைய அப்பாவோ, அண்ணையோ இல்லாட்டி.., யாரோ சொந்தக்காரர்தான் உதவி செய்திருப்பினம். அவையள் மட்டுமில்லை. வெளிநாட்டில இருக்கிற எங்கட ஒவ்வொரு பெடியளும் தங்கட குடும்பத்துக்கு உதவி செய்யிறதுக்கு இஞ்சை இரண்டு வேலை.., மூன்று, வேலை என்று எவ்வளவு நாயாய்ப் பாடுபடுகிறாங்கள் என்று உமக்குத் தெரியாததில்லை. முதலிலதான் வந்த கடன் அடைக்க வேணும், பிறகு வீட்டுக்காரரின்ர கடன் அடைக்க வேணும்.., சகோதரிமாருக்குச் சீதனம் குடுத்துக் கலியாணம் கட்டி வைக்க வேணும், வீட்டுக்காரரை இஞ்சை கூப்பிட வேணும் என்று மாறி, மாறி தனக்கென்று எதையுமே பெரிசாக அனுபவிக்காமல் வாழ்க்கை முழுக்கப்பாடுபடுகிற தியாகம் நானறிய வேற எந்த இனத்தவனுக்கும் இல்லை;
நல்லவனோ, கெட்டவனோ.., குடிகாரனோ, ஊதாரியோ தன்ர குடும்பத்தைக் கவனிக்காமல் எவனும் விட்டதில்லை. எங்கட பெடியாளாலயும்.. எல்லாத்தையும் விட்டிட்டு.., டிஸ்கோவிற்கு போக முடியும்.., கிழமைக்கொரு பெட்டையோட திரியமுடியும்.., உம்மை மாதிரி வெஸ்ரன் ஸ்டைல் என்று விலாசம் காட்டவும் முடியும். ஆனால் ஒவ்வொருவரும் தான் கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கிறான், உதவி செய்த மனிதரை பெரிசாக மதிக்கிறான், தன்ர பெற்றாரையும் கூடப்பிறந்தவர்களையும் உயிராய் நினைக்கிறான்... அவர்களின்ர எதிர்காலத்தை வளம்படுத்திறதை பெரிதாக நினைக்கிறான். இதே தியாகத்தைத்தான் தாங்கள் எதையுமே அனுபவிக்காமல் எங்கட அப்பா, அம்மா முதலில செய்தவை. இது எங்கட மண்வாசனை உள்ளவனுக்கான விசேட தன்மை., அப்படியான ஒரு சமூகத்திலிருந்து வரேல்ல என்று சொல்லுகிறதுக்கு நீர்தான் வெக்கப்பட வேணுமே தவிர.. சமூகம் வெட்கப்படத் தேவையில்ல. எங்கட குறைபாடுகளைப் பற்றி நீர் கதைக்கிறீர்... ஆனால் எங்கட சமூகத்தில உள்ள மிகப் பெரிய குறைபாடு.., உண்மை மாதிரி சொந்த சமூகத்தையே மதிக்காமல் தூற்றித்திரிகிற ஆட்கள்தான். எங்களுக்கு முன்னாலேயே எங்கட சமூகத்தைப் பற்றி இவ்வளவு கதைக்கிற நீர்.., உம்மோட BOY பிரண்டிற்கு எங்களைப் பற்றி என்னவெல்லாம் சொல்லியிருப்பீர்..!
உலகத்தில எந்த மூலையில வாழ்ந்தாலும் எங்கட சமூகத்தின்ர தனித்தன்மையோட, எங்கட சமூகத்தின்ர முத்திரையோட வாழ்கிறதைத்தான் எந்த மானமுள்ள மனிசனும் விரும்புவான். நீர் என்னதான் இஞ்ச வந்து "இங்கிலிஸ்" கதைச்சாலும்.., உம்முடைய தோல் நிறம் மாறப் போறதும் இல்லை.., இஞ்சை உள்ளவன் சமூக வேறுபாட்டை மறந்து.. உம்மைத் தங்களோட முழுமையாகச் சேர்த்துக் கொள்ளப் போறதுமில்லை. சொல்லப் போனால் உம்மில எனக்குள்ளது அனுதாபமே தவிர கோபமில்லை ...".

எனது வார்த்தைகள்ஒவ்வொன்றும் மிகவும் நிதானமாக வெளிவந்தன. ஏனோ இதயம் சிறிது நொந்தது. நான் மேலே பேச்சைத் தொடர விரும்பவில்லை. முதன் முறையாக வதனியின் கண்கள் நிலத்தை நோக்கின. அவளும் எதுவுமே பேசவில்லை. அவள் நினைப்பதை என்னால் ஊகிக்க முடியவில்லை. மௌனமாக அவ்விடத்தை விட்டு அகன்றேன். பின்னால் வந்த மகேந்திரன் முதுகில் தட்டி புன்முறுவலுடன் சொன்னார்..

"ஆறறிவுள்ளதற்கு இதற்கு மேல விளங்கப்படுத்தத் தேவையில்ல".

பொங்கல் முடிந்து. அனைவரும் வீட்டுக்குச் சென்று விட்டனர். வீடு வெறிச்சோடிக் கிடந்தது. ஊது பத்தியின் வாசனையும் பலகாரங்களின் வாசனையும் நினைவுகளைச் சொந்த மண் நோக்கி ஓடவைத்தன.

மாமரத்தடியில் அப்பா சாய்வு நாற்காலியில் உறங்கிக் கொண்டிருக்கிறார், அம்மா இன்னும் கிணற்றடியில்தான்.. பாத்திரங்களுடன் போராடிக் கொண்டு..., வெடிச் சத்தம் இன்னமும் ஓயவில்லை..., பயத்தினால் வாலைச்சுருட்டிய படி விறகுக்கட்டிற்கு கீழே ஒளிந்திருக்கும் நாய்..,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெடிக்கட்டுகளை கையில் வைத்துக் கொண்டு வீரம் காட்டும் வாண்டுகள்..!

மேலே சிந்திக்க முடியாமல் நினைவுகள் சட்டென்று வெட்டுண்டன. அடிவயிறு ஏனோ அவதிப்பட்டது. யன்னலுக்கு வெளியே கொடிய குளிர்.., எம் நாட்டு வெயிலிலும் காய முடியாமல்.., இந்நாட்டுக் குளிரையும் தாங்க முடியாமல்.., இடையில் நாம்.. சீ.. என்ன கேவலமான வாழ்க்கை...!

"நான் அப்பிடி நினைக்கேல்ல.. " காரணம் இல்லாமல் வதனியின் வார்த்தைகள் நினைவில் வந்தன.
"எங்கட ஆம்பிளையளைப் பற்றி வெளியில கதைக்கவே வெட்கமாக
இருக்குது.."

உலகம் மட்டுமில்ல, எங்கட சமூகமும் விசாலமானதுதான். ஆனுல் நாங்கள்தான் வேலிகளுக்குள்ளேயே வாழ்ந்து பழகிப் போனமே, அதுதான் சமூகத்தையும் எங்களால விசாலமாக பார்க்க முடியேல்லே. நாங்கள் சாதி பார்ப்பம், சமயம் பார்ப்பம், அந்தஸ்து அது இது எல்லாம் பார்ப்பம், ஆனுல் வாறவன் மட்டும் சீதனம் கேட்காமல் முற்போக்காகக் கலியாணம் கட்ட வேணுமென்று எதிர் பார்க்கிறம்.

வெளியே மேப்பிள் மரத்தடியில் ஓயாமல் கூச்சலிடும் அந்தப் பறவைக் கூட்டம். அவற்றிற்கும் சமூகம் உண்டா? சமூக நியதிகள் உண்டா..? நியதிகளை அவை மதிப்பனவா..? அல்லது மறப்பனவா?....
எதுவுமே தெரியவில்லே. திடீரென்று ஒரு பறவை சிறகை விரித்து தனியே வானில் பறக்கத் தொடங்கியது.

<u>*அத்தியாயம் 3*</u>

வேணி
சமூகத்தின் சாக்கடைச் சட்டங்களினுல் சாகடிக்கப்பட்டிருக்கக் கொண்டிருக்கும் ஓராயிரம் பேரில் இவளும் ஒருத்தி...!
இயற்கையின் இயங்கியல் விதியினை எதிரே தள்ளி.., எங்கள் இறைமைகளை கட்டிக் காப்பதற்காய் தன்னைக் காயப்படுத்திக் கொள்பவள்...!
சிறையை உடைக்க சிறகை விரித்தால்.., சிறைக் கம்பிகள் காயம் பட்டு நொந்து போகுமோ எனச் சிந்திப்பவள்...!
இரண்டு வயதில் எழுந்து, நடந்து, பெற்றோர்கள் சுட்டிக் காட்டிய திக்கை நோக்கி இருபதுகளிலும் இன்றுவரை இசை பிசகாமல் நடை போடுபவள்...!
தடுக்கி விழுந்தால்.. தலைவிதி என்றும்..., பிரச்சினை என்றல்.. பிறவிப் பயனென்றும்...,
வேளைவர வேணுமானுல் .. விதி வழிவிட வேணும் என்றும்..!
யார் இவள்...?
தியாகியா...?
அல்லது பத்தாம் பசலியா....?

இவளது எந்த தனிப்பட்ட பிரச்சினைகளையும் விரிவாக நான் அலச விரும்பவில்லே...! ஆனுல் அவள் உதவப்பட வேண்டியவள். நாட்டிற்கும், வீட்டிற்கும் நல்லவளாக இருந்ததால் இன்னும் நாதியில்லாமல்..! இந்த "வேணி" கள் விரக்தியுற்று வெளியே வரும் போதுதான் "வதனி" களாக மாறுமா? இவள் தனிப்பட்ட ஒரு நபரல்ல..,
சாகடிக்கப்பட வேண்டிய சில சமூகவரைமுறைகளினுல் சாகடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு சந்ததியின் பிரதிநிதி...!
சாதி, சமயம், சீதனம், சீர்வரிசை என வேலிகளுக்குள் முடங்கி வெளியே வரமுடியாமல்..., வீணுகிப் போகும் பல இள வாழ்க்கைகளின் சோகம் ..!
பெற்று வளர்த்த பிள்ளைகளைக் குப்பைகளாக்கிக் கூவி விற்றும், தந்தைத் தரகர்களினுல் ஒருவனுடன் சொந்தமாக முடியாமல் இன்னும்...!
வதனி கூறியது சரியா..? எனக்கே சிறிது சந்தேகமாக இருந்தது, இவளுக்கு நான் எப்படி உதவுவது என்றும் எனக்குத் தெரியவில்லே, உன்னுடைய வாழ்க்கையை தேர்ந்தெடுக்கும் உரிமை உனக்கு உள்ளது என நான் உணர்த்த முயற்சித்தாலும் உணரக் கூடிய நிலேயில் அவள் இல்லே..? வேறு நான் என்ன செய்ய முடியும்?

" வேணி.., நண்பன் என்ற முறையில உமக்கு என்ன உதவி வேணுமானுலும் கேளும்.. நான் நிச்சயமாக செய்வன்..."

" நீங்கள் என்ன செய்யிறது.. என்ர விதியை யாரால மாத்த முடியும்..? "

" உந்த விசர்க் கதைதானே வேண்டாம் என்கிறது.., நாங்கள் இப்ப நவீன கம்பியூட்டர் யுகத்தில வாழ்ந்து கொண்டிருக்கிறம். உலகத்தில எத்தனையோ படுபிற்போக்குத்தனமான சமூதாயங்களில கூட, எத்தனையோ புரட்சிகரமான மாறுதல்கள் வந்து கொண்டிருக்குது.., நீர் என்னடா என்றல் இன்னமும் விதி அது இது எண்டு விசர்க்கதை பேசிக் கொண்டிருக்கிறீர். தன்னுடைய வாழ்க்கையை தானே நிர்ணயித்துக் கொள்ள முடியாத ஒருவனுக்கு .., வாழவே தகுதியில்லே என்றுதான் நான் சொல்லுவன்..."

"என்னை இப்ப என்ன செய்யச் சொல்லுகறீங்கள்.. இருபத்தொன்பது வயசு வரைக்கும் கல்யாணம் நடக்கையில்லே எண்றதற்காக யாரையாவது ஒருவனைப் பிடித்துக் கொண்டு ஓடச் சொல்றீங்களே..? நானும் ஒருதரை மனதால விரும்பினனுன்தான். ஆனுல் அது அப்பா அம்மாவிற்கு பிடிக்காது என்று தெரிய வரேக்குள்ளே.., நான் யாருக்கும் வெளியில சொல்லாமல் எனக்குள்ளையே மறைச்சுப் போட்டன். எந்தக் காரணத்திற்காகவும் நான் அப்பா அம்மாவை மனசு நோக வைக்க விரும்பவில்லே. எனக்கு யாரோட கல்யாணம் நடந்தாலும் சரி.. எப்ப நடந்தாலும் சரி.., அது அப்பா அம்மாவின்ர விருப்பத்தோடுதான் நடக்கும்.

" அப்பிடியெண்டால் உம்மடை அப்பா, அம்மா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வளவு காலமாய் என்ன செய்தவை..?"

"அதுகளை ஏன் குறைசொல்லுறீங்கள்...,
அதுகள் எனக்குக் கலியாணம் பேசி அலையாத இடமும் இல்லை.., தேடாத மாப்பிளையும் இல்லை, சாதகம் பொருந்தினால்.. சீதனம் சரிவராது.., சீதனம் சரிவந்தால். .சாதகம் பொருந்ததாது!
கேட்ட சீதனம் அவ்வளவும் கொடுத்து கலியாணம் செய்யிற அளவிற்கு வீட்டில வசதியில்ல. எவனுவது சீதனம் வாங்காமல் குணத்தை மட்டும் பார்த்து கலியாணம் செய்யிறனு எண்டு, பார்ப்பம்..?

எட்டுப் பத்து வருசமாக காதலிச்சவனே கலியாணம் என்டு வரேக்குள்ளே ஆயிரம் காரணத்தைச் சொல்லி கையை நீட்டிக் கொண்டிருக்கிறன்..,
நான் வதனியை மாதிரி எங்கட பெடியள் எல்லாரையும் குறை சொல்ல விரும்பவில்ல..,
ஆனால் நீங்கள் சொல்லுற மாதிரி சீதனம் வாங்காமல் முற்போக்காக கலியாணம் கட்ட இதுவரை எவனும் வந்ததுமில்லை. இதை விதி என்று சொல்லாமல் வேறே என்ன என்டு சொல்லுகிறீங்கள்..?"

" உது விதியில்லை... உங்கட விதண்டாவாதம்.
சீதனப் பிரச்சினை எங்கட சமூகத்திலுள்ள ஒரு மிகப் பெரிய குறைபாடு.., ஆனால் கலியாணங்கள் நடக்காமல் விடுகிறதுக்கு சீதனமும் சாதகமும் மட்டும்தான் காரணமில்லை. சீதன முறையை வளர்க்கிறது சீதனம் வாங்கிறவன் மட்டுமில்லை.., சீதனம் கொடுக்கிற நீங்களும்தான். வாழ்க்கை முழுக்க சந்தோசமாக இருக்கிறதுக்கு.., ஒரு மனதிற்கு பிடித்த, நல்ல குணமுள்ள ஆண்தான் வேணும் என்று நினைத்தால் உம்மை மாதிரி எத்தனையோ பேருக்கு இப்ப கல்யாணம் நடந்து சந்தோசமாக இருந்திருப்பினம். ஆனால் நீங்கள் தேடுறது.. உங்கட வம்சத்தில.., உங்கட குலத்தில அல்லது உங்கட சாதிக்குள்ள உள்ள ஒருவனைத்தான். ஒருவன் பிறந்நததில இருந்து கோயிலுக்கே போகமாட்டான். ஆனால் .. அவனை "இந்து" என்று கிறிஸ்தவர்கள் விரும்பமாட்டினம். இல்லாவிட்டால் கடிறித்தவன் என்று இந்துக்கள் விரும்பமாட்டினம்... எங்கட நடைமுறை வாழ்க்கைக்கு எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாத சில்லறைத்தனமான விடயங்களை தூக்கிப் பிடித்துத்தான் நாங்கள் பெரிய விடயங்களை குழப்பியடிக்கிறனுங்கள். உலகம் மட்டுமில்ல, எங்கட சமூகமும் விசாலமானதுதான். ஆனால் நாங்கள்தான் வேலிகளுக்குள்ளேயே வாழ்ந்து பழகிப் போனமே.., அதுதான் சமூகத்தையும் எங்களால விசாலமாக பார்க்க முடியேல்லை. நாங்கள் சாதி பார்ப்பம், சமயம் பார்ப்பம், அந்தஸ்து அது இது எல்லாம் பார்ப்பம், ஆனால் வாறவன் மட்டும் சீதனம் கேட்காமல் முற்போக்காகக் கலியாணம் கட்ட வேணுமென்று எதிர் பார்க்கிறம். "கேள்வி" இருந்தால்தான் "வழங்கலும்"
இருக்கும் என்ற பொருளியல் விதிப்படி.., மனிசனை மட்டும் மதியாமல் அவனைச் சுற்றி இருக்கிற அந்தஸ்தையும், ஆடம்பரங்களையும் விரும்பேக்குள்ள .. ,மனிசனை விட்டு மற்றதிற்கான கேள்வி அதிகரிக்கிறது. எங்கட சமூகத்தின்ர பிற்போக்கு குணங்களும், பிரச்சினைகளும் ஒன்றோடஒன்று பின்னிப்பிணைஞ்சிருக்கு. அதுதான் எங்களில் உள்ள ஒரு சிறு பிற்போக்குத் தன்மையும் ஒட்டு மொத்தமாக முழு வாழ்க்கையையும் பாதிக்குது. இதில உம்முடைய அப்பா அம்மாவை மட்டும் குறை சொல்லவில்லை. ஏனென்றால் எங்கட சமூகத்திலுள்ளவர்களுடைய பெரும்பான்மையான குணம்சம் இதுதான்."

"என்னவோ நீங்கள் சொல்கிற மாதிரி எல்லாம், என்னால சிந்திக்க முடியவில்லை. நான் நினைக்கிறது எல்லாம், சின்னனில இருந்து எங்களை எவ்வளவோ கஷ்டப்பட்டு வளர்த்து ஆளாக்கின அப்பா, அம்மாவை எந்தக் காரணம் கொண்டும் கண்கலங்க வைக்க கூடாது என்டதால தான். என்னால இஞ்ச தனிய வாழுறது கடினமாகத் தெரியேல்ல. ஆனால் தேவையல்லாத கதையளுக்குள்ளெ அகப்படாமல் வாழுறது தான் முடியாமல் இருக்கு.., என்னைப் பற்றி தேவையில்லாமல் கதைக்கிறதும் யாரோ தெரியாத ஆட்களில்லை. எங்களோட ஒண்டாயிருந்து சிரிச்சு பகிடி விட்டு.., சினேகிதம் எண்டு சொல்லுற சனங்கள்தான் .., அண்டைக்குப் பாக்கேல்லையே... அந்த Parkல் இருந்து கதைச்சதற்கு அந்த ஆள் போய்க் கதைச்ச விசர்க் கதையை; ... நீங்களே ஒரு நாள் சொன்னீங்கள் இஞ்சை எனக்குத் தெரிஞ்ச ஆட்களுக்குள்ளெ மகேந்திரன் கொஞ்சம் முற்போக்கானவர் எண்டு,.., முற்போக்கு குணம்சம் உள்ளவர்கள் எண்டு நினைக்கிற ஆட்களே சின்னப் பிள்ளைத்தனமாக நடந்தால்.. மற்றவர்கள் எப்படி இருப்பினமோ யாருக்குத் தெரியும். சனங்களுக்கு தங்கடபிரச்சினையைத் தவிர மற்றவர்களின் பிரச்சினைகளைத் தூக்கிப் பிடிச்சுக் கதைக்கிறது தான்முக்கியமாய் போச்சு. அது மட்டுமில்லை... ஒருத்தி தனியாக கஷ்டப்படுகிறாளே எண்டு ஒருத்தரும் உதவ வரவேண்டாம். ஆனால் உதவி செய்யிற மனிசரைப் பற்றியாவது கீழத்தரமாகக் கதைக்காமல் இருக்கலாம் தானே. ' சுந்தரி.. சுந்தரி எண்டு வாயொழுக கதைப்பீங்கள்.. ஆனால் அது எங்கட அக்கா முறையான ஒருவருக்கு .. வேலை மெனக்கெட்டுப் போய், இஞ்சையிருந்து என்னைப் பற்றி கடிதம் எழுதியிருக்கு. இதில பரிதாபம் என்னெண்டால், என்னைப் பழிவாங்கிறதாக நினைச்ச தன்னைத்தானே கேவலமாக காட்டியிருக்கு. 'நாய்க்கு நடுக் கடலில போனாலும் நக்குத் தண்ணிதான்' எண்டு சொல்லுவினம், அது மாதிரி.. சில சனத்திற்கு எந்த நல்ல சூழ்நிலையில வாழ்ந்தாலும் அதுகளின்ர அடிப்படைக் குணம்சம் மாறுது. சனங்கள் முற்போக்காக வரவேணும் என்று நீங்கள் அடிக்கடி சொல்லுவீங்கள். ஆனால் நான் சொல்லுறன், முதலில அதுகள் மனிசராக வரவேணும். சுந்தரி அக்காவிற்கு மொட்டைக் கடிதம் எழுதினதைப் பற்றி நான் கொஞ்சம் கூட கவலைப்படேல்ல..., ஏனென்றால ஊர்க்குருவி பருந்தாகாது எண்டு எனக்குத் தெரியும்... ஆனால் மகேந்திரன்..! சீ..! என்னால் நம்பவே முடியேல்ல.. உண்மையிலேயே அவரில எவ்வளவு மதிப்பும் மரியாதையும் வைச்சிருந்தனான்..., ஆனால் என்னை தேவையில்லாமல் இவ்வளவு வேதனைப் படுத்திட்டார்."

" மகேந்திரனைப் பற்றி ஏன் நீர் அப்பிடி நினைக்கிறீர்..., சில வேளை வேறையாரும் உம்மைத் தவறாக நினைக்க கூடாது எண்டு எச்சரிக்கிறதுக்காகவும் அப்பிடிக் கதைச்சிருக்கலாம் தானே.."

"என்னுடைய எதிர் காலத்தில அக்கறை உள்ளவர் எண்டால் சம்பந்தப்பட்ட என்னை நேரே கூப்பிட்டு கதைச்சிருக்க வேணும்..அப்பிடிச் செய்திருந்தால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மையிலேயே எனக்கு அவரில உள்ள மதிப்பும், மரியாதையும் கூடியிருக்கும். அதை விட்டுட்டு.., சும்மா தண்ணி அடிச்சுப் போட்டு தங்களுக்கு கதைக்க கதை இல்லை எண்டிறதுக்காக .. நாலு பேருக்கு முன்னால மற்றவர்களின்ர தனிப்பட்ட விடயங்களைப் பற்றிக் கதைக்கிறதை .. நியாயமானதாகவோ இல்லை நாகரிகமானதாகவோ என்னால எடுத்துக் கொள்ள முடியேல்ல.. "

" வேணி.. முழுமையான மனிதன் எண்டு எவனும் இல்லை.எந்த மனிதனிலேயும்.. ஏதோ ஒரு பலவீனம் இருக்கத்தான் செய்யுது... அந்தப் பலவீனம் அவர்கள் அறியாமலேயே சில வேளைகளில வெளிப்படுகுது .. அப்பிடித்தான் மகேந்திரனும் எண்டு நினைக்கிறன்.., அதே நேரம் அவரிலுள்ள நல்ல குணங்களையோ அல்லது அவர் செய்த உதவிகளையோ மறக்க முடியாது.."

" உண்மைதான் .., நான் இல்லை எண்டு சொல்ல வரேல்ல.ஆனால் ஒருவருடைய பலவீனம் .. மற்றவருடைய வாழ்க்கையை பாதிக்கக் கூடியதாக இருக்க கூடாது...!,
அது சரி எல்லா மனிதர்களிலேயும் ஏதோ ஒரு பலவீனம் இருக்குது எண்டால்.. உங்கட பலவீனம் என்ன..? "

" ஆ.. அது என்னவெண்டு எனக்கே தெரியேல்ல... ஒரு வேளை என்ர பலவீனம் என்னவென்று தெரியாமல் இருக்கிறதுதான் என்ர பலவீனமோ தெரியாது.."
அந்தப் பறவைக்கூட்டம் வானில் பறந்துகொண்டிருந்தது. ஏன் அவை அந்தத் திக்கையே நோக்கிப் பறக்கின்றன.? அந்தத் திக்கை நோக்கி அவற்றைப் பறக்கச் சொன்னது யார்..? ஏனெல்லாப் பறவைகளும் ஒரே உயரத்தில் பறக்கின்றன? அதற்கு மேல் அவைகளால் உயர முடியவில்லையா...? அல்லது உயர முயற்சிக்க வில்லையா..? தம்மை விட உயரமாகப் பறக்கும் பறவைகளைப் பார்த்து அவை சிந்திக்கவில்லையா அல்லது இந்தப் பறவைகளுக்கு இந்த உயரம் தான் என்பது இயற்கையின் நியதியா ..?
நியதிகள் மாற்றப்பட முடியாதவையா..?

" எனக்கு.. ஒரு கவிதை எழுதித் தாறீங்களே..? "

முகத்தில் எந்த உணர்வுமின்றி சாதாரணமாகக் கேட்டாள் வேணி.., அவளுடைய கேள்வி பரிதாபமாக இருந்தது. என்னால் எதுவுமே கூறமுடியவில்லை. இவளைப் பற்றி நான் எதை எழுதுவது ?
நான் எழுதத் தொடங்கினேன் இவளைப்பற்றியல்ல.., இவளைப் போல் ஓராயிரம் வேணிகளைப் பற்றி ...

பெண்ணே..!
உன்னை நான் நிலவுக்கு ஒப்பிடவில்லை.,
ஏனெனில் .. நீ பிரகாசிக்க உனக்கு
இரவல் ஒளி தேவையில்லை ..,

நீ.. சூரியனும் கூட அல்ல
ஏனெனில் .. இரவிலும் நீ
மறைந்து போவதில்லை ..!

ஆண் வர்க்க ஆளுமையின்
அதிகார கற்பனையால் அழைக்கப்பட
நீ .. ஒன்றும் அஃறிணை அல்ல ..!

வர்ணனைகளால் வஞ்சிக்கப்பட்டவளே ..!
கொஞ்சப்பட மட்டுமே ..நீ
கொலு வைக்கப் படுகிறாய்..,

உன் மடியில் உருவெடுத்த மானிடனே..
தன் கொடிய கைகளால் உன்னை
கொடுமை செய்கிறான் ..,

விடியலுக்கு ஒளி கொடுக்க உன்
விழியிரண்டும் போதும்..,
வழியுண்டு பெண்ணே இவ்வையத்தில்..
நீ.. வாழ்வதற்கு ..,

ஆம்..! மறந்து விடாதே..,
மானிடத்தின் மகத்தான
பிறப்பிடம் .. நீ ..!

அந்தக் கூட்டத்திலிருந்த பறவைகளில் சில உயரப் பறக்கத் தலைப்பட்டன.., வானத்தில் உயர உயர, பூமியில் வேலிகள் மறையத் தொடங்கின..., வானுக்கும் பூமிக்கும் இடையேயுள்ள இடைவெளி எவ்வளவு என்று எவருக்கும் தெரியாது..., எம்மால் எட்ட முடிந்த உயரம் தான் வானத்தின் எல்லையோ ..?

## அத்தியாயம் 4

இயற்கையை பற்றி நான் முதன் முதலாக கவிதை எழுதி ஒரு வருடமாகி விட்டது. புராண காலத்துப் பத்தினிப் பெண்ணைப் போல பூமி பயபக்தியுடன் சூரியனை மீண்டும் ஒரு முறை வலம் வந்து விட்டது. அப்பப்பா .. என்ன வேகம் காலவோட்டத்திற்கு என்னால் ஈடு கொடுக்க முடியவில்லை. வெளியே அந்த மேப்பிள் மரம்.. மீண்டும் இலைகள் எதுவுமின்றி இளைத்துப் போய் .. பாவம், இந்த ஒரேமாதிரியான வாழ்க்கை அதற்குச் சலிக்கவில்லையா?
எதிரியை வெல்ல முடியாதவன்.. எதிரியுடன் இணைந்து விடுவதைப் போல..

இயற்கையை வெல்ல முடியாததால் அதனுடன் இசை வாக்கம் அடைந்து விட்டது போலும். அதோ அதன் தனிமைக்கு துணை போகும் அந்தப் பறவைக் கூட்டம். இன்னும் எச்சமிட்டுக் கொண்டும்.., சத்தமிட்டுக் கொண்டும்.., ஆனால் அவற்றின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. மிகுதிப் பறவைகள் எங்கே போயின..?
சுற்றுமுற்றும் பார்த்தேன். ஓ.. அதோ அங்கே இன்னுமொரு மேப்பிள் மரக் கிளையில் அமர்ந்து அழுக்காக்கிக் கொண்டு .., அவைகளுக்குள் என்ன அரசியல் முரண்பாடோ...?

இன்று தைப்பொங்கல். ஆனால் சென்ற வருடத்தைப் போல அல்ல. இன்று ஒரு வேறு மாதிரியான சூழ்நிலை. சுந்தரியில்லை.. வதனியில்லை.. மகேந்திரனில்லை.., பலகாரங்களின் மூக்கைத் துளைத்தது..., வேணியில் மட்டும் எந்த மாற்றமுமில்லை.., அதே பட்டுச் சேலை.. எண்ணை வெடித்துப் பறக்க வெக்கையுடன் போராடி வடை சுட்டுக் கொண்டிருந்தாள். என் மச்சான்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்னும் அதே முரட்டுத்தனம், வந்தவர்கள் சிலருக்கு வற்புறுத்திச் சந்தணம் கொடுத்துக் கொண்டிருந்தான். இம்முறை வேட்டி கட்டிய ஆண்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது. சென்ற முறை குடிபோதையில் வந்திருந்த நண்பன் இம்முறை தன் புது மனைவியுடன் அமர்க்களமாக வந்திருந்தான்..., அப்பப்பா .. எவ்வளவு மாறிப் போய்விட்டான். என்றாலும் பெருமைப்படத்தக்க மாறுதல்..!

இந்த ஒரு வருடத்தில் பல மாறுதல்கள் நடைபெற்று விட்டன. சுந்தரி திருமணமாகி விட்டாள்.., வதனி தன் பழைய காதலனை விட்டு விட்டு வேறு ஒருவனுடன் சுற்றிக் கொண்டிருக்கிறாள். வேணி மட்டும் எந்த மாறுதல்களும் இல்லாமல் தன் பெற்றோரின் அடுத்த நகர்வை எதிர்பார்த்துப் பெருமூச்சுடன் காத்திருக்கிறாள். என்னிலும் பெரிதாக எந்த மாறுதல்களும் இல்லை... என்றும் போல் யதார்த்தத்தை நோக்கி எதிர்நீச்சலிட்டுக் கொண்டு., மகேந்திரன்.., ஒட்டாமலும்.., வெட்டாமலும் சற்று எட்ட இருந்து எம்மை உற்றுப் பார்த்தபடி..,
பழையன பல கழிந்து., புதியன பல புகுந்து.. ஓ..
இதுசாதாரணம்தான்..!

பொங்கல் முடிந்து அநேகமானவர்கள் வீட்டுக்குச் சென்று விட்டனர். உண்டகளை கொண்ட தொண்டர்கள் போல, சிலர் இருந்த இடத்திலேயே சாய்ந்து உறங்கிவிட்டனர்.
யன்னலிற்கு அருகே அமர்ந்து நான் வெளியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். பாழாய்ப் போன நினைவுகள் சொந்த மண்ணை நோக்கி ஒடுகின்றன...!

வேப்பமர நிழலில் அழகாக சாணகத்தால் மெழுகப்பட்ட திண்ணை. சாப்பிட்டகளை தீர.. திண்ணையில் சாய்ந்த படி. சுருட்டு ஒன்றை புகைத்துக் கொண்டிருக்கும் ஆச்சி. சுற்றி வர எதிர் வீட்டுக் கனகம்., அய்யரம்மா.,
புல்லுக்கார லட்சுமி., இளசும் முதுசுமாக இன்னும் பல ஆச்சியின் சினேகிதங்கள்..!

" மெய்யே .. அன்னமுத்து விதானையாற்றை கடைசி ஆரோ "ரக்சி"க்காரனோடை ஓடீயிட்டதாம். கேள்விப்படேல்லையே..? "

"அதுகள் ஒண்டுமே உருப்படேல்ல., மூத்ததை புருஷன்காரன் விட்டிட்டுபோட்டான்., அவனைக் குடிகாரன், ஊதாரி. . எண்டு இவை சொல்லினம். ஆனால் இதுவும் ஒருமாதிரித்தான். என்ன நடந்திச்சோ ஆருக்குத்தெரியும்.."

"ஏன்.. தகப்பன்காரன் என்ன திறமே..?.,
முந்தி அந்த ஆள் கொழும்பில வேலை செய்யேக்குள்ள.. ஆரோ சிங்கள மனிசியோட தொடர்பு எண்டு ஊரே சிரிச்சது..."

"உது என்னடி பிள்ளை புதினம்.., உவன் லொறி வைச்சிருக்கிற செல்வத்தின்ர சங்கதி தெரியுமே..?, அவனும் ஏதோ..." .....

தாமாகவே நியமித்துக் கொண்ட சமூகத்தின் நீதிபதிகள்.., எவர்களைப் பற்றியுமோ., எந்த எதிர் விளைவுகளைப் பற்றியுமோ கவலைப்படாமல் ., எல்லைகளை மீறிச் சென்று கொண்டிருக்கும் அந்த அலசல்கள் .._ நினைவுகள் இருப்பிடம் திரும்பின. எதிரே மேப்பிள் மரக
கிளையில் அந்தப் பறவைக் கூட்டம் ..,
ஒரு பறவை தன் குஞ்சு ஒன்றுக்கு இரையூட்டிக் கொண்டிருந்தது. உணவு வேண்டும் போது கூச்சலிடக் கற்றுக் கொடுத்தது, உணவு கிடைக்கும் போது

# பயணம்

கூக்குரல் சத்தங்கள்
குழந்தையின் அழுகை
குருவியின் அலறல்
நாய்களின் ஊளை
நாட்டில் நடப்பது என்னவோ ?

நேற்றொரு காலையும்
இன்றொரு பகலும்
நாளையொரு இரவும்
எப்படியோ கரைந்தன

செம்பாட்டுப் புழுதியிலும்
களி மண் களியிலிருந்தும்
ஏதேதோ ரணவாடை
எங்கும் பரவிக் கொண்டிருக்கின்றது.

பஞ்சமும் பசியும்
நோயும் துன்பமுமாய்
அவலமும் அவநம்பிக்கையுமாய்
தொடர்கிறது பயணம்

இயலாமையை அகற்றிவிட்டு
இருப்புக்களை உறுதிப்படுத்த
மனவலிமை கொள்ளும்
மாற்றம் ஒன்று தேவை ....!

சகாப்தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முந்தியடித்து பெற்றுக் கொள்ளும் வித்தையைக் கற்றுக் கொடுத்தது. குஞ்சும் தவறாது தாயைப் பார்த்து சகலதையும் கற்றுக் கொண்டது. இனியது அவற்றை தன் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கும். சரியோ... தவறோ.., மாற்றம் வேண்டுமோ .. வேண்டாமோ.., அதைப் பற்றி
அவற்றிற்கு கவலை இல்லை.., இப்படியே எந்த மாற்றமும் இல்லாமல் இன்னும் பல சந்ததிகள் ..!

ஆச்சியின் சினேகிதங்கள் மீண்டும் நினைவில் வந்தன. அந்தக் கூட்டத்தில் எனக்குத் தெரிந்த இன்னும் சிலர் . .

மகேந்திரன், சுந்தரி.., வயது, வாழும் சூழ்நிலை, படிப்பறிவு இவற்றில் அவர்கள் வேறுபட்டாலும்.., குணும்சம் மட்டும்
இன்னும் அதே மண்வாசனையுடன் ..!, இறைமைகளை கட்டிக் காப்பது என்பது இதுதானோ ? இங்கும் அதே இத்துப் போன வேலிகள் .. வெளியிலோ மனோ வேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கும் நவீன விஞ்ஞான யுகம்.., அணுவைப் பிளந்த விஞ்ஞானத்தால் எம்
வேலிகளுக்குள் நுழைய முடியவில்லை..., ஆயிரம் காலத்துப் பயிராயிற்றே அழிப்பது கடினம்தான். எம்மை இனி இந்தச் சூழ்நிலை மாற்றுவிக்கும்..? இன்னும் எழுதப்பட முடியாத எத்தனையோ அசிங்கங்கள் எம்மிடம் .., அத்தனையையும் அரங்கேற்றுவது அதைவிட அசிங்கம்..!

பிரச்சினைகளை பெரிதாக்குவதல்ல நோக்கம்.., தீர்வுகளைத் தீர்மானிப்பதே ..!
படிப்பறிவிருந்தும் .., பாராட்டும் பண்பும் இருந்தும் சில பலவீனங்களால்.., மனதை நோக வைக்கும் மகேந்திரன்.. மெத்தையில் விட்ட நத்தையைப் போல என்றும் குப்பையை நோக்கி ஓடும் சுந்தரி ..! சுதந்திர வாழ்க்கை என்று நினைத்து.., சுடுகாடாகிக் கொண்டிருக்கும் வதனி..!

அதோ .. இலையுதிர்ந்த அந்த மேப்பிள் மர நிழலில் .., எங்கிருந்தோ இளைப்பாற வந்த அந்தப் பறவைக் கூட்டம்.! அதன் எச்சம் பட்டு மேப்பிள் மரம் மெதுவாக வாடத் தொடங்கியது...,

ஆனால் பறவைகளோ...
இன்னும் எச்சமிட்டுக் கொண்டும்...
சத்தமிட்டுக் கொண்டும்....!

ஒரு அகதியின் பாடல்

வ.ஐ.ச.ஜெயபாலன்


ஒரு அகதியின் பாடல்

தேடல் பதிப்பகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net

எரிந்த பிரதேசங்களின் மீது மீண்டும் ஒரு யுத்தமேகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்